

ஜுபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட்
வெளியிடப்போகும் ஓர்
உணர்ச்சிச்சித்திரம்
பானுமதி
நடிக்கும்
பரணி
லைலா
மஜ்னு
தமிழ்
தமிழ்நாட்டுக்கு புதுமையான காதல்
ஜீவனம். இரு உள்ளங்களின் பிணைப்
பைச்சித்தரித்துக்காட்டும் இணையற்ற
காவியத்தின் காட்சிவடிவம்..........
டைரக்‌ஷன்-ராமகிருஷ்ணா
வசனம் S.D.சுந்தரம்

Glaxo

க்ளாக்ஸோ

குழந்தை ஆகாரம்

உறுதியான பற்கள்…
வலுவான தேகக்கட்டு…
தளராத வளர்ச்சி…
சுத்தத்திற்கு உத்தரவாதமும்
பாதுகாப்புமுள்ள இயற்கைப்
பாலுணவான க்ளாக்ஸோ
சாப்பிடுவதால் கிடைக்கிறது…





"உணவு ஊட்ட ஆரம்பிக்கும்போது"

நாளடைவில் குழந்தைக்கு திட உணவு அவசியமாகும். வளர்ச்சிக்கு சுலபமானதும் சுத்தமானதுமான பாரக்ஸைவிட நல்லதும் சௌகரியமானதுமான உணவு வேறில்லை. திட உணவு கொடுக்க ஆரம்பிக்கும் போது சிறிய ஸ்பூன் அளவில் கொஞ்சம் கொஞ்சமாக பாரக்ஸை கொடுங்கள். பாரக்ஸைக் காய்ச்ச வேண்டாம். — சூடான பாலும் சர்க்கரையும் கலந்தால் போதும்.

இந்தியாவில் கூட்டுறவாளர்கள் :
எச். ஜே. பாஸ்டர் & கோ., லிட்., பம்பாய் - கல்கத்தா - மதராஸ்

கோல்கேட்

சுவாசத்தையும் பற்களையும் சுத்தப்படுத்துகின்றது

கோல்கேட் பவுடரோ அல்லது கிரீமோ உங்கள் இஷ்டப்படி வாங்கிக் கொள்ளலாம்

★ உங்களது பற்களைச் சுத்தம் செய்வதுடன் உங்களது சுவாசத்தையும் சுத்தமாக்குகிறது.

★ கோல்கேட்டிலுள்ள மிருதுவான பளபளப்பூட்டும் பொருளானது எனுமலை மிக எளிதாகவும், கேடு விளைவிக்காமலும் பரிபூரணமாகவும், சுத்தப் படுத்துகின்றது.

★ கோல்கேட் ஒரு சிறந்த உயர் ரகப் பொருள். மிருகக் கொழுப்பு அற்றது.

★ பல் வைத்தியர்களால் சிபார்சு செய்யப்படுவது. விலை குறைவு - அதிக நாட்கள் வரும்.





ஆஸ்துமா, மார்ச்சளி இருமல், மூச்சுத் திணறல், 3 நிமிஷங்களில் ஒழிக்கப்படுகின்றன

ஆஸ்துமா, மார்ச்சளி தாக்குதலால் மூச்சுத் திணறி தூக்கமின்றி அவதியுறுகிறீர்களா? அதிகமாக இருமுவதால் பிராணவஸ்தையாக இருக்கிறதா? பலஹீன உணர்ச்சியினால் வேலை செய்ய அசக்தராகவும், குளுமையான வஸ்துக்களையும் உணவுகளையும் சாப்பிட முடியவில்லையா?

எவ்வளவு நாட்களாக உபாதைபட்டு எதை உபயோகித்திருப்பினும் சரி, மெண்டாகோ (Mendaco) ஓர் புதிய நம்பிக்கை அளிக்கும். மயக்க மருந்துகளில்லை, புகை பிடிப்பதில்லை, இஞ்சக்ஷனில்லை, ஆட்டோமைசர் தேவையில்லை. செய்ய வேண்டியதெல்லாம் ருசியற்ற இரண்டு பில்லைகளை சாப்பாட்டின் போது உட்கொள்ள வேண்டியதே. உபத்திரவங்கள் மாயமாக மறைந்து விடும். மூன்றே நிமிஷங்களில் மெண்டாகோ (Mendaco) இரத்தத்துடன் கலந்து வேலை செய்யத் தொடங்கி, கபத்தைக் கரைத்து சிரமமின்றி ஸ்வாசத்தை அபிவிருத்தி செய்து முதல் நாள் இரவே நல்ல நித்திரையை அளித்து விரைவில் பல வருஷங்கள் யௌவன உணர்ச்சியையும் பலத்தையும் பெறுவீர்கள்.

2 வருஷங்களாக ஆஸ்துமா இல்லை

மெண்டாகோ (Mendaco) அநேகமாக உடனே குணமளித்து, ஸ்வாசத்தை இலகுவாக்குவது மட்டுமின்றி எதிர்கால தாக்குதல் ஏற்படாது செய்கிறது. உதாரணமாக ஜே. சி. சர்ட்ஸ், ஹாமில்டன், ஒன்ட்., கனடா, இருமல் மூச்சுத் திணறலால் இரவு தூக்கமின்றி 40 பவுண்டு எடை குறைந்து, இறந்து விடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. மெண்டாகோ (Mendaco) ஆஸ்துமாவை முதல் நாளே நிறுத்தி விட்டது. இரண்டு வருஷங்களில் அவ்வுபாதையே மீண்டும் ஏற்பட்டதில்லை.

பணம் வாபஸ் உத்தரவாதம்

மெண்டாகோ (Mendaco) முதல் வேளை சாப்பிட்டதுமே நேரடியாக ரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ (Mendaco) அதிவிரைவில் வயதில் பல வருஷம் யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்தரவாதத்தின் மீது மெண்டாகோ (Mendaco) உபயோகித்துப் பார்த்து தீர்ப்பளியுங்கள். மெண்டாகோ (Mendaco) சாப்பிட்டபின் பூரண குணம் பெறாது, திருப்தி யளிக்காவிடில் வெறும் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ (Mendaco) வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள். மறுநாள் காலை எவ்வளவு தெம்புணர்ச்சி ஏற்படுகிறதென்பதையும் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

Mendaco

மெண்டாகோ

★ ஆஸ்துமா ★ மார்ச்சளி நோய் ★ ஹே ஜுரம் இவற்றை நிவர்த்திக்கிறது

கல்கி
பொருளடக்கம்

மலர் 9 | இதழ் 8

செப்டம்பர் 25

விரோதி ஆ | புரட்டாசி 9உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 6

என்ன சேதி?

நாணயமாற்று செப்பிடுவித்தை

ஒரு தேசத்தில் சில கோடீசுவரர்கள் சேர்ந்து கொண்டால் எத்தனையோ நன்மைகளைச் செய்யலாம்; அல்லது அந்தத் தேசத்தைத் தங்கள் இஷ்டப்படி ஆட்டியும் வைக்கலாம். வர்த்தகத் துறையில் அவர்கள் எத்தனையோ செப்பிடு வித்தைகள் செய்ய முடியும்.

அது போலவே செல்வ பலம் படைத்த தேசங்கள் சேர்ந்து கொண்டு உலகத்தையே ஆட்டிவைக்கக் கூடிய செப்பிடு வித்தைகளைச் செய்யலாம். உதாரணமாக, சென்றவாரம் பிரிட்டிஷ் சர்க்கார் கைக்கொண்ட ஒரு நடவடிக்கை சில மணி நேரத்திலே உலகம் எங்கும் பெரும் பரபரப்பை உண்டு பண்ணி விட்டது. சர்வதேச நிதி நிலைமையிலும் உலக வர்த்தக நிலைமையிலும் மகத்தான மாறுதல்களைச் சிருஷ்டித்து விட்டது. அதன் பலனாக இந்தியாவிலும் மற்றும் பல நாடுகளிலும் பாங்கிகள், தபால் ஆபீஸ்கள், நாணய மார்க்கெட்டுகள் எல்லாம் நாள் கணக்கில் மூடப்பட்டன.

பிரிட்டிஷ் சர்க்கார் தங்களுடைய நாணயமான ஸ்டர்லிங்கின் டாலர் மதிப்பைக் குறைத்திருப்பதே அத்தகைய பரபரப்புக்குக் காரணம். அதாவது ஸ்டர்லிங்—அமெரிக்க டாலர் நாணயமாற்று விகிதம் மாறியிருக்கிறது. ஏற்கெனவே ஒரு ஸ்டர்லிங்குக்கு நாலு டாலர் மூன்று செண்டாக இருந்தது. இப்போது இரண்டு டாலர் எண்பது செண்டாகக் குறைக்கப் பட்டிருக்கிறது. எனவே, அமெரிக்க சாமான்களுக்கு பிரிட்டன் முன்பு கொடுத்ததைக் காட்டிலும் அதிக விலை கொடுக்க வேண்டும் என்றாகிறது. ஆனால், பிரிட்டிஷ் சாமான்கள் அமெரிக்கர்களுக்கு மலிவாகக் கிடைக்கும். முக்கியமாக அமெரிக்காவுக்கு பிரிட்டனின் ஏற்றுமதி அதிகரிப்பதன் மூலம் பிரிட்டனிலுள்ள தங்கம் கரைவது நிற்கும், பிரிட்டனுக்குத் தேவையாக இருக்கும் டாலர் செல்வம் கிடைக்கும்.

பழைய தொடர்பின் விளைவு

இந்தியாவின் நிதிநிலைமையும் பொருளாதார நிலைமையும் திருப்திகரமாக இருக்குமாயின், பிரிட்டனின் செப்பிடு வித்தை இந்தியாவைப் பாதிக்காது. ஆனால், இருநூறு வருஷங்களாக பிரிட்டனுடன் தொடர்பு கொண்டிருந்த இந்தியாவின் செல்வ நிலைமையும் பொருளாதார நிலைமையும் சீர்குலைந்து கிடப்பதால், பிரிட்டனின் மேற்படி நடவடிக்கை இந்தியாவையும் பாதித்திருக்கிறது. எனவே, பிரிட்டனையும் மற்ற நாடுகளையும்போல் இந்தியாவும் ரூபாயின் டாலர் மதிப்பைக் குறைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறு குறைத்திருப்பது எதற்காக? இந்தியாவுக்கு நன்மை ஏற்படும் என்பதற்காக அல்ல; அதிக தீங்கு ஏற்படாமல் தடுப்பதற்காகத்தான். மற்ற நாடுகள் தங்களுடைய நாணயத்தின் டாலர் மதிப்பைக் குறைத்திருப்பதால், அமெரிக்காவுக்கு மலிவாக சாமான்களை விற்கமுடியும். எனவே, இந்தியாவும் மலிவாக விற்க முன் வந்தாலொழிய உலக நாடுகளின் போட்டியைச் சமாளிக்க முடியாது.

பிரிட்டனின் நடவடிக்கையால் இந்தியா சமாளிக்க வேண்டிய பல புதிய பிரச்னைகளும் எழுந்திருக்கின்றன. ஸ்டர்லிங்கின் டாலர் மதிப்பு குறைந்து விட்டதால், இந்தியாவுக்கு பிரிட்டன் கொடுக்கவேண்டிய ஸ்டர்லிங் கடனைக் கொண்டு அமெரிக்காவிலிருந்து யந்திர வகைகள் போன்ற இன்றியமையாத சாதனங்களைத் தருவிக்கும் சக்தியும் இந்தியாவுக்குக் குறைந்திருக்கிறது. ஆகையால், அமெரிக்காவிலிருந்து மிகவும் இன்றியமையாத யந்திர வகைகளைத் தவிர வேறெதையும் இறக்குமதி செய்வதில்லை என்று இந்திய சர்க்கார் உறுதி கொள்ள வேண்டும். ஸ்டர்லிங் பிரதேசத்திலிருந்து தருவிக்கக்கூடிய யந்திர வகைகளை அமெரிக்காவிலிருந்து தருவிக்காமலும் இருக்க வேண்டும். இவை

போன்ற பல முறைகளையும் இந்திய சர்க்கார் கைக்கொண்டு, பிரிட்டிஷ் சர்க்காரின் நடவடிக்கையால் ஏற்பட்டுள்ள விபரீத நிலைமையை வெற்றிகரமாகச் சமாளிப்பார்கள் என்று நம்புகிறோம்.

பிடிவாதம் தளரவில்லை

சிற்சில விஷயங்களில் மாத்திரம் பர்மா சர்க்கார் முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்டிருக்கிறார்கள் போல் தோன்றுகிறது. சென்ற பல மாதங்களாக அவர்களைக் கதிகலங்கச் செய்து வரும் கரேன் கலகக்காரர்கள் விஷயத்தில் அவர்கள் முன் வைத்த காலை எத்தனையோ தடவை பின்னுக்கு இழுத்துக் கொண்டிருக்கிறார்கள்! ஆனால், பர்மாவிலுள்ள இந்தியர்களின் சொத்துக்களை ஆர்ஜிதம் செய்து கொள்ளும் முயற்சியில் அவர்கள் தங்களுடைய பிடிவாதத்தைச் சிறிதளவும் தளர்த்தவில்லை.

அவ் விஷயமாகச் சென்ற வருஷம் பண்டித ஜவாஹர்லால் நேருவுக்கும் பர்மா மந்திரி யூ வின்னுக்கும் புது டில்லியில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. பிறகு, அந்தப் பிரச்னையைத் தீர்க்க இந்தியப் பிரதிநிதிகள் பர்மாவுக்கு விஜயம் செய்ய வேண்டும் என்று ஏற்பாடாகியிருந்தது. அந்த ஏற்பாட்டை பர்மா சர்க்காரும் வரவேற்றனர். காங்கிரஸ் அக்ராசனரின் தலைமையில் இந்தியப் பிரதிநிதிகள் பர்மாவுக்குப் புறப்பட்டுச் செல்லும் தேதியும் நிச்சயமாயிற்று.

ஆனால், அந்த நிலைமையில் திடீரென்று பர்மா சர்க்கார் எக்காரணம் கொண்டோ மேற்படி ஏற்பாட்டை ரத்து செய்யும்படி கூறிவிட்டனர்.

தாங்கள் ஆர்ஜிதம் செய்து கொள்ளும் நிலங்களுக்கு ஈடுத்தொகையை நிர்ணயிப்பதற்காக பர்மா சர்க்கார் இப்போது ஒரு கமிஷனை நியமித்திருக்கிறார்கள். பர்மா நில ஆர்ஜிதச் சட்டப்படி நிர்ணயிக்கப் பட்டுள்ள ஈடுத் தொகையே மிகவும் குறைவாகும். அந்தத் தொகையைக் காட்டிலும் அதிகத் தொகையை நிர்ணயிப்பதற்கு மேற்படி கமிஷனுக்கு அதிகாரம் இல்லை; எனினும், அதைக் குறைப்பதற்கு அதிகாரம் உண்டு!

பர்மாவிலுள்ள இந்தியர்களின் சொத்துக்களை ஆர்ஜிதம் செய்து கொள்ளும் விஷயமாக பர்மா சர்க்கார் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமுன், அங்கு இந்தியப் பிரதிநிதிகளை அனுப்பி மேற்படி சர்க்காருடன் சமரசம் பேசும்படி பர்மா நாட்டுக்கோட்டை செட்டியார்கள் இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் அவர்களுடைய பிரதிநிதிகள் சென்னை மந்திரிகளையும் பேட்டி கண்டு முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, பர்மாவில் நூறு கோடி ரூபாய் வரையில் மூலதனம் போட்டுள்ள இந்தியர்களின் சொத்துக்களுக்கு நியாயமான நஷ்ட ஈடு கிடைப்பதற்குற்ற முறைகளை இந்திய சர்க்காரும் சென்னை சர்க்காரும் தாமதமின்றிக் கைக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

அட்டைப்பட விளக்கம்

ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னமே, மகோன்னதமான மகத சாம்ராஜ்யத்துக்கு அடிகோலியவர் சந்திரகுப்த மௌரியன் என்னும் பெயர் வாய்ந்த மாபெரும் சக்கரவர்த்தியாவர். அவருடைய ஆட்சிக் காலத்திலே நமது பாரத மணித்திருநாடு, சமூகம், பொருளாதாரம், இலக்கியம், அரசியல் எந்தத் துறையிலும் ஈடு இணையற்று விளங்கியது.




அத்தகைய புகழ்பெற்ற சக்கரவர்த்தி சந்திரகுப்தனின் ஆட்சிக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு, அந்தக் காலத்துச் சமூகத்தைச் சித்திரிக்கும் அழகிய புதிய தொடர் கதையொன்று இந்த இதழிலிருந்து ஆரம்பமாகிறது. ஸ்ரீ பகவதிசரண் வர்மா என்னும் புகழ்பெற்ற ஆசிரியரால் எழுதப்பட்டதுதான் 'சித்திரலேகா' என்னும் இந்த நவீனம்.

"பாவம் என்றால் என்ன?" என்று கேட்கும் ஸ்வேதாங்கனை பீஜகுப்தனிடம் அனுப்புகிறார் குரு ரத்னாம்பர். சுக போகங்களிலும் ஐசுவரியத்திலும் மூழ்கித் திளைக்கும் பீஜகுப்தனுடைய வாழ்க்கையில் நாட்டிய ராணி சித்திரலேகா பிரவேசிக்கிறாள். நாட்டிய ராணி சித்திரலேகாவின் வாழ்க்கையில் உலகைத் துறந்த துறவி குமாரகிரி குறுக்கிடுகிறார். இப்படியாகக் கதையை சுவாரஸ்யமாக ஆசிரியர் சித்திரிக்கிறார். அந்தக் கதையில் வரும் ஒரு சம்பவம்தான் நமது இந்த இதழின் அட்டைப் படமாகத் திகழ்கிறது.

நிகழ்ச்சிச் சித்திரம்




மனிதனா, பொம்மையா?
ஆந்திரர் கோரிக்கை
இங்கு இட மில்லை, வந்த வழியே திரும்புங்கள்.
அன்று
ஜவுளிக் கடை
இன்று
ஜவுளிக் கடை
SHASTRY

சென்னைக்கு ஒரு சேனை!

சேனை ஒன்று இப்போது தேவையாயிருக்கிறது. சென்னை நகரைப் பாதுகாப்பதற்காக அச்சேனை தேவை. சொல்லுவதற்கே கூச்சமாயிருக்கிறது. நமது சொந்தச் சகோதரர்களான ஆந்திர தேசபக்த வீரர்களின் அநியாயக் கோரிக்கையிலிருந்து சென்னை நகரைக் காப்பாற்றுவதற்கு அத்தகைய பாதுகாப்புச் சேனை ஒன்று தேவையாயிருக்கிறது. தமிழ் நாடெங்குமிருந்து அச்சேனை திரண்டு வரத் தயாராயிருக்க வேண்டும். கத்தி - துப்பாக்கி எடுத்துப் போராடுவதற்காக அல்ல; தமிழ் மக்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தையும் திட சங்கல்பத்தையும் தெரியப்படுத்திச் சாத்வீக முறையிலே போராடுவதற்காகத்தான்.

நமது ஆந்திர சகோதரர்கள், பாவம், சில விஷயங்களில் குறைப்படுவதற்கு இடம் இருக்கிறது. புராதன இலக்கியமோ, நவீன இலக்கியமோ அவ்வளவாக ஆந்திர பாஷையில் கிடையாது. தமிழர்களுடன் ஒப்பிடும்போது படிக்கும் ஆசையும் அவ்வளவாகக் கிடையாது. பழைய காலத்துச் சிற்பங்கள் கொஞ்சம் உண்டு; ஆனால் அவற்றைப் பேணிப் பாராட்டுவோர் இல்லை. விஜயநகர சாம்ராஜ்யம் ஒரு சமயத்தில் மகோந்நதம் அடைந்திருந்தது. அதன் சின்னங்களாகச் சில சிதிலமடைந்த கோட்டைகளும் கட்டிடங்களும்தான் இன்று இருக்கின்றன. அந்த விஜயநகர சாம்ராஜ்யம் நடந்த காலத்தில் தமிழ்நாட்டில் காஞ்சீபுரம் முதலிய க்ஷேத்திரங்களில் ஒப்பற்ற பெருமை வாய்ந்த கோயில்களும் கோபுரங்களும் கட்டப்பட்டன. ஆனால் ஆந்திர நாட்டில் அத்தகைய ஆலயங்கள் நிர்மாணிக்கப் படவில்லை. ஸ்ரீ தியாகராஜரின் கீர்த்தனங்கள் தெலுங்கு பாஷையில் உள்ள சிறந்த கலைச் செல்வம். ஆனால் அவற்றை அனுபவிக்கும் ஆற்றலும் பாக்கியமும் ஆந்திர மகாஜனங்களில் மிகப் பெரும்பாலோர் இன்னும் பெறவில்லை; மட்டமான ஹிந்துஸ்தானி டாக்கி மெட்டுகளுடன் திருப்தியடைகிறார்கள்.

இப்படியெல்லாம் சில துறைகளில் அபாக்கியசாலிகளாயிருந்தபோதிலும் 1921-ம் ஆண்டிலிருந்து ஆந்திரர்கள் ஒரு முக்கியமான துறையில் பெயரும் புகழும் பெற்றனர். காந்தி மகாத்மா ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கத்தில் ஆந்திரர்கள் முன்னணியில் நின்றார்கள். ஒப்பற்ற தியாகங்கள் பல செய்தார்கள். 1930-ல் நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரஹ இயக்கத்திலும் ஆந்திரர்கள் தீரப் போர் புரிந்து நல்ல பெயர் வாங்கினார்கள்.

இப்படி யெல்லாம் தேசபக்தியுடன் தியாகம் செய்ததற்காக வெட்கப்பட்டு அதற்குப் பரிகாரம் தேடுகிறவர்களைப் போல் சிலகாலமாக அந்நாட்டுத் தலைவர்கள் பேசி வருகிறார்கள்; காரியமும் செய்து வருகிறார்கள்.

1937-38ல் ராஜாஜி சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியாயிருந்தபோது ஆந்திர மாகாணக் கிளர்ச்சி வலுப்பெற்றது. ராஜாஜிதான் ஆந்திர மாகாணத்தைத் தனியாகப் பிரிப்பதற்குக் குறுக்கே நிற்கிறார் என்ற பொய் அவதூறைப் பரப்பிப் பிரசாரம் செய்தார்கள். அது பொய் என்று வெட்ட வெளிச்சமாக நிரூபிக்கப்பட்ட பிறகும் சில தலைவர்கள் அதைத் திருப்பித் திருப்பிச் சொல்லத் தயங்கவில்லை.

பிறகு, அட்வைஸர்களின் ஆட்சி நடந்தபோது ஆந்திர மாகாணக் கிளர்ச்சி இருந்த இடம் தெரியவில்லை. இப்போது ஆந்திர மாகாணப் பிரிவினைத் தலைவர்களில் ஒருவராயிருக்கும் ஸர் எஸ். வி. ராமமூர்த்தி அச்சமயம் சென்னை சர்க்காரின் பிரதம காரியதரிசியாக இருந்தார். சர்க்காரிடம் மிகுந்த செல்வாக்குள்ளவராயிருந்தார். அந்த நாலு வருஷத்தில் ஆந்திர மாகாணத்தைப் பிரித்திருக்கலாம் அல்லவா? யார் வேண்டாம் என்றார்கள்? அப்போது ஸர் எஸ். வி. ராமமூர்த்தி தம்முடைய உத்தியோகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதுமாதிரியே ஸ்ரீ டி பிரகாசம் பந்துலு காரு சென்னை மாகாணப் பிரதமராயிருந்த நாட்களிலும் 'ஆந்திர மாகாணப் பிரிவினை'யைப் பற்றிப் பேச்சே இல்லாமலிருந்தது. ஸ்ரீ பிரகாசம் பிரதமர் பதவியிலிருந்து விலகிய பிறகு 'ஆந்திர மாகாணத்தைப் பிரிக்கவேண்டும்' என்ற கூச்சல் ஒரே பிரளயமாக எழுந்தது

ஆந்திர மாகாணப் பிரிவினைக்குத் தமிழர்கள் எப்போதும் குறுக்கே நின்றதில்லை. ''தாராளமாய்ப் பிரித்துக் கொண்டு போங்கள்! எவ்வளவு சீக்

ரம் பிரிந்து போகிறீர்களோ அவ்வளவுக்கு நல்லது!'' என்றுதான் தமிழர்கள் சொல்லி வந்தார்கள். ஆனால் மேலேயுள்ள நமது மாபெருந் தலைவர்கள் மாகாணப் பிரிவினை முதலிய சில்லறை விஷயங்களில் கவனம் செலுத்த இது சரியான சமயம் இல்லை என்று கருதினார்கள். இதை நல்லபடியாகச் சொல்லிப் பார்த்தும் ஆந்திரத் தலைவர்கள் கேட்கவில்லை. நீதிபதி தார் என்பவரைத் தலைவராகக் கொண்ட மாகாணப் பிரிவினைக் கமிஷன் ஒன்று தேசமெங்கும் சுற்றிச் சாங்கோபாங்கமாக விசாரணை நடத்தியது. நடத்திவிட்டு அந்தக் கமிஷனும் ''ஆந்திர மாகாணப் பிரிவினைக்கு இப்போது ஒன்றும் அவசரமில்லை. அதை இப்போது எடுத்துக் கொண்டால் இன்னும் பல கிளைப் பிரச்னைகள் எழுந்து தொல்லை கொடுக்கும்'' என்று அபிப்பிராயம் தெரிவித்தது.

இதனாலும் பயன் விளையவில்லை. ஆந்திரத் தலைவர்கள் கொதிக்கிற எண்ணெயில் போட்ட அப்பத்தைப் போலக் குதித்தார்கள். ''ஆந்திர மாகாணம் இப்போதே வேண்டும்; இந்த நிமிஷமே வேண்டும்!'' என்று காது செவிடுபடும்படி கோஷித்தார்கள்.

பார்த்தார்கள் நம் தலைவர்கள். ''சரி; மாகாணத்தைப் பிரித்து விடுகிறோம்; ஆனால் அதற்குத் தடையாயிருப்பது உங்களுடைய அநியாயக் கோரிக்கைதான். அதாவது சென்னை நகரம் வேண்டும் என்று கேட்கிறீர்களே, அந்த அநியாயக் கோரிக்கையை விட்டுவிடுங்கள். மாகாணம் உடனே பிரிக்கப்படும்!'' என்று சொன்னார்கள்.

இப்படிச் சொன்னவர்கள் பண்டித ஜவாஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் படேல், டாக்டர் பட்டாபி சீதாராமய்யா ஆகிய மூவர். ஆம்; டாக்டர் பட்டாபியும் கூடத்தான். ஆந்திர மாகாணக் கிளர்ச்சியை நடத்தியவர்களில் டாக்டர் பட்டாபியை மிஞ்சக் கூடியவர் வேறு யாரும் இல்லை. அவரே மற்ற இருவருடனும் ''சென்னைக் கோரிக்கையை ஆந்திரர்கள் கைவிட்டால்தான் உடனே ஆந்திர மாகாணம் ஏற்படுத்துவது சாத்தியம்!'' என்று ஒப்புக்கொண்டு ஒப்பமும் வைத்திருக்கிறார்.

ஆனால் டாக்டர் பட்டாபிக்கு எதிர் கோஷ்டியார் அதாவது ஸ்ரீ பிரகாசம் கோஷ்டியார் பார்த்தார்கள். டாக்டர் பட்டாபியை மட்டம் தட்ட இதுதான் சமயம் என்று தீர்மானித்தார்கள். அவலை நினைத்து உரலை இடிப்பது போல், டாக்டர் பட்டாபியின் மீதுள்ள கோபத்தைச் சென்னை நகரின் மீது பேரபிமானமாக மாற்றிக் கொண்டு புறப்பட்டார்கள்.

''சென்னை நகரத்தை ஆந்திர மாகாணத்தில் சேர்க்க வேண்டும். அது முடியாவிட்டால் சென்னையில் பாதியாவது ஆந்திர மாகாணத்துடன் சேரவேண்டும். அதுவும் முடியாவிட்டால் சென்னை நகரம் தமிழ்நாட்டிலும் சேராமல் ஆந்திர நாட்டிலும் சேராமல் தனி மாகாணமாகி இந்திய சர்க்காரின் நேரான நிர்வாகத்தில் இருக்க வேண்டும்!'' என்றார்கள்.

எப்படியிருக்கிறது கோரிக்கை? காத்தவராயன் என்ற பழைய திருடனை, திருவானைக்காவல் ஆலயத்தில் புகுந்து அம்மனுடைய தங்க ஆபரணங்களைத் திருடிவிட்டதாகக் கைது செய்தார்கள். திருடன் கட்சி பேசுவதற்குப் பாரிஸ்டர் பரிபூரணராயர் முன் வந்தார். அவர் வாதமிட்டார் :—

''குறிப்பிட்ட தினத்தில் என்னுடைய கட்சிக்காரன் திருவானைக்காவலில் இல்லை. அப்படி இருந்திருந்தாலும் ஆலயத்துக்குப் போகவில்லை. ஆலயத்துக்குப் போயிருந்தாலும் அம்மன் கோவில் ஆபரணத்தைத் திருடவில்லை. அப்படித் திருடியிருந்தாலும் அவை தங்க ஆபரணங்கள் அல்ல; பித்தளை ஆபரணங்கள்தான்!''

திருடனை விடுதலை செய்ய மேற்படி வக்கீலின் வாதம் எவ்வளவு உதவியாயிருக்குமோ அவ்வளவுதான் ஆந்திரர்களின் வாதமானது சென்னை நகரின் மீது அவர்களுடைய உரிமையை ஸ்தாபிக்க உதவக்கூடும்.

ஆனபோதிலும் ஒரு விஷயத்தை நாம் மறந்துவிடக் கூடாது. இது ஜனநாயக யுகம். பெரும்பான்மை வோட்டுகளினாலும் அதிகமான கூச்சலினாலும் பொய்யும் உண்மையாகி விடும்.

புதுடில்லியிலுள்ள நமது தலைவர்கள்தான் என்ன செய்வார்கள்? அவர்களுக்கு எத்தனையோ வேலை! எத்தனையோ கவலை! இந்த ஆந்திர மாகாணத் தொல்லையை எப்படியாவது தீர்த்துத் தொலைத்தால் போதும் என்று அவர்களுக்குத் தோன்றிவிடலாம் அல்லவா? ஆந்திர சகோதரர்களின் கூச்சல் மாத்திரம் அவர்கள் காதில் விழுந்து தமிழ்நாட்டிலிருந்து சத்தமே கிளம்பாவிட்டால், ''ஓஹோ! ஆந்திரர்களின் கோரிக்கை நியாயமானதுதான் போலும்!'' என்று அவர்கள் எண்ணிவிடக்கூடும் அல்லவா?

அந்த மாதிரி எண்ணத்தை நம் தலைவர்கள் மனதில் உண்டு பண்ணத்தான்

ஆந்திரத் தலைவர்கள் முயற்சி செய்து வருகிறார்கள். கூட்டம் கூட்டமாகவும் கோஷ்டி கோஷ்டியாகவும் புது டில்லிக்குப் படையெடுத்துப் போகிறார்கள். பண்டித ஜவாஹர்லால் முதலிய தலைவர்களைப் பேட்டி காண்கிறார்கள். ஜனநாயக யுகத்தில் "பேட்டி கொடுக்க மாட்டோம்" என்று தலைவர்கள் எப்படிச் சொல்ல முடியும்? வந்தவர்களுக்குப் பேட்டி கொடுத்துத் தலைவர்கள் அவர்கள் சொல்லுவதையும் காது கொடுத்துக் கேட்கிறார்கள். டில்லிக்குப் போனவர்கள் திரும்பி வந்து "தலைவர்களிடம் சொல்லி விட்டோம். அநேகமாக நம் பக்கம் தீர்ப்பாகும்!" என்ற வதந்தியைப் பரப்புகிறார்கள்.

தமிழர்கள் வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்தால் ஆந்திர சகோதரர்களின் எண்ணம் நிறைவேறினாலும் நிறைவேறி விடலாம் அல்லவா? பிடிவாதக்காரர்களை எப்படியாவது சமாதானப் படுத்த வேண்டும் என்று அகில இந்தியத் தலைவர்களுக்குத் தோன்றினாலும் தோன்றி விடலாம் அல்லவா?

* * *

ஆந்திரர்கள் சென்னை நகருக்கு உரிமை கொண்டாடுவதைப் போன்ற அநியாயமான கோரிக்கை அரசியல் உலகில் நாம் கேள்விப்பட்டதில்லை.

சென்னை நகரில் பெரும்பான்மையோர் தமிழர்கள்; ஏறக்குறைய 100-க்கு 80 பேர் தமிழர்கள்.—இதை யாரும் ஆட்சேபிக்கவில்லை.

சென்னையில் நெடுங்காலமாக வசித்து வருவோர் தெலுங்கர்களா? தமிழர்களா?—இதைக் கண்டு பிடிக்க ஒரு திட்டமான வழி இருக்கிறது.

ஒரு பாஷைக்காரர்கள் வியாபாரம் அல்லது தொழிலுக்காக வேறு மாகாணத்துக்குப் போனால் அவர்கள் தாங்கள் குடிபுகுந்த மாகாண பாஷையைக் கற்றுக் கொள்வது இயல்பு.

காசிக்குப் போய்க் குடியேறும் தமிழர்கள் அங்கு வழங்கும் ஹிந்தி பாஷையைக் கற்றுக் கொள்வார்கள். ஆனால் காசி வாசிகள் தமிழைக் கற்றுக் கொண்டுவிட மாட்டார்கள்.

இப்போது பாருங்கள். சென்னை நகரில் குடியேறி வர்த்தகம் செய்யும் கோமுட்டி செட்டியார்கள், நாயுடுமார்கள் முதலியோர் நன்றாகத் தமிழ் பேசுகிறார்கள். ஆனால் சென்னையிலுள்ள தமிழர்கள் எத்தனை பேருக்குத் தெலுங்கு பாஷை பேசத் தெரியும்?

சென்னை நகரம் தமிழர்களுடையது தான் என்பதைப் பற்றி யாதொரு சந்தேகமும் இல்லை. ஆந்திரர்கள் சென்னை நகரை முழுதும் கேட்பதோ, பாதி வேண்டும் என்று கேட்பதோ மிக்க அநியாயம். ஆந்திராவிலும் தமிழ்நாட்டிலும் சேராமல் சென்னையைத் தனி மாகாணமாக்க வேண்டும் என்று கேட்பது "எனக்கு இரண்டு கண் போனாலும் அடுத்த வீட்டுக்காரனுக்கு ஒரு கண் போனால் சரி" என்ற மோசமான மனோ நிலையைக் காட்டுகிறது.

* * *

தமிழர்களுடைய கட்சியிலேயே முழு நியாயம் இருந்த போதிலும் அதை எடுத்துச் சொல்வது அவசியம்.

ஏற்கனவே சென்னை விஷயத்தில் தமிழ் நாட்டுத் தலைவர்கள் அவ்வளவு ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவில்லை. "பட்டணம் பறிபோகிறது" என்ற எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் வடசென்னைக்கு ஆந்திரப் பிரதிநிதியைச் சட்ட சபைக்கு நிறுத்த ஒப்புக் கொண்டார்கள்.

இப்போதாவது தமிழ் நாட்டுத் தலைவர்கள் விழித்தெழ வேண்டும். முன் ஜாக்கிரதையுடன் காரியம் செய்ய வேண்டும். தலைவர்கள் விழித்தெழுந்து தக்க சமயத்தில் தக்க நடவடிக்கை எடுக்கும்படி தமிழ்ப் பொது மக்கள் தூண்ட வேண்டும். தலைவர்கள் தூங்கினாலும் மக்கள் போடும் கூச்சலில் அவர்கள் எழுந்துவிட வேண்டும்.

சென்னையில் ஸ்ரீ பி. எம். ஆதிகேசவலு நாயகர் அவர்கள் சென்ற வாரத்தில் இது சம்பந்தமாக ஒரு கூட்டம் கூட்டி வைத்தார்; பலரும் பேசினார்கள். தீர்மானமும் நிறைவேற்றினார்கள்.

தமிழ் நாட்டில் இன்னும் சில இடங்களிலும் "சென்னை நகர் தமிழர்களுடையதே!" என்ற சிறு குரல்கள் எழுந்திருக்கின்றன.

இதெல்லாம் போதாது. இந்தமாதிரி சிறு குரல்களும் பெருங்குரல்களும் கோஷங்களும் கூச்சல்களும் தமிழ்நாடு முழுதும் கிளம்ப வேண்டும். எல்லாம் சேர்ந்து ஒரு பெரிய மகா சமுத்திரத்தின் பேரிரைச்சல் போல் முழங்கிப் புது டில்லியில் உள்ள நம் மாபெருந் தலைவர்கள் காதிலும் போய் எட்டவேண்டும்.

சென்னை நகரைத் தமிழ் நாட்டுக்குக் காப்பாற்றிக் கொடுக்க ஒரு பெரும் சேனை தயாராக வேண்டும்.

கூச்சலும் கோஷமும் போட்டுப் பார்த்த பிறகு, அவசியமானால் காந்தி மகாத்மா காட்டியுள்ள சாத்வீக முறையில் நடவடிக்கை எடுத்துத் தமிழர் உரிமையை நிலைநாட்டவும் அச்சேனை ஆயத்தமாயிருக்க வேண்டும்.

கடவுளின்
கோவிலுக்கான
பரிசுத்தம்



●தெய்வீகத்திற்குப் பரிசுத்தம் இன்றியமையாதது. மிகவும் சுத்தமளிக்கும் சடங்காச்சாரங்களுக்கு சுயமான ஸோப்பை மட்டுமே நாம் உபயோகிக்க வேண்டும். ஸோப்பில் ஏது கலப்புமிருக்கலாம். ஆனால் கோத்ரெஜ் ஸாண்டலின் நன்மை தரும் கலப்பற்ற தாவர எண்ணெய்ச் சத்துக்களே. கோத்ரெஜ் சௌக்கியப் பொருட்களிலெல்லாம் உள்ளன போன்று, தனிமைப்பட உபயோகப் படுத்தப்பட்டுள்ளன. வெறுக்கத்தக்க மிருகக் கொழுப்புகள் யாதும் அவைகளில் இல்லை. கயமைசூர் சந்தனத் தைலம் விசேஷமாய்ப் பொருத்தப்பெற்ற கோத்ரெஜ் சந்தண ஸோப்பானது இன்பமான குளிர்மை, இதம், மணம் இவைகளையுடைய நிலையை யளிக்கும். எனவே, சரீரம் கடவுளின் கோவிலாயிருக்க, அதைத் தூய்மைப் படுத்த கோத்ரெஜ் தாவர வஸ்து ஸாண்டல் ஸோப் பல்லாது வேறெதுதான் ஏற்றதாகும்?



கோத்ரெஜ் லிம்டா — இருமி களைக் கொல்லவும் சொஸ்த மளிக்கவும் வல்ல வேம்பின் குணங்களையுடைய ஸோப்.

Godrej Sandal

கோத்ரெஜ் ஸாண்டல்
(மார்க்) (சந்தண)

டாய்லெட் (ஸ்நான) ஸோப்

குறைந்த விலையில் மற்றைய ஸோப்புகளை விட மிகவும் உயர்தரமான ஸோப்பு.

கோத்ரெஜ் சோப்ஸ், லிமிடெட்,
மதராஸ்: 164, பிராட்வே; கொச்சின்: 6/36, கல்வாதி

K. S. E.

நவராத்திரிப் பண்டிகைக்காக

அசல் கொள்ளேகாலம் பட்டிலலான

ரவிக்கைத் துண்டுகள்...
...துண்டுப் பாவாடைகள்
பட்டுப் புடவைகள்...

புது மாதிரியான பார்டர்களில் முந்தியில் அழகிய வேலைப்பாடுகள் செய்து புதுமாதிரியான கலர்களில் ஏராளமாய் வந்திருக்கின்றன

★

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்! வேண்டியதைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளுங்கள்

★

காத்தாயி
ஸில்க் எம்போரியம்

கிழக்கு மாட வீதி :: மயிலாப்பூர்
மதராஸ்



முதல் அத்தியாயம்

இது என்ன கேள்வி?

"பிரபோ! பாவம் என்றால் என்ன?" என்று ஸ்வேதாங்கன் கேட்டான்.

மகாப் பிரபு ரத்னாம்பரர் ஆழ்ந்த சிந்தனையிலிருந்து துணுக்குற்று விழித்தவர் போல மிரள மிரள விழித்தார். பிறகு சுய உணர்வு பெற்றவர் போல, ஸ்வேதாங்கனை ஒரு முறை கூர்ந்து கவனித்தார். "பாவமா? அது மிகவும் சிக்கலான பிரச்னை குழந்தாய்! ஆயினும் சுபாவமாக எழக்கூடிய கேள்வி தான். பாவம் என்றால் என்ன என்று தானே நீ கேட்டாய்?"

அத்துடன் பேச்சை நிறுத்திக் கொண்டு ரத்னாம்பரர் சிறிது நேரம் ஆகாயத்தை அளாவும் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்த பாடலிபுத்திர நகரத்தை உற்றுப் பார்த்தார். மாலைக் கதிரவனின் தங்க முலாம் பூசிய மஞ்சள் வெய்யிலில் குதூகலமும் கோலாகலமும் நிறைந்த பாடலிபுத்திர நகரம் ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

"ஆம், பாவத்தை வரையறுத்து முடிவு கட்டுவதற்காக நானும் எத்தனையோ தடவைகள் முயன்றிருக்கிறேன். ஆனால் ஒவ்வொரு தடவையும் நான் வெற்றி என்பதையே காண முடியவில்லை. பாவம் என்றால் என்ன? அது எங்கே வாசம் செய்கிறது? இதெல்லாம் மிகச் சிக்கலான பிரச்னைகள். இன்று வரை யாரும் சரியான முறையில் புரிந்து கொண்டு அதைத் தீர்த்து வைக்க முயன்றும் முடியவில்லை. ஊண் உறக்கமின்றி விடா முயற்சி செய்து பார்த்தும், அனுபவம் என்னும் ஆழ்கடலில் இறங்கித் தேடிப்பார்த்தும் நானே இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியவில்லையென்றால், உனக்கு அதை எப்படிப் புரிய வைக்க முடியும்?" என்றார் ரத்னாம்பரர்.



இதைச் சொல்லியபின் ரத்னாம்பரர் மறுபடியும் சிறிது நேரம் மௌனத்தில் ஆழ்ந்தார். பிறகு, "ஆனால் சுவேதாங்கா, நீ பாவத்தை அவசியம் அறிந்து கொள்ளத்தான் வேண்டுமென்று நினைத்தால் கானகத்தில் இருந்துகொண்டு கடும் சாதனையில் ஈடுபட்டிருப்பது போதாது. உலகத்தை நாட வேண்டியிருக்கும். அதற்கு நீ சித்தமாயிருந்தால் ஒரு வேளை பாவத்தைக் காணக்கூடும்" என்றார்.


சுவேதாங்கன் சாஷ்டாங்கமாக ரத்னாம்பரரை வணங்கி, "நான் அதற்குச் சித்தமாயிருக்கிறேன், ஸ்வாமி!" என்று பவ்யமாகப் பதில் அளித்தான்.

"உனக்கும் பாவத்தைக் காண வேண்டுமென்ற விருப்பம் உண்டோ?" என்று விசாலநேத்ரனைப் பார்த்துக் கேட்டார் குரு ரத்னாம்பரர்

விசால நேத்ரனும் குருவுக்கு வணங்கி "ஆசாரிய தேவரின் யூகம் முற்றிலும் சரியே!" என்று பதிலிறுத்தான்.

ரத்னாம்பரரின் முகம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது. "உங்களிருவரையும் உலகத்துக்கு அனுப்பி அனுபவம் அடைய விடுவதற்கு முன்னால் உலகத்தின் நிலைமையை ஓரிரண்டு வார்த்தைகளில் தெளிவாக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். நான் இந்த நகரத்தில் உள்ள இரண்டு பிரமுகர்களை நன்கு அறிவேன். நீங்கள் ஏற்றுக் கொள்ளும் காரியத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அவ்விருவருடைய உதவியும் உங்களுக்கு அத்தியாவசியமாக வேண்டியிருக்கும். அவர்களில் ஒருவர் உலகம் துறந்த யோகி. மற்றவர் உலக விவகாரங்களில் ஈடுபட்டுள்ள போகி. யோகியின் பெயர் குமாரகிரி. போகியின் பெயர் பீஜகுப்தன். உங்களிருவருடைய வாழ்க்கை அருவியும் அவ்விருவருடைய வாழ்க்கையின் போக்குக்கு அனுசரணையாகவே ஓட வேண்டியிருக்கும்" என்றார்.

இரண்டு சிஷ்யர்களும் சேர்ந்தாற்போல, "எங்களுக்குச் சம்மதமே!" என்றனர்.



தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளரான ஸ்ரீ ர. நாராயணய்யங்கார் அவர்களின் குமாரி ஸௌ. பத்மாவுக்கும், ஸ்ரீ ரகுநாத தாத்தாச்சாரியாரின் குமாரரும், கல்கத்தா பிரிட்டிஷ் டாபுலேடிங் கம்பெனியில் உத்தியோகம் பார்ப்பவருமான ஸ்ரீ கே. ஆர். ஸ்ரீனிவாஸனுக்கும் சென்னை கோபாலபுரத்தில் சென்ற 9-9-49-ல் விமரிசையாக விவாகம் நடந்தேறியது. கவர்னர் ஜெனரல் ராஜாஜி, சென்னைப் பிரதமர் குமாரசாமி ராஜா, மந்திரி பக்தவத்ஸலம் முதலிய பல பிரமுகர்களிடமிருந்து ஏராளமான ஆசிச் செய்திகள் வந்திருந்தன. பல பிரமுகர்களும், எழுத்தாளர்களும் விஜயம் செய்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர். வாழ்க! பத்மா ஸ்ரீனிவாஸன்!

அவற்றை நாம் அனுபவத்தின் வாயிலாகத்தான் அறிந்து கொள்ள முடியும். அனுபவம் பெற்று அவ்விஷயங்களை அறிந்து வருவதற்காகத்தான் நான் உங்களிருவரையும் உலகத்துக்கு அனுப்புகிறேன். ஆனால் அந்த அனுபவ சாகரத்தில் நீங்களும் மிதந்து விடக்கூடாது என்பதை நன்றாக நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். சம்சாரம் என்பது சாகரத்துக்கு ஒப்பாகும். அதன் அலைகளின் இயற்கைப் போக்கில் நீங்களும் போய்த்தான் ஆக வேண்டும். ஆனால் அந்த அலைகள் தம் போக்கில் அடித்துக் கொண்டு போய் உங்களை ஆழ் கடலில் அமுக்கிவிடக்கூடும். அதற்கு நீங்கள் இடம் கொடுக்கக்கூடாது. சர்வ ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும்" என்றார் மகாப் பிரபு ரத்னும்பார்.

சுவேதாங்கன் விசாலதேவனைப் பார்த்தான்; விசாலதேவன் சுவேதாங்கனைப் பார்த்தான். இருவரும் ஒருவரை யொருவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டனர்.

ரத்னும்பார் சிறிதுநேரம் மௌனமாக ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு, "நீங்கள் போகப் போகும் இடங்களின் நிலைமையைப் பற்றியும் முன் கூட்டியே உங்களுக்குச் சொல்லிவிடுவது நலம் என்று கருதுகிறேன். குமாரகிரி யோகி; உலகத்தின் சகல சுக போகங்கள் மீதும் வெற்றி கொண்டு விட்டதாக அவன் மார்தட்டிக் கொள்ளுகிறான். அது மட்டும் அல்ல; உலகத்தின் மீது அவனுக்கு ஏகமான விரக்தி வேறு. பெறுதற்கரிய பேரின்பத்தைக் கூடப் பெற்று விட்டதாக அவன் மனதுக்குள்ளே நினைப்பு. அவனுடைய வதனத்தில் 'தேஜஸ்' சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது. அவனுடைய வீர தீரப் பிரதாபங்களுக்கும் ஓர் கந்து கரையில்லை. உடல் வலிமையும் உள்ள வலிமையும் ஒருங்கே அவனிடம் கூடி கொண்டிருக்கின்றன. ஞானிகள் சொல்வது போல, அவன் மமத்துவம் என்னும் அகந்தையைக்கூட அடக்கி யாண்டு விட்டதாகச் சொல்லலாம். குமாரகிரி நல்ல யௌவன புருஷன்தான். யௌவனமும் வைராக்கியமும் சேர்ந்து அவனிடத்திலே ஒரு இணையற்ற சக்தியை உண்டு பண்ணியிருக்கின்றன. புலனடக்கம் தான் அவனுடைய மாபெரும் சாதனை.

"விசால தேவா! உனக்குத் தியானத்திலும் ஆராதனையிலும் பூஜை-புனஸ்காரங்களிலும் ஈடுபாடு இயல்பாகவே அதிகமாக இருக்கிறது. ஆகவே நீ குமாரகிரியின் சிஷ்யனாக ஆவது தான் உசிதம். சுவேதாங்கா! உனக்கு உலகத்தின்பால் அதிகப் பற்றுதல் இருப்பதைக் காண்கிறேன். ஆகவே நீ பீஜகுப்தனுக்கு ஊழியனாக ஆவதுதான் நல்லது."

இரண்டு சிஷ்யர்களும் "அப்படியே!" என்று பதில் அளித்தனர்.

"உங்களிருவருக்கும் ஒரு ஏற்பாடு செய்தாகி விட்டது. நான் ஒருவன்தானே மிச்சம்! அதைப்பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. வாழ்க்கையில் உபாஸனை எப்படி அவசியமானதோ அப்படியே அனுபவமும் அவசியமானதுதான். நீங்கள் அனுபவத்தைப் பெற முயற்சியுங்கள். நான் தவத்தில் ஈடுபடுகிறேன். இன்றைக்குச் சரியாக ஒரு வருஷம் கழித்து நீங்கள் இருவரும் என்னை இதே இடத்தில் மீண்டும் சந்திக்க வேண்டும். பிறகு நாம் நம்முடைய இஷ்டமான காரியங்களில் பிரவேசிக்கலாம்......

'ஆனால் ஒரு விஷயம் மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். கல்வி கேள்விகளை மட்டும் கொண்டு புரிந்து கொள்ள முடியாத பற்பல விஷயங்கள் இருக்கின்றன.

சொர்க்கம்தான் அவனுடைய வாழ்க்கையின் பெரும் இலட்சியம். விசாலதேவா! அதே குமார கிரிதான் உனக்குக் குரு ஆவான்."

"சுவேதாங்கா! பீஜகுப்தன் போகி. கற்பனைக்கும் எட்டாத காளைப் பருவத்தின் இன்பக் கனவுகளிலே அவன் லயித்திருக்கிறான். உள்ளத்திலே வழியிருக்கும் இன்ப போதையை அவனுடைய அழகிய சிவந்த விழிகள் எடுத்துக் காட்டுகின்றன! அவனுடைய விசாலமான எட்டு அடுக்கு மாளிகையிலே சுக போகங்கள் அனைத்தும் குடிகொண்டிருக்கின்றன. இடைவிடா இனிய பானத்திலேதான் பிறப்பெய்தினதன் பலன்—வாழ்வின் இன்பம் வாசம் புரிகிறது என்பது அவன் எண்ணம். எப்பொழுது பார்த்தாலும் அவனுடைய மாளிகை 'கல கல'வென்று குதூகலமாகவே காட்சியளிக்கிறது. அவனுக்கிருக்கும் ஐச்வர்யத்துக்கோர் அளவில்லை. அவன் பணத்திலே புரளுகிறான் என்று சொன்னால் கூட மிகையாகாது. அவனிடம் அழகு இருக்கிறது; ஐச்வர்யம் இருக்கிறது; அவை யெல்லாவற்றையும் காட்டிலும் மேலானதாக அவன் உள்ளத்திலே உலகத்தின் சுக போகங்கள் அனைத்தும் வாசம்புரிகின்றன. அவனுடைய மாளிகையின் வாசலிலே பெரிய பெரிய மதம்பிடித்த யானைகள் ஆடிய வண்ணம் நிற்கின்றன. அதே போல அந்தப்புரத்திலே அழகு மயக்கத்தில் மூழ்கிய அரம்பையரெனத் தோன்றும் நடன ராணிகள் நர்த்தனம் புரிந்து கொண்டிருக்கின்றனர். கடவுள் மீது அவனுக்கு நம்பிக்கை யில்லை. அவரைப் பற்றிய சிந்தனை அவன் உள்ளத்தில் உதித்ததும் இல்லை. சொர்க்கம், நரகம் இவற்றைப் பற்றி அவன் கனவிலும் கவலைப்பட்டதில்லை. சுகபோக வாழ்க்கை வாழ்வதுதான் அவனுடைய வாழ்வின் இலட்சியம்; குறிக்கோள் அனைத்தும். அதே பீஜகுப்தனிடம்தான் நீ ஊழியம் புரிய வேண்டும். சுவேதாங்கா! சம்மதந்தானே?"

"ஆசார்ய தேவரின் உத்தரவை தலைமேற் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்."

இவ்வார்த்தைகளைக் கூறும் பொழுதே சுவேதாங்கனின் கண்கள் உள்ளுக்குள் செருகின. கற்பனைக்கும் எட்டாத பீஜகுப்தனின் செல்வத்தை அவன் தன் கற்பனைக் கண்களால் காண முயன்றான்.

"என் விசாலதேவா! உனக்கும் சம்மதந்தானே?"

"மகாப் பிரபுவின் உத்தரவுக்குக் கீழ்ப்படிய அடியேன் காத்திருக்கிறேன்" என்றான் விசாலதேவன். மௌனமும் வைராக்கியமும் சேர்ந்து அளித்த அந்தச் சக்தியின் மகத்துவத்தை அறிய எண்ணியோ என்னவோ, விசாலதேவனின் இமைகளும் அவனை யறியாமல் மூடிக்கொண்டன.

"அப்படியானால் அவ்வாறே ஆகட்டும்" என்று சொல்லி மகாப்பிரபு ரத்னாம்பர் எழுந்தார்.

மறுநாள் பர்ணசாலை வெறிச்சென்று காலியாயிருந்தது. குரு சாதனை என்னும் வறண்ட க்ஷேத்திரத்திலும், சிஷ்யர்கள் கரை காணமுடியாத வாழ்வு என்னும் கடலிலும் இறங்கி விட்டனர் என்பதை அந்தக் குடிசை எடுத்துக் காட்டியது. (தொடரும்)

பாப்பா மலர்

ஐம்பது இளவரசர்கள்

ரா. நா.

2. ராணி சொன்ன கதை



சிறையில் அடைபட்டிருந்த அழகி கடோதரனிடம் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள் :

"கெய்ரோ நகரத்தில் புகழ்பெற்ற ஒரு பிரபு குடும்பத்தில் பிறந்த பெண் நான். நேற்று நானும் என் வேலையாட்களும் குதிரை மீது இந்த அரண்மனைப் பக்கம் வந்தோம். அந்தச் சமயத்தில் இந்தக் கறுப்பு ராக்ஷஸன் தோன்றி என் வேலையாட்களையெல்லாம் கொன்று என்னையும் சிறைப்படுத்தினான். இனி நான் தப்பிப் பிழைக்க முடியாது. ஆகையால் நீயாவது உடனே தப்பித்துக் கொள்; இல்லாவிட்டால் அவன் வந்து உன்னைக் கொன்று விடுவான்."

இவ்வாறு அவள் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே மலை போன்ற ஒரு குதிரை மீது சவாரி செய்துகொண்டு ராக்ஷஸன் வந்துவிட்டான். அவன் பார்ப்பதற்குப் பயங்கரமாயிருந்ததுடன் ஒரு பெரிய வாளை வீசிக்கொண்டிருந்தான். ராக்ஷஸனின் பயங்கர உருவத்தைக் கண்டு கடோதரன் ஆச்சரியமடைந்தானாயினும் தைரியத்தை இழக்கவில்லை. தன்னுடைய வாளை உருவிக்கொண்டு எதிரியைச் சந்திக்கத் தயாராயிருந்தான். ராக்ஷஸன் தனக்கு அருகில் வந்தவுடன் கடோதரன் ஒரே பாய்ச்சலாக அவன் மீது பாய்ந்து தாக்கினான். ராக்ஷஸனின் முழங்காலில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனே அவன் கோபாவேசத்துடன் கர்ஜித்துக் கொண்டு இளவரசனை வெட்டி இரண்டு துண்டாக்க முன் வந்தான். அதற்குள் கடோதரன் சாமர்த்தியமாக விலகி ராக்ஷஸனது தாக்குதலுக்குத் தப்பினான். தப்பியதோடல்லாமல் தன் வாளால் அவன் வலது கையைத் துண்டித்து எறிந்தான். மலை சரிவது போல் ராக்ஷஸன் தரையில் சாய்ந்தான். இந்தச் சமயத்தில் கடோதரன் ஓடி ராக்ஷஸனின் தலையையும் துண்டித்து எறிந்தான்.



இந்தக் காட்சியை அரண்மனை ஜன்னலிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த அழகி ஆனந்தக் கூக்குரலிட்டாள். உடனே கடோதரனை அழைத்து ராக்ஷஸனின் மடியிலுள்ள அரண்மனைச் சாவியை எடுத்துத் தன்னை விடுவிக்குமாறு வேண்டினாள். கடோதரனும் ராக்ஷஸனிடமிருந்த சாவியை எடுத்து அழகியை விடுவித்தான். அரண்மனைக் கதவு திறந்தவுடன் அழகி ஓடோடியும் வந்து கடோதரனின் காலில் விழுந்து தனது


நன்றியைத் தெரிவித்தாள். உலகத்திலேயே அவன்தான் மகாவீரன் எனப் புகழ்ந்தாள். அழகியின் வசீகரமான தோற்றத்தைக் கண்டு, நன்றிகூறும் அவளுடைய இனிய மொழிகளைக் கேட்டு, கடோதரன் அவள் மீது உடனே காதல் கொண்டான்.

இவர்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் அரண்மனையின் மற்றொருபுறத்திலிருந்து அழுகுரல்கள் கேட்டன. அவை ராக்ஷஸனால் சிறைப் படுத்தப்பட்ட கைதிகளின் வேதனைக் குரல்கள் என அழகியிடமிருந்து அறிந்து, உடனே கடோதரன் மற்றக் கதவுகளைத் திறந்து எல்லாக் கைதிகளையும் விடுதலை செய்தான். ராக்ஷஸனைத் தான் கொன்று விட்டதாகவும், இனி அவர்கள் உயிருக்கு அஞ்சவேண்டியதில்லை என்றும் உறுதி கூறினான். அழகி கைதிகளின் தளைகளை அவிழ்த்து அவர்களுக்கு ஆறுதல் மொழிகள் கூறினாள்.

இவ்வாறு விடுவிக்கப் பட்டவர்கள் சுமார் நூறு பேர் இருப்பர். இவர்களில், தான் தேடி வந்த தனது நாற்பத்தொன்பது சகோதரர்களும் இருப்பதைக் கண்டு கடோதரன் சந்தோஷப் பட்டான். இளவரசர்களைக் கண்டவுடன் அவர்களைக் கட்டித் தழுவிக் கொண்டான். அவர்களைக் காணாது மன்னன் கவலையடைந்திருப்பதைச் சொன்னான். அவர்களை மீண்டும் கண்டது பற்றித் தன் சந்தோஷத்தையும் தெரிவித்தான். தன் சகோதரர்களுடன் பேசிய பிறகு, வியாபாரிகளான மற்றக் கைதிகளைப் பார்த்து "அரண்மனையிலே உங்கள் சரக்குகள் இருக்கின்றன. அவைகளை எடுத்துக்கொண்டு உங்கள் ஊர்களுக்குச் செல்லுங்கள்" என்று கூறினான்.

ஒவ்வொரு வியாபாரியும் தன்னுடைய பொருள்களை எடுத்துக் கொண்ட பின், மிஞ்சியிருந்த பொருள்களைக் கடோதரன் அவர்களுக்கே சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தான். தங்களுடைய ஒட்டகைகளும் குதிரைகளும் அரண்மனை லாயத்திலிருப்பதைக் கண்டு வியாபாரிகள் அவற்றின் மீது தங்கள் சாமான்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்டனர். புறப்படுமுன் அவர்கள் யாவரும் தங்களைக் காப்பாற்றியதற்காக கடோதரனுக்குத் தங்கள் மனமுவந்த நன்றியைத் தெரிவித்தனர்.

வியாபாரிகள் சென்ற பிறகு கடோதரன் அழகியை நோக்கி "அம்மணி, நீங்கள் எங்கே செல்ல வேண்டும்? உங்களை உற்றார் உறவினரிடம் சேர்க்கும் வரையில் நானும் ஊரான் மன்னரின் புத்திரர்களாகிய இந்த நாற்பத்தொன்பது இளவரசர்களும் இந்த இடத்தை விட்டுப் போக மாட்டோம். எங்கே செல்ல



வேண்டும், சொல்லுங்கள்!" என்று கேட்டான்.

அழகி பதில் கூறினாள்:—

"நான் என் நாட்டிற்குத் திரும்புவதில்லை என்ற பிரதிக்ஞையுடன் அங்கிருந்து வெளியேறி வந்து விட்டேன். நான் உங்களிடம் முதலில் கூறியபடி நான் கெய்ரோ நகர் சீமாட்டியல்ல. நான ஒரு அரசனின் குமாரி. என் தந்தையை ஒரு பகைவன் தாக்கி அவரைக் கொன்று அவருடைய சிம்மாசனத்தையும் கைப்பற்றிக் கொண்டு விட்டான். உயிர் தப்புவதற்காக நான் என் தந்தையின் நாட்டிலிருந்து தப்பியோடிவந்தேன்."



இந்த வரலாற்றைக் கேட்டு கடோதரனும், மற்ற இளவரசர்களும் அழகியிடம் அனுதாபம் கொண்டனர். மேலும் அவள் கதையைக் கேட்க ஆவல் கொண்டனர். அவளுக்கு எல்லாவித உதவியும் செய்வதாக வாக்களித்து அவள் வரலாற்றைக் கூறும்படி கேட்டுக் கொண்டனர். அதன் பேரில் அழகி தன் சரித்திரத்தை விரிவாகக் கூறினாள்:—

"தேரீபரம் என்னும் பெரிய தீவின் அரசர் என் தந்தை. நான் அவருடைய ஒரே பெண். தனக்கு ஒரு ஆண் குழந்தை வேண்டும் என அவர் பெரிதும் விரும்பினாராயினும், என்னிடம் உள்ள அபிமானம் அவருக்குச் சற்றும் குறையவில்லை. என்னை மிக்க செல்வமாக வளர்த்து வந்தார். தனக்குப் பின் நாட்டை நானே ஆளவேண்டியவளாகையால் அதற்கேற்ற பயிற்சியை எனக்கு அளித்து வந்தார்.

ஒரு நாள் அவர் வேட்டையாடச் சென்றிருந்தார். ஒரு காட்டுக் கழுதையைத் துரத்திக் கொண்டு வெகு தூரம் போய்விட்டார். அவருடைய வேலையாட்கள் பின் தங்கிவிட்டனர். இருட்டி விட்டது. எங்கே போவது என்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தார். எங்கும் மனித நடமாட்டமே இல்லை. வழியும் தெரியவில்லை. சற்றுத் தூரத்தில் தெரிந்த வெளிச்சத்தை நோக்கிச் சென்றார். அருகில் சென்று பார்த்தவுடன் அவ்வெளிச்சம் ஒரு குடிசைக்குள் எரிந்த தீயிலிருந்து கிளம்பிய ஒளி என்று தெரிந்தது! இன்னும் அருகே சென்றதும் குடிசைக்குள் ஒரு கொடிய கரு நிற அரக்கன் ஒரு காளை மாட்டைத் தீயில் சுட்டுத் தின்று கொண்டிருந்த பயங்கரக் காட்சி தென்பட்டது. குடிசையின் ஒரு மூலையில் ஒரு அழகிய பெண் கண்ணும் கண்ணீருமாய்க் கட்டுண்டு கிடந்தாள். அவள் கைகள் கட்டப்பட்டிருந்தன. அவளருகில், அவளுடைய இரண்டு வயது ஆண் குழந்தை தன் தாயார் அழுவதைப் பார்த்துத் தானும் அழுது கொண்டிருந்தது.

அந்த அனாதைப் பெண்ணையும் அவள் குழந்தையையும் கண்டு என் தந்தை பரிதாபப் பட்டார். அவர்களுக்கு என்ன நேரப் போகிறதோ என்று அவர் மிகவும் கவலைப் பட்டார். ஆனால் திடீரென்று உள்ளே சென்றால் அரக்கன் தன்னைக் கொன்று

விடுவான் என்று பயந்து, சமயம் பார்த்துக்கொண்டு குடிசைக்கு வெளியில் நின்றுகொண்டிருந்தார். அரக்கன் தன்னுடைய உணவை முடித்துக்கொண்டு அந்தப் பெண்ணருகே சென்றான். கோரமான தன்னுடைய பற்களை வெளியே காட்டிச் சிரித்தான். அந்தப் பெண்ணும் அவள் குழந்தையும் நடுங்கினார்கள். என் தந்தையும் கூட நடுங்கிப் போனார். அரக்கன் அந்தப் பெண்ணுடன் பேசத் தொடங்கினான். அவன் பேசியது என்னவென்பது கொஞ்சங்கூட விளங்கவேயில்லை. அவன் என்ன பேசுகிறான் என்பதைக் கேட்க விரும்பினார் என் தந்தை. சத்தம் போடாமல், மூச்சைப் பிடித்துக்கொண்டு சற்றுக் கிட்ட நெருங்கி அவர்கள் பேசுவதை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தார்." (தொடரும்)

மாய எண் 7

ஓர் எண்ணை எழுதுங்கள். உதாரணமாக	5
அதை இரண்டால் பெருக்கவும்	10
அத்துடன் 5-ஐச் சேர்க்கவும்	15
அத்துடன் 12-ஐக் கூட்டவும்	27
அதில் மூன்றைக் கழிக்கவும்	24
மீதியைப் பாதியாக்குங்கள்	12
முதலில் எழுதிய எண்ணைக் கழியுங்கள்	7

நீங்கள் முதலில் எந்தத் தொகையை எழுதினாலும் கடைசியில் இந்த 7தான் விடையாக வரும். 7க்கு மந்திர சக்தி இருப்பதுபோல் தோன்றுகிறதல்லவா?

பரீட்சையில் தேறிய பெண்

வெகுகாலத்துக்கு முன்பு ஒரு அரசகுமாரன் இருந்தான். அவன் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டான். உடனே அந்த தேசத்திலிருந்த அழகிகளையெல்லாம் வரவழைத்தான். அவர்களுக்கு ஒரு பரீட்சை வைத்தான். அந்தப் பரீட்சையில் தேறினால் அவர்களைக் கல்யாணம் செய்துகொள்ளுவதாகச் சொன்னான். ஆனால் பரீட்சையில் யாரும் தேறவே இல்லை.

கொஞ்ச காலம் கழிந்தது. ஒரு நாள் மற்றொரு அழகி வந்தாள். அவள் அரசகுமாரனிடம் சென்றாள். "இளவரசனே, நான் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள வந்திருக்கிறேன்" என்றாள்.

"அப்படியா!" என்று சொல்லிவிட்டு, இளவரசன் தன்னுடைய சேவகனை அழைத்தான். "அடே, பரீட்சையில் இவள் தேறுகிறாளா பார்!" என்றான்.

சேவகன் அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு ஒரு அறைக்குச் சென்றான். அங்கே ஒரு அழகிய சப்ரமஞ்சக் கட்டில் இருந்தது. சேவகன் அதன்மீது ஐந்தாறு பாய்களை விரித்தான், அதற்கு மேலே மூன்று மெத்தைகளை விரித்தான். அதற்கு மேலே மிகவும் மென்மையான ஒரு கம்பளத்தை விரித்தான். பிறகு அவளுக்குத் தெரியாமல் தன் சட்டைப் பையிலிருந்து ஏதோ ஒரு பொருளை எடுத்தான். அதை மெத்தைக்கு அடியிலே மறைத்து வைத்தான். பிறகு அவளைப் பார்த்து, "அப்பா, தூங்கு. காலையில் எழுந்து நீ இளவரசரைப் பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

விடிந்தது. இளவரசன் அங்கு வந்தான். அந்தப் பெண்ணைப் பார்த்து, "நன்றாகத் தூங்கினாயா?" என்று கேட்டான்.

அந்தப் பெண் மிக்க களைப்புடன் காணப்பட்டாள்.

"நேற்றிரவு கண்ணை மூடவே இல்லை. ஏதோ என் உடம்பை உறுத்திக்கொண்டே இருந்தது" என்றாள்.

இளவரசனுக்கு மிக்க சந்தோஷம் உண்டாயிற்று. "பரீட்சையில் நீ வெற்றியடைந்துவிட்டாய்!" என்றான்.

அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

இளவரசன் விஷயத்தை விளக்கிச் சொன்னான்: "என்னைக் கல்யாணம் செய்துகொள்ள வந்த பெண்களை இந்தப் படுக்கையில் படுத்துத் தூங்கச் சொல்வேன். அவர்களும் ஆனந்தமாகப் படுத்துத் தூங்குவார்கள். நீ ஒருத்திதான் தூங்கவில்லை. நீ தூங்காததற்குக் காரணம் என்ன தெரியுமா?" என்று கேட்டுவிட்டு, இளவரசன் மெத்தைக்குப் பின்னாலே மறைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று குன்றுமணிகளை எடுத்துக் காட்டினான். "உன்னைப் போல மென்மையான ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வதற்காகத்தான் நான் இத்தனை காலமும் காத்துக்கொண்டிருந்தேன்" என்றான்.

இருவருக்கும் கல்யாணம் வெகு சிறப்பாக நடந்தது. ராஜகுமாரி அந்தக் குன்றுமணிகளை எடுத்துத் தன்னுடைய பெட்டியில் பத்திரமாக வைத்து அடிக்கடி பார்த்து மகிழ்ந்து வந்தாள்.

எட்டயபுரத்தில் பாரதி விழா

பகீரதன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

"எப்பொழுதுமே மேலே இருப்பவர்களுக்கு ஆபத்து வந்து விடுகிறது. இதை உத்தேசித்துத்தான் புத்திசாலிகள் எல்லாம் கீழேயே இருந்து விடுகின்றனர். இப்பொழுது பாருங்கள். மேடைமீது இருப்பவர்கள் இடத்தைக் காலி பண்ணி விட்டுக் கீழே இறங்க வேண்டியிருக்கிறது. மேடை காலியானதும் ஸ்ரீமதி கே.பி. சுந்தராம்பாள் அவர்கள் இங்கு வந்து கச்சேரி தொடங்குவார்கள்" என்று 'கல்கி' ஆசிரியர் கூறியதும் ஏற்பட்ட கரகோஷ ஆரவாரத்தினால் விழாப் பந்தலுக்கு ஆபத்து வரவில்லை. ஆனால் மேடைமீது இருந்தவர்கள் மட்டும் அவசரம் அவசரமாக மேடையைக் காலி செய்து விட்டுக் கீழே இறங்கினார்கள்.

ஸ்ரீமதி சுந்தராம்பாள் அவர்கள் தம்முடைய பக்க வாத்திய கோஷ்டியுடன் மேடைமீது வந்து அமர்ந்து சபையோருக்கு வணக்கம் செலுத்தி விட்டுக் கச்சேரியைத் தொடங்கினார்.

எட்டயபுரத்தில் பாரதியாருக்கு ஒரு ஞாபகார்த்த மண்டபம் கட்டும் திட்டத்தையே துவக்கி வைத்தவர் ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்கள்தான். பலவருஷங்களுக்கு முன்னால் ஸ்ரீமதி சுந்தராம்பாள் செய்த கச்சேரியின் மூலம் கிடைத்த ரூபாய் ஆயிரத்தைந்நூறு பாரதி மண்டபத்துக்கு அஸ்திவாரம் காட்ட உதவியது. எனவே, ஸ்ரீமதி சுந்தராம்பாள் அவர்களிடம் எட்டயபுரம் வாசிகள் விசேஷ மரியாதையும் அபிமானமும் கொண்டிருப்பதில் வியப்பில்லை அல்லவா?

"நல்ல நாள் வந்ததம்மா! பாரதி சொன்னதெல்லாம் பலித்ததம்மா!" என்ற பாட்டை ஸ்ரீமதி சுந்தராம்பாள் பாடியபோது எட்டயபுரம் வாசிகள் பலமான ஆரவாரம் செய்து தங்கள் உற்சாகத்தைத் தெரியப்படுத்தினார்கள். அதிலும், அந்தப் பாட்டின் சரணத்தில், "எட்டயபுரத்தில் பாரதி மண்டபம் எழுந்ததம்மா!" என்று ஸ்ரீமதி சுந்தராம்பாள் பாடியபோது சபையோரின் உற்சாகம் கட்டுமீறிக் கரை புரண்டு ஓடியது. இன்னும் "ஜயமுண்டு பயமில்லை" "ஆடுவோமே" "தோன்றி நிகழ்ந்தது" "உலகத்து நாயகியே!" முதலான பல பாரதியின் அமர கீதங்களையும் பாரதியார்மீது இயற்றிய பல அருமையான பாடல்களையும் உணர்ச்சியுடனும் உற்சாகத்துடனும் உருக்கத்துடனும் ஸ்ரீமதி சுந்தராம்பாள் பாடிச் சுமார் மூன்று மணி நேரத்துக்குமேல் அபாரமான கச்சேரி செய்தார். ஸ்ரீமதி சுந்தராம்பாளின் கச்சேரி இந்த வருஷத்து எட்டயபுரம் பாரதி விழாவுக்கே ஒரு தனிச் சிறப்பை அளித்தது.

ஸ்ரீமதி சுந்தராம்பாளின் பாட்டுக்கு ஏற்றபடி திருச்சி ஸ்ரீ கணேசப் பிள்ளையின் வயலினும் கல்பாத்தி ஸ்ரீ ராமநாதனின் மிருதங்கமும் ஆலங்குடி ஸ்ரீ ராமச்சந்திரனின் கடமும் மிக அருமையாக அமைந்திருந்தன.

கல்பாத்தி ராமநாதனும் ஆலங்குடி ராமச்சந்திரனும் சிறந்த தேசபக்தர்கள்; பாரதி பக்தர்கள். பாரதி மண்டபத்தில் அவர்களுடைய கைங்கரியம் அடிக்கடி நடந்து வருவதைப் பாராட்ட வேண்டும்.

• • •

நாடகமேடையில் ஒரு காட்சி முடிந்தவுடன் இன்னொரு காட்சி வருவதுபோல ஸ்ரீமதி சுந்தராம்பாள் கச்சேரி முடிந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் மேடைமீது ஸ்ரீ வி. வி. சடகோபன் தம்முடைய கோஷ்டியாருடன் வந்து அமர்ந்து விட்டார். "செவிக்கு உணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்" என்ற வள்ளுவரின் வாக்கைக் கடைப் பிடிக்க ஆரம்பித்து விட்டனர் மகாஜனங்கள். பந்தலில் தாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்திருந்தால் இடம் போய் விடுமோ என்று பயந்து ஸ்ரீ சடகோபனின் கச்சேரியில் ஈடுபட ஆரம்பித்து விட்டனர். ஸ்ரீ சடகோபன் காம்பீர்யமும் குழைவும் நிறைந்த குரலில் பாரதியின் பாடல்களைப் பாட ஆரம்பித்த பிறகு யாருக்காவது சாப்பாட்டில் கவனம் செல்லுமா, என்ன? ஸ்ரீ சடகோபன் பாரதியின் பாடல்களை வார்த்தைகளில் கவனம் செலுத்தி, அர்த்தம் மனதில் பதியும்படி; உச்சரிப்பு சுத்தமாகவும், உள்ளத்தில் உணர்ச்சியுடனும் அருமையாகப் பாடினார். ராகமாலிகையாகப் பாடிய பெரியாழ்வார் பாடல் ஒன்றைத் தவிர மற்றவை யெல்லாம் பாரதியின் பாடல்கள்தான். பல பாரதி பாடல்களைப் பல்லவி அநுபல்லவி சரணம் என்ற முறையில் கீர்த்தனங்களாக அமைத்துப் பாடினார்.

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

என்பதைப் பல்லவியாக வைத்துக்கொண்டு காம்போதி ராகத்தில் சவுக்க காலத்தில் "யாமறிந்த மொழிகளிலே" என்னும் பாடலைக் கீர்த்தனமாகப் பாடியது ஸ்ரீ சடகோபனின் அபார கற்பனா சக்தியையும் சங்கீதத் திறனையும் எடுத்துக் காட்டியது. அவ்விதமே, "கண்ணனை ஏதென்று நினைந்தாய்?" என்ற பாஞ்சாலி சபதப் பாடல் வரிகளையும் தோடி ராகத்தில் நல்ல கீர்த்தனமாக அமைத்து விஸ்தாரமாகப் பாடினார். "வில் வினை ஒத்த புருவம் வளைத்தனை வேலவா!" என்ற பாட்டில் ஸ்ரீ சடகோபனின் மருமகளாகிய குமாரி ராஜலக்ஷ்மியும் சேர்ந்து பாடிச் சபையோரைக் குதூகலப்படுத்தினான். "கண்ணன் மன நிலையைத் தங்கமே தங்கம்" என்னும் பாட்டு ஸ்ரீ சடகோபனின் கச்சேரியில் எவரெஸ்டு சிகரமாக விளங்கிற்று.

ஸ்ரீ சடகோபனின் கச்சேரிக்கு மாஸ்டர் டி. என். கிருஷ்ணன் வயலினும் ஸ்ரீ கிருஷ்ண ஐயங்கார் மிருதங்கமும் இடங்களுக்குத் தகுந்தபடி பக்க வாத்தியம் வாசித்துச் சபையோரின் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் பெற்றார்கள். சங்கீத விமரிசன நடையில் சொன்னால், மாஸ்டர் கிருஷ்ணன் வயலினில் வாசித்த காம்போதி சபையோரின் செவிகளில் இன்னமும் ரீங்காரம் செய்து கொண்டிருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

• • •

இரவு மணி பன்னிரண்டு. இரண்டு கச்சேரிகள் முடிந்து விட்டன. ஆனால் கூட்டம் கலைந்ததா? இல்லை. அதற்குப் பிறகும் 'கார்த்திகேயான் கதை' காலக்ஷேபம் கேட்பதற்காகக் காத்திருந்தார்கள்.

ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு மேடைமீது வந்து கார்த்திகான் கதை காலக்ஷேபம் தொடங்குவதற்கு முன்னால் பாரதி மண்டபத்தை வலம் வந்து மண்டபத்துக்குள் பக்தியுடன் நுழைந்து பாரதியின் திரு உருவத்துக்கு முன்னால் சென்று தோள்மீது கிடந்த அங்கவஸ்திரத்தை இடுப்பில் அணிந்துகொண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்ததைப் பார்த்தபோது அவருக்கு மகா கவி பாரதியிடம் உள்ள பக்தியை எண்ணி வியந்தேன். அவர் காலக்ஷேபம் செய்த முறையிலும் அவ்விதமே பக்தி ததும்பிக் கொண்டிருந்தது.

ஸ்ரீ சுப்பு 'கார்த்திகான்' கதையைப் பேச்சாலும் பாட்டாலும் சொல்லிச் சபையோரைச் சில சமயம் உற்சாகத்தினால் மெய் மறக்கச் செய்தார். சில சமயம் உருக்கத்தினால் உலகத்தையே மறக்கச் செய்தார். சில சமயம் சபையோரை ஆனந்தபரவசப் படுத்தினார். சில சமயம் மனம் கசிந்து கண்ணீர் பெருக்கி அழச் செய்தார்.


சேலத்தில் பிறந்த நம் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரைப் பற்றி, "மேற்கு தமிழ்நாட்டில், அர்ச்சுனனும் வந்தான்! அர்ச்சுனனும் வந்தான்!" என்று பாடியபோது ஜனங்கள் குதூகலம் அடைந்தார்கள். அந்த அர்ச்சுனனுக்கு, "காண்டீபம் உண்டு, கையெழுத்துப் பேனு" என்ற அடுத்த அடியைப் பாடியபோது, சபையோரின் உற்சாக ஆரவாரம் வானளவை எட்டியது.

பண்டித மோதிலால் நேரு தம்முடைய 'புதல்வர் காட்டிய வழி'யைப் பின்பற்றத் தீர்மானித்த கட்டத்திலும், ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் குதிரைமீது ஏறிவந்த கட்டத்திலும் சபையோர் பரவசமடைந்தார்கள். கார்த்திகானைப் பாதகன் கொன்ற கட்டத்

ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள்



ஸ்ரீ வி. வி. சடகோபன்



கொத்தமங்கலம் ஸ்ரீ சுப்பு



தைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. இப்போது அந்தக் கட்டத்தை நினைத்தாலும் எனக்குக் கண்ணில் கண்ணீர் ததும்புகிறது.

காலக்ஷேபத்தின் ரஸம் குன்றாமல் 'ஜிமிக்கி' என்னும் வாத்தியத்தை அநுயாசமாக வாசித்த ஸ்ரீ ராஜாராவுக்குச் சபையோர் 'சபாஷ்' போட்டனர்.

ஸ்ரீ சப்புவின் காலக்ஷேபம் முடிவதற்கு இரவு மணி இரண்டரைக்கு மேலாகிவிட்டது. அவ்வளவு நேரமும் பந்தல் கொள்ளாது முண்டியடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தவர்களும் பந்தலுக்கு வெளியே சுவர் வைத்தது போல நின்று கொண்டிருந்தவர்களும் "ஏதடா, மறுநாள் பொழுது விடிந்தவுடன் அதிகாலையிலிருந்தே நடக்கப் போகும் விழாவுக்கு வரவேண்டுமே" என்ற கவலையே கொஞ்சங்கூட இல்லாமல் மிகுந்த உற்சாகத்துடன் இருந்து 'காந்திமகான் கதை'யைச் சாங்கோபாங்கமாகக் கடைசி வரை கேட்டுவிட்டே சென்றனர். இரவு இரண்டரை மணிக்குப் பாரதி மண்டபப் பந்தலில் பத்தாயிரம் ஜனங்கள் கூடியிருந்தார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

• • •

மறுநாள்; செப்டம்பர் 12-ம் தேதி. பாரதித் திருவிழாவின் இரண்டாவது நாள்.

அன்று அதிகாலையில் பலபலவென்று கிழக்கு வெளுத்துக் கொண்டிருக்கும் போதே, சூரியனின் பொற் கிரணங்கள் எட்டயபுரத்தின் மண்ணைத் தொட்டுத் தழுவ ஆரம்பிக்கும்போதே விழாப் பந்தலுக்கு ஜனங்கள் சாரை சாரையாகச் சாலையோடு வர ஆரம்பித்து விட்டனர். 'பாம், பாம்' என்று மோட்டார்கார்களில் வந்தனர். 'சட, சட' வென்று ஜட்கா வண்டியில் வந்தனர். 'ஜல், ஜல்' என்று இரட்டை மாட்டு வில் வண்டியில் வந்தனர். 'ஜாம், ஜாம்' என்று பெருமையுடன் நடந்து வந்தனர். ஆண்களோடு, பெண்களும் குழந்தைகளும் முதியோர்களுமாகக் குதூகலத்துடன் வந்து கூடிவிட்டனர்.

சுமார் எட்டு மணிக்குத் தலைவர்கள் விழாப் பந்தலின் மேடைமீது வந்து அமரும்போது கூடியிருந்த மக்கள் கை தட்டி கரகோஷம் செய்து வரவேற்றனர். மேடைமீது நின்று சிவப்பு, பச்சை, மஞ்சள் முதலிய விதம் விதமான புஷ்பங்களால் அலங்காரம் செய்து தெய்விக மணம் கமழ்ந்து கொண்டிருந்த விழாப் பந்தலில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் அமர்ந்திருந்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

மேடைமீதும் பந்தலிலும் அமர்ந்திருந்த பிரமுகர்களும் மகாஜனங்களும் விழா ஆரம்ப

விதம் விதமான புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த பாரதி விழாப் பந்தலில் பாரதி பக்தர்கள் நிறைந்திருந்த காட்சி



மான எட்டு மணியிலிருந்து மத்தியானம் இரண்டு மணி வரையில் மொத்தம் ஆறு மணி நேரமும் ஆர்வத்துடனும் குதூகலத்துடனும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

"நேற்று நடந்த கோலாகலமான கூட்டத்தில் யார் எதைச் செய்வது என்ன பேசுவது என்று தெரியாமல் இன்பத்தில் ஆழ்ந்து விட்டோம். இன்று பாரதியைப் பற்றியும் அவருடைய கவிதைகளைப் பற்றியும் பாரதி அன்பர்கள் பலர் பேசப் போகிறார்கள். இப்பொழுது சித்தனை ஆசிரியர் ஸ்ரீ அ. சீனிவாச ராகவன் பேசுவார்" என்று விழாத் தலைவர் ஆன்றான கவிஞர் ஸ்ரீ வே. ராமலிங்கம் பிள்ளை சொன்னவுடன் ஸ்ரீ சீனிவாசராகவன் 'ஜம்'மென்று 'மைக்'கின் முன் வந்து நின்று பேசத் தொடங்கினார்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந் நாடே" என்ற பாரதியின் பாடலை வரி வரியாக எடுத்துச் சொல்லிப் பாரதியின் விசாலமான மனோபாவத்தையும் சிறந்த தேச பக்தியையும் எல்லாருடைய உள்ளத்திலும் சிந்தனையைத் தூண்டும்படி ஆசிரியர் பேசினார். பாரதியின் பாடலிலேயே நின்று நிலைத்து உணர்ச்சியுடன் பேசினார். அவர் பேசிக் கொண்டே இருக்கும்போது ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய தாயும் தந்தையும் சிறு குழந்தைகளாக இருந்து விளையாடி மழலை பேசி மகிழ்ந்து குலாவியதை மனம் குளிரக் கண்டு களித்தார்கள். அவர் செய்த அந்த அருமையான இலக்கியப் பிரசங்கத்தை அப்படியே எழுதத் தமிழ் சுருக்கெழுத்துக் கற்றுக் கொள்ளவில்லையே என்று மிகவும் வருத்தப்பட்டேன்.

பின்னர் ஸ்ரீ அ. முத்துசிவன் மேடைமீது தோன்றிப் பேச ஆரம்பித்தார். கடகடவென்று தங்கு தடையில்லாமல் காவேரியாற்று வெள்ளம்போலப் பேசினார். அமரகவி பாரதியின் பாடல்களின் கருத்துக்களை நீல வானத்தில் நட்சத்திரத்தை இறைத்தது போல அங்கங்கே வாரி இறைத்துக் கொண்டே பேசினார். வன்மையும் ஓட்டமும் உள்ள தமிழில் பாரதியின் பெருமையைப் பற்றி அருமையாகச் சொன்னார்.

"தெல்லைச் செய்தி" ஆசிரியர் ஸ்ரீ சோமயாஜுலு பாரதியின் தத்துவப் பிரசங்கம் செய்யும்போது மக்கள் நாட்டையும் வீட்டையும் மறந்து, மனைவி மக்களை மறந்து, மனித சஞ்சாரமில்லாத காட்டிற்குச் சென்று அங்கு மரங்களும் இன்ப மலர்ப் பூஞ்செடிகளும் கொடிகளும் மனிதனுடைய தயவே



கம்பன், காளிதாஸன், தாகூர், ஷேக்ஸ்பியர் ஆகிய நான்கு உலக மகா கவிகளின் படங்களைப் பாரதி விழாவில் திறந்து வைத்த உணவு மந்திரி கனம் ரோச் விக்டோரியா.

இல்லாமல் தானே செழித்து வளர்வதைப் பார்த்து வியந்து 'தெய்வம் உண்டு' என்று எண்ணி மகிழ்ந்தனர்.

இந்தச் சமயத்தில் தொண்டு கிழவர் ஒருவர் ஒலிபெருக்கியின் முன்னால் வந்து நின்றார். பல்லுடன் பார்வையும் இழந்தவராகத் தோன்றியது. ஆனால் முகத்தில் தேஜஸ் ஜொலித்தது. இவர்தான் பாரதியாரின் தாய்மாமனான ஸ்ரீ சாம்பசிவய்யர் என்றும், கவியரசர் பாரதியார் கீதங்கள் சிலவற்றை இவர் பாடுவார் என்றும் சபைத் தலைவர் தெரிவித்தார்.

"துணிவெளுக்க மண்உண்டு,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
மணிவெளுக்க சாணையுண்டு,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
மனம்வெளுக்க வழியில்லை,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!"

என்ற மகாகவி பாரதியின் 'முத்துமாரி' பாட்டை ஸ்ரீ சாம்பசிவய்யர் சக்தி வாய்ந்த கணீர் என்ற குரலில் ஆவேசமாகப் பாடினார். பாரதியாரை அறிந்தவர்கள் மற்றவர்களிடம் "பாரதியார் இப்படித்தான் பாடு

வார்! இப்படித்தான் பாடுவார்!" என்று தெரிவித்து மகிழ்ந்தார்கள்.

பின்னால் "கல்கி" ஆசிரியர் நன்றி கூறும் போது, "வசதிகள் மிகக் குறைவாயுள்ள இந்த எட்டயபுரத்தில் வந்து இவ்வளவு பிரயத்தனம் செய்து பாரதி விழாக் கொண்டாடுவானேன் என்று சிலர் கேட்கிறார்கள். பாரதியாரின் மாமாவான ஸ்ரீ சாம்பசிவய்யர் இங்கே ஜீவியவந்தராக இருக்கிறார் என்னும் ஒரு காரணத்தை முன்னிட்டே இந்த எட்டயபுரத்தில் பாரதி விழாவைக் கொண்டாடலாம் அல்லவா?" என்று கூறியதைச் சபையோர் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்று ஆமோதித்தார்கள்.


ஸ்ரீ சாம்பசிவய்யர் இன்னும் நெடுங்காலம் வாழ்ந்து கவியரசர் பாரதியார் பாடும் 'பாணி'யை நமக்கு ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும்படி இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.


முதல்நாள் திருவிழாவில் சூரிய பகவான் தன்னை மறந்து விழாவில் கலந்து கொண்டதுபோல இன்றையத் திருவிழாவில் வருண பகவான் வந்து சிறு தூற்றல்கள் மூலம் கலந்துகொண்டார். வருணனின் வரவைக் கூடக் கண்டு கலங்காது ஜனங்கள் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். காரணம் ரஸிகமணி ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் அப்பொழுது பேசிக் கொண்டிருந்தபடியால்தான்.

"கண்ணன் மனநிலையைத் தங்கமே, தங்கம்!
— அடி தங்கமே, தங்கம்!
கண்டுவர வேணுமடி— தங்கமே தங்கம்!"

என்ற பாரதியாரின் பாட்டை உணர்ச்சியுடனும், உற்சாகத்துடனும், பாவம் விளங்கும்படி ஸ்ரீ டி. கே. சி. அவர்கள் பாடிக் காண்பித்தபோது சபையோர் 'கலகல' வென்று சிரித்தனர். சில சமயங்களில் 'சபாஷ்!' 'சபாஷ்!' என்று ஆர்ப்பரித்தனர். 'சடசட' வென்று கரகோஷமும் செய்து மகிழ்ந்தனர். ரஸிகமணி அவர்கள் பேசிய முக்கால் மணி நேரமும் பாம்பாட்டியின் முன் நின்று ஆடும் பாம்புபோல அந்த மாபெரும் சபை ஆடிக்கொண்டிருந்தது.

பாரதி விழாவில் கலந்து கொள்ள ஆர்வத்துடன் விரைந்து வந்த மகா ஜனங்கள்.





பாரதி விழாவில் "சுதந்திர உதயம்" என்னும் வில்லுப் பாட்டுக் கச்சேரி செய்த சாத்தூர் மாணவர் கோஷ்டி.

புயலும் மழையும் கலந்து அடிப்பது போன்ற பெரிய குரலில் காரைக்குடி ஸ்ரீ சா. கணேசன் பேச ஆரம்பித்தார்.

"கவிஞர் பாரதியை ஒரு சாதாரண மனிதருக்கு மரியாதை செய்வதுபோல பாரதியார் என்று கூப்பிடுவது எனக்குப் பிடிக்கவில்லை. பாரதியே 'கம்பன்', 'வள்ளுவன்' என்றுதான் பாடியிருக்கிறான். ஆகையால் 'பாரதி பாடினான்', 'பாரதி சொன்னான்' என்று சொல்லுவதுதான் பாரதிக்குப் பெருமையளிப்பதாகும்" என்று கூறினார் காரைக்குடி கணேசர்.

பாரதியாரின் சகோதரர் ஸ்ரீ விசுவநாத ஐயர் அவர்கள் பாரதியின் பாடல்கள் சிலவற்றை அழகாகப் பாடி பாரதியைப் பற்றி இலக்கியப் பண்புடன் பேசினார்.

"வருவாய் வருவாய் கண்ணா!" என்ற பாட்டை அழகான மெட்டில் இனிமை ததும்ப ஸ்ரீ விசுவநாதய்யர் பாடியபோது, "தாங்கள் சங்கீத வித்வான் ஆகியிருக்க வேண்டியது; தவறி, பள்ளிக்கூட ஆசிரியர் ஆகிவிட்டார்கள்" என்று 'கல்கி' ஆசிரியர் அத்தாட்சி அளித்தார்.

பாரதியின் ஞாபகார்த்த மண்டபத்தைக் கட்டும் திருப்பணியில் ஈடுபட்டிருந்த ஓவர்சியர் ஸ்ரீ என். எம். ராமய்யருக்கும் ஸ்ரீ கோபால மேஸ்திரிக்கும் பாரதி சங்கத்தின் சார்பாக உணவு மந்திரி கனம் ரோச் விக்டோரியா அவர்கள் நற்சாட்சிப் பத்திரம் வழங்கியபோது ஜனங்களும் கைகளைப் பலமாகத் தட்டி அத்தாட்சி தந்தனர்.

சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இளைஞர் ஸ்ரீ ஹரிஹர சுப்ரமணியத்தின் பேச்சு மணியாக இருந்தது. நாட்டின் உணவு நெருக்கடியில் கவர்னர் ஜெனரல் ராஜாஜி அவர்களும் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு அவர்களும் செய்துவரும் உற்பத்திப் பெருக்க இயக்கத்தைக் குறிப்பிட்டார். சுதந்திரத்தின் மேன்மையைப் பற்றிப் பல பாடல்கள் பாடிய பாரதியார் சுதந்திரம் வந்த பிறகு நாம் யாருக்கு வணக்கம் செலுத்த வேண்டும் என்று பாடியிருப்பதைச் சபையோருக்குச் சுட்டிக் காட்டினார்.

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்"

என்ற பாரதியின் மணிவாசகத்துக்கு மதிப்புக் கொடுத்துக் காரியத்தில் ஈடுபடும்படி அங்கே கூடியிருந்தவர்களைக் கேட்டுக் கொண்டு

★ பாரதி விழா சம்பந்தமான புகைப் படங்கள் உதவியவர்கள்: சென்னை சர்க்காரின் விளம்பர இலாகா காரியாலயத்தார்.

பிரசங்கத்தை வெகு கச்சிதமாக முடித்ததைச் சபையோர் பெரிதும் பாராட்டினர்.

தான் குற்றாலத்தில் ரஸிகமணி அவர்களின் வீட்டில் அருமையான தோசையுடன் கம்பன் காவியத்தையும் சேர்த்து ரஸித்து மகிழ்ந்ததை வெகு நயமாக எடுத்துச் சொல்லிவிட்டுத் தமிழ் நாட்டில் தமிழ் வளர்க்கும் பெரியார்கள் கொச்சைத் தமிழையும் குறைவான ஆங்கிலத்தையும் கலந்து பேசித் தமிழைக் கொலை செய்வதை நகைச் சுவையுடன் கூறிக் கண்டனம் செய்துவிட்டுக் கூடியிருந்த மக்களையெல்லாம் "பாரதி வாழ்க!" என்று விண்ணதிர கோஷமிடும்படி செய்தார், தேச பக்தத் தியாகியான ஸ்ரீ மேகநாதன்.

விழாத் தலைவர் ஆஸ்தான கவிஞர் நாமக்கல் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை முடிவுரையாகச் சில வார்த்தைகள் சொன்ன பிறகு 'கல்கி' ஆசிரியர் பாரதி விழாவில் பங்கெடுத்துக்கொண்ட எல்லாருக்கும் நன்றி கூறினார். பாரதி விழாவும் இனிது முடிந்தது.

முடிந்துவிட்டதா? இல்லை! அதற்குப் பிறகும் ஒரு நிகழ்ச்சி இருந்தது. சாத்தூர் எ. வி. மத்தியப் பள்ளி மாணவர்கள் "சுதந்திர உதயம்" என்ற வில்லுப்பாட்டுக் கச்சேரியை நடத்தினார்கள். அடாடா! அந்த இளைஞர்கள் என்ன பாடு படுத்தி விட்டார்கள்! 'பிரமாதம்' 'அபாரம்' என்றெல்லாம் சொன்னாலும் போதவே போதாது. நேரில் கேட்டிருந்தால்தான் அதன் பெருமை விளங்கும்!

* * *

இந்த வருஷத்துப் பாரதி விழாவில் கலந்துகொண்ட எல்லாருக்கும் வரவேற்பும் உபசரிப்பும் பிரமாதமாக இருந்தது. பிரசங்கிகளுக்கும் வித்வான்களுக்கும் பாரதி விழாவில் பூமாலை சூட்டி மரியாதை செய்தார்கள். நன்றாகப் பேசிய சிலருக்கு அவர்களின் பேச்சைக் கேட்டு மயங்கி மாலை போட மறந்துவிட்டார்கள். ஆனால் பேசாமல் சும்மா இருந்தவர்களுக்குச் சில சமயம் இரண்டு மாலைகள் விழுந்தன!

மாலை மட்டுந்தான் போட்டார்களா? இன்னும் பல உபசாரங்களும் செய்தார்கள். பாரதி விழாவுக்காக எட்டயபுரம் வந்திருந்த தலைவர்களுக்கும் பாரதி சங்க அங்கத்தினர்களுக்கும் ஸ்ரீ மாரியப்ப நாடார் பாடசாலையிலும் அவருடைய வீடுகளிலும் ஜாகை வசதி செய்திருந்தது. ஸ்ரீ மாரியப்ப நாடார் செய்துகொடுத்த சௌகரியங்களையும் செய்த உபசாரங்களையும் மறக்கவே முடியாது.

விழா சம்பந்தமான பந்தல் அலங்காரங்களை மிகத் திறமையாகச் செய்திருந்த புகழுக்கு உரியவர்கள் டாக்டர் சீனுவாசன், ஸ்ரீ கே. பி. எஸ். நாராயணன், ஸ்ரீ பி. கே. வி. எஸ். மணி ஆகியவர்கள்.

வெளியூர்களிலிருந்து வந்திருந்தவர்களுக்கும், பாரதி சங்க அங்கத்தினர்களுக்கும், தலைவர்களுக்கும் சத்திரம் போன்ற தம்முடைய பெரிய வீட்டைக் காலி செய்து சாப்பாடு வசதிகளை ஒழுங்காகக் கவனித்து வந்த ஸ்ரீ டி. பி. சுப்பையாவையும் அவருக்கு உதவியாக இருந்த ஸ்ரீ கைலாசம், ஸ்ரீ சாமிநாதன் முதலியவர்களையும் பாராட்ட வேண்டும். சிட்டுக்குருவி போலப் பறந்து பறந்து கன குஷியுடன் பல காரியங்களைச் செய்து கொண்டிருந்தார் ஸ்ரீ சுப்பையா.

பாரதி விழா சம்பந்தமான எல்லா ஏற்பாடுகளையும் முன் நின்று செய்து வந்த ஸ்ரீ மு. கந்தசாமிச் செட்டியாரின் சேவையைச் சொல்லி முடியாது.

வெளியூரிலிருந்து வந்த பாரதி அன்பர்களைக் கோவில்பட்டியிலிருந்து எட்டயபுரம் ஏற்றி வர இனாமாகவே இரண்டு பஸ்களைக் கொடுத்து உதவியதுடன் தமது கார்களில் ஒன்றையும் கொடுத்துப் போக்குவரத்துக் கஷ்டம் தோன்றாமல் செய்து பாரதி விழாவைச் சிறப்பித்த "சந்திரா பஸ் ஸர்வீஸ் கம்பெனி" சொந்தக்காரர் ஸ்ரீ வீராசாமி நாடார் அவர்களின் தாராளத்தையும் உயர்ந்த பண்பாட்டையும் எவ்வளவு பாராட்டினாலும் போதாது.

தினந்தோறும் பத்திரிகையைப் பிரித்தால் "ஜமீன்தாரி ஒழிப்பு"ச் செய்தி வந்து கொண்டிருக்கும் இக் காலச் சூழ்நிலையில், எட்டயபுரத்துப் புராதன ஜமீன்தாரியின் தலைவரான ஸ்ரீ எட்டப்ப மகாராஜா அவர்கள் இந்த வருஷத்துப் பாரதி திருவிழாவில் பரிபூரண உற்சாகத்துடன் ஈடுபட்டிருந்தது அனைவருக்கும் மகிழ்ச்சி தந்தது.

11, 12-ந் தேதிகளில் நடந்த 'பாரதி விழா' நிகழ்ச்சிகளைத் திருச்சி அகில இந்திய ரேடியோ நிலையத்தார் அஞ்சல் செய்ததைக் கேட்டது பாரதி விழாவில் நேரிலேயே கலந்து கொண்டதுபோல் இருந்தது என்று ரஸிகர்கள் பலர் கூறினார்கள். திருச்சி அகில இந்திய ரேடியோ நிலையத்தாரின் இந்தக் கலைத் திருப்பணிக்குத் தமிழ் நாட்டு ரஸிகர்களின் சார்பில் நன்றி கூறுகிறேன்.

வாழ்க, பாரதி அன்பர்கள்!

வளர்க, பாரதியின் புகழ்!


உஷ்ணம் தாங்க
முடியாதிருக்கும் போது
'ஆஸ்ப்ரோ'
சமனமும் சௌக-
ரியமும் தரும்.
ASPRO
நவீன மானது
பாதுகாப்-
புள்ளது —
விரைவில் வேலை புரிவது
கோடையின் வெப்பம் தாங்காதவர்கள் 'ஆஸ்ப்ரோ'வினல் பெரிதும் சௌகரியமடைவர். இச்சிறிய வில்லைகளின் சமனமூட்டும் சக்தி விரைவில் வேலைபுரிந்து, உஷ்ணத்தினல் பாதகமடைந்த நரம்புகளுக்கு சமனமூட்டுகின்றது. அவர்களது எரிச்சலும், பதற்றமும் நீங்கி அற்புதமான சுகமும் சௌகரியமும் கிடைக்கின்றது. 'ஆஸ்ப்ரோ' இவ்வளவு நன்குக வேலைசெய்வதற்குக் காரணம் அது எப்போதும் இயற்கைக்கே உதவி புரிந்து வருகிறது - விஷமூக்கம் ஏற்படுத்தாது. குழந்தையுங்கூட உபயோகிக்கும்படி அவ்வளவு ஹானியற்றது. 'ஆஸ்ப்ரோ'வை வாங்கிவருவதுபற்றி உங்கள் குடும்பம் முழுவதும் உங்களுக்கு நன்றி செலுத்துவர். சகலவிதமான வலிகளிலும், அசௌக்கியம், சளிப்பு முதலியவற்றிலிருந்தும் அவர்களுக்கு பாதுகாப்பளிக்கும்.
'ஆஸ்ப்ரோ' செய்வது என்ன
கோடைநாள் சளிப்பு,
நரம்பு தளர்ச்சி,
கோடைகால அசௌகரியம்,
தூக்கமின்மை,
தலைவலி,
நரம்பு எரிச்சல்,
முதுகுவலி,
கீல்வாத வலி,
கீல்பிடிப்பு முதலியவற்றை
சீக்கிரமாக நிறுத்தும்.
30 TABLETS As. 15 30 TABLETS
ASPRO
3 வில்லைகள் அணு 1½
30 வில்லைகள் அணு 15

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

267. வில்லை நோக்கினான்!

விபீஷணன் தமையன் ராவணனிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான்—சீதா பிராட்டியை விடுவித்து விடவேண்டும் என்பதாக. அதைக் காது கொடுத்தே கேட்கவில்லை ராவணன். அதோடு நிற்கவில்லை அவன் காரியம். நாட்டை விட்டு உடனே போய் விடவேண்டும் என்று விபீஷணனைப் பார்த்துச் சொல்லி விட்டான்.

என்ன செய்வான் விபீஷணன்? இலங்கைத் தீவை விட்டுக் கடலைத் தாண்டி ராமனுடைய சேனை இருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தான்—ராமனிடம் அடைக்கலம் புகவேண்டும் என்பதாக.

ராமன் விபீஷணனை உடன் பிறந்தவனாக அங்கீகரித்துக் கொண்டான். இனி:

• • •

நேரம் முன் இரவு. மனசில் உள்ள சஞ்சலம் தீர்ந்து அமைதி பெறலாம் என்று கடற்கரைப் பக்கமாகத் தன்னந் தனியாகப் போகிறான் ராமன்.

வெண் மணல் அழகாய்ப் பரந்து கிடக்கிறது. மணலில் உட்கார்ந்தான்.

சிறிது நேரத்தில் சந்திரனும் உதித்தது.

நமக்குத் தெரியும்:

தன் கையினாலேயே கடலைக் கடைந்தவன் என்று புகழக்கூடிய வாலி, அத்தனை பராக்கிரமம் உள்ளவன். அத்தகைய வாலியின் மார்பை அல்லவா தொளைத்தது ராமபாணம்!

வானத்தையே ஊடுருவ ஓங்கி மாதிரி நின்றனவே ஏழு மராமரங்கள், அந்த மராமரங்களும் தொளைபட்டன ராம பாணத்தால்! ராமனும் ராம பாணமும் அப்படிப் பட்டவை.

காந்தொடு பாழிமாக்
　　கடல்க டைந்துளான்
உரந்தொடு,— வானினை
　　உருவ ஓங்கிய
மரந்தொளை, தொளைத்தவன்
　　மார்பில்,— மன்மதன்
சரந்தொடு பாய்ந்தன
　　நிலவின் தாரைவாள்!

[காந்தொடு பாழிமாக் கடல் கடைந்துளான் உரந்தொடு: கையினால் மிகப் பெரிதாய் உள்ள சமுத்திரத்தைக் கடைந்த வாலியின் மார்போடு மாத்திரம் அல்லாமல்; வானினை உருவ ஓங்கிய மரந்தொளை தொளைத்தவன்: வானத்தை உருவும்படி ஓங்கி வரிசையாக நின்ற ஏழு மராமரங்களைத் தொளைத்தவன்: மார்பினில்: தன் அபார சக்தி உள்ள அம்பினால் வளைந்த ராமனது மார்பிலேயே; மன்மதன் சரந்தொடு பாய்ந்த நிலவின் தாரைவாள்: சந்திரனது கிரணங்களாகிய வாள் பாய்ந்தது. அதோடு மன்மதனுடைய பாணமும் பாய்ந்தது— அதாவது, காதல் எண்ணங்கள் மனசில் உதித்தன.

குறிப்பு:—எவ்வளவோ வீரதீரச் செயல் உடையவனாய் இருந்தும் காதல் எண்ணம் வந்த மாத்திரத்தில் தளர்ச்சி உண்டாய் விட்டது ராமனுக்கு என்பது விஷயம்.]

• • •

ராமனுடைய மனசு பின் நோக்கி வெகு தூரம் போய்விட்டது. அயோத்திக்கே போய் விட்டது. சீதையின் அழகிலும் காதலிலும் ஈடுபட்டிருந்த காலத்துக்குப் போய்விட்டது.

பொன்னுடையை மேகலாபரணம் சுற்றி நின்று அழகு செய்ததை அனுபவித்தவன் ராமன். இது செயற்கை அழகு: செயற்கை அழகே ராமனது உள்ளத்தைப் பைத்தியம் பிடிக்கச் செய்தது. அப்படியானால் இயற்கை அழகு என்ன பாடு படுத்தியிருக்கும்!

பணிபழுத்(து) அமைந்தபூண்
　　மடியின் பண்பினான்
பிணிபழுத்(து) அமைந்த(து) ஓர்
　　பித்தின் உள்ளத்தான்,—

அணிபழுத்(து) அமைந்தமுத்(து)
அரும்பும் செய்யவுண்
மணிபழுத்(து) அமைந்தவாய்
மறக்க வல்லனே.

[மணிபழுத்து அமைந்த பூண்: உயர்ந்த வேலைப்பாடுடன் அமைந்த மேகலாபரணத்தை அணிந்த: மடியின் பண்பினால்: மடியின் அழகினால்: பிணி பழுத்து அமைந்ததோர் பித்தின் உள்ளானாதான்: நோய்போல் முதிர்ந்து பைத்தியம் கொண்டது போன்ற காதலுக்கு உள்ளான ராமன்: அணிபழுத்து அமைந்த முத்து அரும்பும்: வெகு அழகாய் வரிசைப் படுத்தி அமைத்த முத்துக்களை ஒத்த சின்னஞ்சிறு பற்கள் வெளியில் தெரியும்படியான: செய்யவுண் மணிபழுத்து அமைந்த வாய்: சிவந்த பிரகாசமான மாணிக்கத்தின் அழகு வாய்ந்த இதழ்களை - புன்சிரிப்போடு கூடிய இதழ்களை: மறக்க வல்லனோ: அப்படியே வந்து முன் நின்றுவிட்டன இதழ்கள்.]

* * *

சீதையின் அழகிய உருவம் மனக் கண்முன் வந்தது; மறைந்தும் போய் விட்டது. பிறகு என்ன நேர்ந்தது?

ராமன் தன் உடலைப் பார்த்தான்; உடல் மெலிந்திருக்கிறது.


ஆனால் வலிமை கொண்ட உயிரானது உடலை விட்டு நீங்கவில்லை என்பதையும் பார்த்துக் கொண்டான்.

உடலினை நோக்கும்; வல்
உயிரை நோக்கும்; வெவ்
இடரினை நோக்கும்: மற்(று)
யாது நோக்குங்கொல்;—
கடலினை நோக்கும் அக்
கள்வன் வைகுறும்
இடரினை நோக்குந்தன்
சிலையை நோக்குமால்

[உடலினை நோக்கும்: மெலிந்த உடலைப் பார்த்தான்: வல் உயிரை நோக்கும்: விடமாட்டேன் என்று பற்றிக் கொண்டிருக்கிற உயிரையும் பார்த்துக் கொண்டான்; அதோடு —வெவ் இடரினை நோக்கும்: தன்னை வதக்கி வாட்டுகிற துன்பத்தையும் பார்த்துக் கொண்டான்: மற்று யாது நோக்கும் கொல்: இந்தனை வேறு எதைக் குறித்துச் செல்லும்! ஆனாலும் கண் பார்த்தது சிலவற்றை. கடலைப் பார்த்தது, ராவணன் தங்கும் நிலைப் பார்த்தது. கடைசியாக தன் அருகே பணவிக்க் கிடந்த வில்லையும் பார்த்தது.]

ராமனை மனவில் உட்காரவைத்துச் சீதையின் ஞாபகத்தை ஊட்டி விரத்தை மனசில் நிலைநிறுத்திய கற்பனை கம்பரது அரிய சிருஷ்டிகளில் ஒன்று.

மூன்று செய்யுள்களும் அதி அற்புதமான இசை நயங்களோடு உணர்ச்சியை எழுப்பக்கூடிய பாவ உருவம் கொண்டவைகளாகும்.



மானேஜர் (குமாஸ்தாவிடம்):— நடந்தால் உடம்புக்கு ரொம்பவும் நல்லது. நீங்கள் மெதுவாக நம் வீட்டுக்கு நடந்துபோய் இந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டு வந்துவிடுங்கள்!
குமாஸ்தா:— சரி, அப்படியே செய்கிறேன், ஸார்!

மானேஜர் (வீட்டுக்குப் போய் விட்டு வந்த குமாஸ்தாவிடம்):— டிரைவரைக் கூப்பிட்டுக் காரைக் கொண்டுவரச் சொல்லும்!......
குமாஸ்தா:— நீங்கள் தான் நடந்தால் உடம்புக்கு நல்லது என்று சொன்னீர்களே. காரை வீட்டுக்கு அனுப்பிவிட்டேன்!

மாயக் கண்ணன்

துஷ்யந்தன்

அழிந்து வரும் ஜமீன்தார் பரம்பரையில் அவர் கடைக்குட்டி. ஆனால் வம்சத்தின் பிறவிக் குணமான பழமைப் பித்தும் டாம்பீகச் செலவும் அவரிடமும் காணப்பட்டன. அவர் ஒரு விசித்திரமான மனிதர். அவரைப் போலவேதான் அவர் பங்களாவிலிருக்கும் சாமான்களும் விசித்திரமானவை. பழமையில் மாறாத நம்பிக்கை கொண்டிருந்தாலும் அவருக்குப் புதுமையிலும் மோகமுண்டு. இதை அவர் வெளியிட்ட மாதிரிகூட விசித்திரமானது.

சுவரில் மாட்டியிருக்கும் அழகிய ரவிவர்மப் படங்களுக்கு நடுவே இத்தாலி தேசத்து வர்ணப் படங்கள் தலை காட்டும். மேஜை மேல் வைத்திருக்கும் நடராஜர் உருவச் சிலைக்குப் பக்கத்தில் கிரீஸ் தேசத்து வீனஸ் கோணி நிற்பாள். இப்படித்தான் அவர் மேல்நாட்டையும் கீழ்நாட்டையும் ஒன்று சேர்த்து வைப்பது வழக்கம். பழமையும் புதுமையும் அங்கே பின்னிக் கிடக்கும்.

எப்போதாவது அந்தப் பக்கம் போக நேரிட்டால் நான் அவரிடம் போய் ஒரு நாழிகையாவது இருந்துவிட்டுத்தான் வருவேன். அன்று நான் போனபோது அவர் இல்லை. வெளியே போயிருந்தார். அவர் நண்பர்களை வரவேற்கும் அறையில் போய் உட்கார்ந்தேன். வழக்கம்போல் சுற்றிலும் ஒரு முறை பார்த்தேன். கீழ்த்திசையின் தெய்வங்களோடு மேல்நாட்டு மோகினிகள் ஒன்று சேரக் காட்சியளித்தார்கள். சிரித்துக்கொண்டே மறுபுறம் திரும்பினேன். அங்கே ஒரு உயர்ந்த சலவைக் கல் பீடத்தின்மேல் அழகான கண்ணன் விக்கிரகம் இருந்தது. முற்றிலும் வெள்ளைப் பளிங்குக் கல்லால் செய்யப் பட்டது. எழுந்துபோய்க் கிட்ட நெருங்கிப் பார்த்தேன். முகத்தில் நல்ல கவர்ச்சி. கையிலே குழல்; வாயிலே உலகத்தை மயக்கும் முல்லைச் சிரிப்பு. சிறிது நேரம் என்னை மறந்து அந்தக் கண்ணன் எழிலுருவில் மயங்கிப் போய் நின்றிருந்தேன். அவர் வந்து என் பின்னால் நின்றது கூடத் தெரியாது. மெதுவாக என் தோளில் அவர் கை வைத்தபோதுதான் திரும்பிப் பார்த்தேன்.

"என்ன, ஸார்! மாயக் கண்ணன் எப்படி இருக்கிறான்? பத்தாயிரம் ரூபாய் ஸார், முழுசாகப் பத்தாயிரம்!" என்று அவர் புன்னகை புரிந்தார்.

உண்மையிலேயே எத்தனை அழகிருந்தாலும் அந்த விக்கிரகத்துக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பது நியாயமாகத் தோன்றவில்லை. என் பிரமிப்பைக் கண்ட அவர் அதைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

"வெறும் அழகுமட்டுமில்லை ஸார்! இது விசித்திரமான விக்கிரகம். இப்படி வந்து உட்காருங்கள், சொல்கிறேன்" என்றார்.

முதலில் இந்த விக்கிரகத்தைச் செய்தவன் கதை ஏதாவது இருக்கும் என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் அவர் சொன்னது ஒரு பயங்கரமான—ஆனால் விநோதமான—ஒரு விஷயம். அவர் முகத்திலே ஒரு மகத்தான உண்மையை வெளியிடும் பாவம் தென்பட்டது. எதிரிலிருந்து கேட்பவர்கள் நம்புவார்களோ என்ற சந்தேகம் அவர் முகத்தில் இல்லை. நிதானமாகச் சொன்னார்:

"ஸார், இதே விக்கிரகம் இரவின் பின் நேரத்தில் ஒரு அதிசயமான காரியத்தைச் செய்கிறது. எல்லோரும் அயர்ந்து தூங்கும் நேரத்தில் இந்தக் கண்ணன் குழலூதுகிறான்! ஆகா! அந்தக் குழலோசையின் இன்ப போதையில்தான் ஒருகால் இந்த லோகமே மயங்கி உறங்கிப் போகின்றதோ என்னவோ? ஆனால் இந்த வேணு கானத்தின் சத்தம் நின்றதும் நடக்கும் காரியங்களைத்தான் என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. கண்ணன் குழலோசை நின்ற மறு நிமிஷமே வாசற் கதவுக்கு வெளியே யாரோ விம்மி அழும் சத்தம் கேட்கிறது. பிறகு தடதடவென்று கதவைத் தட்டுவது போலிருக்கிறது. ஆனால் கதவைத் திறந்து பார்த்தால் யாருமே இருப்பதில்லை. எங்கோ வெகு தொலைவில் யாரோ மறுபடியும் விம்மி விம்மி அழும் சத்தம் கேட்கிறது."

இதைச் சொல்லிவிட்டு ஜமீன்தார் ஒரு முறை அந்தக் கண்ணன் விக்கிரகத்தைப் பார்த்தார். என்னையுமறியாத ஒரு சக்தி என்னை உந்தித் தள்ள நானும் பார்த்தேன். கண்ணன் புவனம் மயக்கச் சிரித்துக் கொண்டிருந்தான்.

"அது சரி, நீங்கள் இந்த ரகசியத்தை வேறு யாருக்கும் சொல்லவில்லையா? இத்

தனை அற்புத சக்தி யுள்ள விக்கிரகம் உங்களிடம் இருப்பதாக என் வெளியில் ஒருவருக்கும் தெரியவில்லை?" என்று என் சந்தேகத்தை வெளியிட்டேன். அவரோ அதை லட்சியம் செய்யவே யில்லை.

"சொல்ல மறந்துவிட்டேன். இந்த விக்கிரகத்தை எனக்கு விற்றவர் இதை யாருக்குமே சொல்லக் கூடாது என்று வாக்குறுதி வாங்கிக் கொண்டார். உங்களுக்குத் தான் முதல் முதலாக வெளியிட்டிருக்கிறேன். நீங்கள் போய் அவரைக் கேட்டு விடாதீர்கள்!" என்றார்.

"யாரிடம் கேட்பது? எனக்கு ஒன்றும் புரியவில்லையே?" என்று கேட்டேன்.

"அடடா, தெரியாதா? உங்கள் ஊர் சர்மாதான் இதை எனக்கு விற்றார். எத்தனையோ பேர் இதைக் கேட்டார்கள். அவர்களுக்கெல்லாம் கொடுக்காமல் எனக்குத்தான் கொடுத்தார். ரொம்ப நல்லவர் ஸார், அவர்!"

என் நண்பர் இதைக் கூறி முடித்ததும் எனக்கிருந்த வியப்பெல்லாம் இரண்டு பங்காக மாறிவிட்டது. சர்மா என் நெருங்கிய நண்பர். அப்படி யிருந்தும் அவர் இதுவரை எனக்கு இந்த மாயக் கண்ணனைப் பற்றிச் சொன்னதே கிடையாது. எல்லாம் எனக்குப் புதிராக இருந்தன. ஒருவழியாக ஜமீன்தாரிடம் விடை பெற்றுத் திரும்பினேன். வந்ததும் நேராக சர்மாவிடம்தான் போனேன்.

"எங்கே இரண்டு நாட்களாகக் காணோம்? வெளியூர் வாசமோ?" என்று கேட்டுக்கொண்டே வந்தார் சர்மா. எத்தனையோ ஆத்திரம் இருந்தாலும் அடக்கிக்கொண்டு மெதுவாகவே பேச்சுக் கொடுத்தேன்.

"ஜமீன்தாரிடம் போயிருந்தேன். அவர்கூட சமீபத்தில் ஒரு கண்ணன் விக்கிரகம் வாங்கியிருக்கிறார். ரொம்ப அழகாயிருக்கிறது" என்றேன்.

சர்மா அதைக் கேட்டு ஒன்றும் ஆச்சரியப் பட்டதாகத் தெரியவில்லை. கடகட வென்று சிரித்தார். பிறகு, "அழகு மட்டும் தானா? வேறொன்றும் விசேஷமில்லையா?" என்று கேட்டுவிட்டு என் மனதின் ஆழத்தை அளந்து பார்ப்பவர் போலக் குறிப்பாகப் பார்த்தார். என் நிலை தர்மசங்கடமாகப் போய் விட்டது. சொல்வதா வேண்டாமா என்ற முடிவுக்கு வர முடியாத நிலையில் சற்று மயங்கினேன். ஆனால் சர்மா என் பதிலுக்குக் காத்திருக்கவில்லை.

"ஸார், நீங்கள் ரொம்ப அவஸ்தைப்பட வேண்டாம். எல்லாம் நான் சொல்கிறேன். அதற்கு முன்னால் ஒரு காரியம் செய்ய வேண்டும் நீங்கள். நேராகப் பம்பாய் மாதுங்காவில் வசிக்கும் ஒரு வடநாட்டு நாட்டியக்காரி வீட்டுக்குப் போய் வரவேண்டும். நான் விலாசமெல்லாம் தருகிறேன். நான் அனுப்பியதாகச் சொல்லுங்கள். பிறகு எங்கும் தாமதிக்காமல் நேராகத் திரும்பி வாருங்கள். வந்ததும் பிரமாதமான விஷயம் ஒன்றை உங்களுக்குச் சொல்வேன். தயவுசெய்து அதுவரை ஒன்றும் மறுவார்த்தை கேட்காமல் இப்பொழுது பம்பாய்க்குப் புறப்படுங்கள்" என்று கூறிவிட்டு எழுந்து போய் ஒரு கடிதமெழுதி விலாசமிட்டு என் கையில் கொடுத்தார். தயங்கியபடியே வாங்கிக்கொண்டேன். எத்தனையோ ஆயிரம் கேள்விகள் கேட்க மனசு துடித்தது. சர்மாவின் முகத்தைப் பார்த்ததும் அத்தனை கேள்விகளும் மனசுக்குள்ளே அமுங்கிப் போய்விட்டன. அவர் கண்களில் ஒரு கவர்ச்சியுண்டு. அது நம்மை ஆட்கொண்டுவிடும். பேசாமல் பம்பாய்க்குப் புறப்பட்டுப் போனேன்.

2

வழி யெல்லாம் ஆயிரம் எண்ணங்கள் தோன்றி மறைந்தன. மாயக் கண்ணன் விக்கிரகம், சர்மா, அந்த வடநாட்டு நாட்டியக்காரி—இப்படி சம்பந்தமற்ற முறையில் நினைவுகள் தடுமாறின. ஒருசமயம் ஏதாவது



சம்பந்தம் இடையில் இருக்குமோ? சர்மா இந்த நாட்டியக்காரியை எங்கே பிடித்தார்? இப்பொழுது ஏன் என்னை அவளிடம் அனுப்புகிறார்?

பம்பாய் வந்தது. என் சிந்தனை கலைந்தது. யந்திர லோகம் வந்த பிறகு சிந்திக்க அவகாசமேது? எல்லையற்ற ஜனத்திரளில் நானும் ஒருவனாகி விலாசத்தில் குறிப்பிட்டிருந்த நாட்டியக்காரியின் இருப்பிடத்தை அடைந்தேன்.

வழக்கமாகத் தன் வர்க்கத்தினருக்கு உள்ள புன்னகையோடு அவள் என்னை வரவேற்றாள். கடிதத்தை வாங்கிப் படித்துவிட்டு, "நீங்கள் சர்மாவிடமிருந்து தான் வருகிறீர்களா?" என்றாள் ஹிந்தியில்.

எனக்குத் தெரிந்த அரைகுறை ஹிந்தி கூட அப்பொழுது வரவில்லை. "ஆமாம்" என்றேன் அழகான தமிழில். அவள் சிரித்தாள். ஆனால் என் ஆச்சரியம் அளவு கடந்துவிட்டது; மறு நிமிஷம் அவள் தனித் தமிழில் பேச ஆரம்பித்தாள்.

"நீங்கள் வந்தது அந்தப் பளிங்குக் கல் சிலையைப் பார்க்கத்தானே! அதோ பாருங்கள், அந்த மேஜையின் மேல் இருக்கிறது....."

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவள் சொல்வது புரியாவிட்டாலும் என் கண்கள் சிலையைப் பார்த்தன. அழகான ஒரு பெண்ணின் சிலை அது. மண்டியிட்டு யாருடைய வருகைக்காகவோ காத்திருக்கும் பாவனையில் இருந்தது. பெண்ணின் கண்களில் மின்னும் ஆர்வத் துடிப்பை அளவிட்டுச் சொல்ல முடியாது. அங்கமெல்லாம் அழகும் ஆர்வமும் பொங்கி நின்றன. உயிர் தானில்லை. இதற்கும் நான் வந்ததற்கும் என்ன சம்பந்தம்? இதைக் கேட்கலாமென்று நினைத்து நான் நாட்டியக்காரியைப் பார்த்தேன். அவள் இதை எதிர்பார்த்தது போல் சொல்ல ஆரம்பித்தாள்.

"சர்மா இதை எனக்கு விற்றபோது ஒரு வாக்குறுதி வாங்கிக் கொண்டார்—இந்தச் சிலையின் ரகசியத்தை யாருக்கும் சொல்லக் கூடாது என்று. நானும் ஒப்புக் கொண்டேன். இப்பொழுது இந்தக் கடிதத்தில் அவரே இதை உங்களிடம் சொல்லச் சொல்கிறார். ஆகவே நீங்கள் கேட்கலாம்."

அவள் குரலில் பெருமையும் அமைதியும் இருந்தன. வியப்பில் மூழ்கியிருந்த நான் இமை கொட்டாமல் அவள் சொல்வதைக் கவனமாகக் கேட்டேன்.

நாட்டியக்காரி சொன்னாள்:

"நீங்கள் ஒருகால் நம்பமாட்டீர்கள். நானே முதலில் இதை நம்பவில்லை. நான் தமிழ் நாட்டில் ரொம்ப நாள் தங்கியிருந்தேன். அப்போதுதான் சர்மா எனக்குப் பழக்கமானார். தமிழ் கூட அவர்தான் கற்றுக் கொடுத்தார். இந்தச் சிலையைப் பற்றி அவர் சொன்னதில் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. பிறகு அவரே சிலையைக் கொண்டுவந்து எனக்குக் கொடுத்தார். ரொம்ப விசித்திரமானது இது.

"சரியாக இரவு இரண்டு மணிக்கு மேல் இந்தப் பெண் சிலை அழ ஆரம்பித்துவிடும். விசித்து விசித்து அழும். ஆவலோடு யாரையோ தேடி ஏங்குவது போலிருக்கும். உடனே வெளிக் கதவைத் திறந்துகொண்டு யாரோ வெளியே போவதுபோலத் தோன்றும். தொடர்ந்து எங்கிருந்தோ குழலோசை கேட்கும். இதெல்லாம் எனக்கு வேடிக்கையாயிருக்கிறது. சில சமயங்களில் கதவைத் திறந்து வெளியே பார்த்திருக்கிறேன். ஆனால் குழலோசை தூரத்தில் கேட்குமே ஒழிய யாரும் இருக்க மாட்டார்கள். அந்தக் குழலோசை கேட்டதும் இந்தப் பெண்ணின் அழுகை நின்றுவிடும். காரணம் எனக்குத் தெரியாது. ஆனால் வழக்கமாக இது நடந்து வருகிறது. இரவின் பின்னேரத்தில் மக்களெல்லாம் உறங்கும்போது இப்படி ஒரு வேடிக்கை நடக்கிறது...அது சரி, உங்களுக்கு வந்தது முதல் நான் டீ கொடுக்கவில்லையே! மன்னியுங்கள்; இதோ வருகிறேன்!" என்று அவள் எழுந்து போனாள்.

நான் சிந்தனையிலாழ்ந்திருந்தேன். ஆமாம், ஜமீன்தார் வீட்டு மாயக்கண்ணன் குழலூதுகிறான். அங்கே பெண்ணின் அழுகுரல் கேட்கிறது. என்ன ஆச்சரியம்! ஒருகால் இவ்விரண்டு சிலைகளுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ? திரும்பி அந்தப் பெண்ணின் சிலையைப் பார்த்தேன். சந்தேகமேயில்லை; அது ராதையின் உருவம்தான். குழலூதும் கண்ணனைத் தேடியலையும் ஆர்வம் அவள் ஒவ்வொரு அங்கத்திலும் துடிதுடித்துக் கொண்டிருந்தது.

ராதை—கண்ணன்—அழகான ஜோடி! இதைப் பிரித்து வைக்க சர்மாவுக்குப் பைத்தியமா? ஏன் இவைகளை வெவ்வேறு இடத்தில் வைத்திருக்கிறார்? இதையெல்லாம் நினைத்தபோது எனக்கே பைத்தியம் பிடித்துவிடும் போல இருந்தது.

நாட்டியக்காரியிடம் பிறகு பேசினதில் அவளுக்கு ஜமீன்தார் வீட்டுக் கண்ணனைப் பற்றி ஒன்றும் தெரியாது என்பதைத் தெரிந்து கொண்டேன். ஆகவே சர்மா திரை மறைவில் என்னவோ செய்கிறார் என்பது விளங்கியது. அதை அறிய வேண்டுமென்ற ஆவல் முன்னே தள்ள ஊருக்கு விரைவில் வந்து சேர்ந்தேன். என் வீட்டுக்குக் கூடப் போகாமல் நேரே சர்மாவிடம் ஓடினேன்.

3

என்னைப் பார்த்ததும் அவர் என் ஆவலைத் தெரிந்து கொண்டிருப்பார். இருந்தாலும் ஒரு விஷமப் புன்னகையோடு, "நாட்டியக்காரி எப்படி?" என்றார்.

"அவள் கிடக்கிறாள்! முதலில் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். ராதையும் கண்ணனும் ஏன் ஒரு இடத்தில் இல்லாமல் பிரிக்கப்பட்டு இருக்கிறார்கள்?" என்று என்னுடைய முதல் கேள்வியைப் போட்டேன்.

சர்மா சிரித்தார். எனக்குக் கோபம் வந்தது. "சிரித்துச் சிரித்துப் பழி வாங்குகிறீரே, ஐயா!" என்று கத்தினேன். அப்போதும் அவர் சிரிக்கத்தான் செய்தார். பிறகு என்னிடம் வந்து என் தோள்களைப் பிடித்து ஒரு நாற்காலியில் உட்கார வைத்தார். அவரும் எதிரில் உட்கார்ந்தார்.

"அவசரப் படாதீர்கள், ஸார்! எல்லாம் உங்களுக்குச் சொல்கிறேன், கேளுங்கள்! ஆனால் யாரிடமாவது போய் இந்த விஷயத்தை வெளியிட்டு விடாதீர்கள். நான் இந்த ஊருக்கு வருவதற்கு முன் உங்களுக்கு என்னைத் தெரியாது. நான் அதற்கு முன்னால் மனத்தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தேன். அப்போது என் நண்பர் ஒருவருக்கும் எனக்கும் ஏற்பட்ட பந்தயத்தின் விளைவுதான் இந்தக் கண்ணனும் ராதையும். நான் வாங்கிய போது இந்த இரண்டு சிலைகளும் ரூபாய் இருபத்தைந்துதான். என்ன, ஆச்சரியமாயிருக்கிறதா! என் நண்பர் கூட ஆச்சரியப்பட்டார். அப்போதுதான் நான் பந்தயம் வைத்தேன். இதே சிலைகளை ரூபாய் இருபதாயிரத்துக்கு விற்று விடுகிறேன் என்று சொன்னேன். அவர் முடியாது என்றார். ரூபாய் நூறு எங்களுக்குள் பந்தயம்!

"என் மனத் தத்துவ ஆராய்ச்சியை உபயோகப்படுத்தத் தீர்மானித்தேன். அப்போது என் வலையில் சிக்கினார் உங்கள் ஜமீன்தார். அவருடைய விசித்திரமான மனப் போக்கு என் காரியத்திற்கு ஏற்றதாயிருந்தது. ஒரு நாள் அவரிடம் சென்றேன். என்னவெல்லாமோ பேசிக் கொண்டிருந்துவிட்டுக் கடைசியில் கண்ணன் சிலையைப் பற்றிச் சொன்னேன். அவர் வியப்பையும் ஆசையையும் கண்டதும் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டது. வெறும் கற்சிலைக்கு மாய சக்தி இருப்பதாகக் கதைத்தேன். ஆமாம், அது கலப்பற்ற பொய். சிலை என்றுமே குழலூதியது கிடையாது. மனிதனின் மனப் பிரமைக்கு எல்லையே கிடையாது. ரூபாய் பத்தாயிரம் கொடுத்து வாங்கும் போது அதற்கு நிச்சயம் என்னவோ தனி சக்தி இருக்கத்தான் வேண்டுமென்று அவன் நினைப்பான். அதேமாதிரிதான் ஜமீன்தாரும் நினைத்தார். நானும் முதல் நாள் அவரை மயக்கவேண்டியிருந்தது. நான் சொன்னபடி இரவின் பின்னேரத்தில் என் கையாள் ஒருவன் எட்ட இருந்து குழலூதி விட்டுக் கதவையும் தட்டினான். முதல் முறையாகையால் அவர் அப்படியே பிரமித்து விட்டார். தூக்க மயக்கத்தில் கண்ணன் சிலையே குழலூதியதாக நினைத்துக் கொண்டார். அதன் பிறகு எனக்குச் சிரமம் ஏற்படவில்லை. அவர் மனம் கண்ணன் குழலூதுகிறான் என்று நினைத்துவிட்டால் பிறகு எப்போதும் அதே எண்ணத்தோடுதான் அது இருக்கும். அந்த நேரத்தில் மனப்பிரமையில் குழலோசை கேட்கத்



தான் செய்யும். இப்படியாக என் மாயக் கண்ணன் உருவாகி விட்டான். இதற்கு நான்மட்டு மல்ல, ஜமீன்தாரின் சூழ்நிலை, அவர் கபடமற்ற சுபாவம், விசித்திர மனப் போக்கு இவைதான் முக்கிய காரணம். இத்தகைய சோதனைகள் அவரைப் போன்றவர்களிடம்தான் பலிக்கும்.

"ஒரு வகையாக ஒரு சிலை விற்றுவிட்டது. பிறகு வெகுநாள் வரை இரண்டாவது சிலைக்குச் சரியான ஆசாமி அகப்படவில்லை. நான் நம்பிக்கை இழக்கும் நிலைக்கு வந்து விட்டேன். அப்பொழுதுதான் இந்த நாட்டியக்காரி வந்து சேர்ந்தாள். முதலில் பழக்கம் வைத்துக் கொண்டேன். அவளிடம் பணம் ஏராளமாக இருந்தது. வட நாட்டினருக்கு வழக்கமாக உள்ள கலை ஆர்வம் இருந்தது. தென்னாட்டில் ஒட்டப்பார்க்கும் அவள் மனநிலை என் சோதனைக்கு ஏற்றதாயிருந்தது. முதலில் அவளுக்குத் தமிழ் கற்றுக்கொடுத்தேன். மற்றவர்களுக்கு நம் தமிழ் பாஷை ஒரு போதைபோல. என்னமோ அது அவர்களை மயக்கி விடுகிறது. அவர்கள் மயக்க நிலையில் இருக்கும்போது நாம் சொல்வதையெல்லாம் நம்புவார்கள். அப்படிப்பட்ட சமயத்தில்தான் சிலையைப் பற்றி அவளிடம் சொல்லிவைத்தேன். ஜமீன்தாரைப் போலவே அவளும் ஆவலுடன் இரண்டாவது சிலையை வாங்கிக்கொண்டாள்.

"எனக்கு அவளை ஏமாற்றுவது கடினமாக இல்லை. இரவில் ஒரு பெண்ணைப் பிடித்துக் கூலிக்கு அழச்செய்தேன். முன்பு குழலூதியவனையே மறுபடியும் தூரத்திலிருந்து ஊத வைத்தேன். பக்கத்திலிருந்து அவளை அந்த இரவில் நம்பச் செய்துவிட்டேன். பிறகு அதே நினைவில் குழல் சத்தம் கேட்கும், அழுகை சத்தம் கேட்கும் என்று அவள் நம்பிக்கையோடு படுக்கையில் படுத்திருந்தால் நிச்சயம் அந்த கோரம் வந்ததும் இதெல்லாம் கேட்பதுபோலத்தான் இருக்கும். இதற்குத்தான் மனப்பிரமை என்று பெயர். நம்பிக்கை கொண்ட மனம் செய்யும் கோளாறு இது. இப்போது போய் நீங்கள் ஜமீன்தாரையும் நாட்டியக்காரியையும் கண்டு கண்ணன் குழலூதவில்லை, ராதை அழவில்லை என்று சொல்லிப் பாருங்கள். அவர்கள் கேட்க மாட்டார்கள். ரூபாய் பத்தாயிரம் ஒவ்வொருவரும் கொடுத்து வாங்கிய பொருள், ஸார்! அவர்களுக்குத் தெரியும் அதன் பெருமை!"

ஒரு வகையாக சர்மா தம் பேச்சை நிறுத்திவிட்டு என்னைப் பார்த்தார். எனக்கு எல்லாமே புதிராக இருந்தது. எதை நம்புவது? எதை வேண்டுமானாலும் நம்பலாம். மாயக் கண்ணன் குழலூதலாம்; இல்லை, அது மனப்பிரமையாகவும் இருக்கலாம். எதற்கும் மனதுதான் காரணம்!



பைத்தியக்கார ஆஸ்பத்திரியின் தலைவர்:—நேற்று இரவு இந்தப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து ஐந்து பைத்தியக்காரர்கள் தப்பி ஓடிவிட்டார்கள்.........




சப் இன்ஸ்பெக்டர்:— அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்; நாங்கள் ஏற்கெனவே பதினைந்து பைத்தியக்காரர்களைப் பிடித்து வைத்திருக்கிறோம்!

உங்கள் (தேக) ஆரோக்கியத்தை

பருகுங்கள்

விளையாட்டுக் காரருக்கும் சரி, பலஹீனருக்கும்சரி, போர்ன்-விடா அதிக நன்மையும் அதிக புஷ்டியும் அளிக்கும் அதனால் அதிகசக்தியும்பெறுகின்றனர். குழந்தைகள் அதன் சாக்லேட் வாசனையை விரும்புகின்றனர். காலையிலும் மாலையிலும் ஒரு ளொஸ் சூடான அல்லது குளிர்ந்த பாலில் இரண்டு தேக் கரண்டி அளவு கலந்து பருகவும்.





-ஆரோக்கிய விருக்ஷம்-



CFY-I TAM

காட்பரீஸ்

போர்ன்-வீடா

கால்ஷியமும், ஏ & டி விடமின்களும் நிறைந்தது

காட்பரி — ப்ரை (இந்தியா) லிமிடெட்

தபால் பெட்டி நெ. 1417 பம்பாய், தபால் பெட்டி 251 கல்கத்தா, தபால் பெட்டி 1725 மதராஸ்

ஆசைக் கனவு

பாலு

வாழ்க்கையில் பெரும் பகுதியைப பல ஏற்றத்தாழ்வுகளுக்கு ஈடுகொடுத்துச் சமாளித்துக் கொண்ட ஏகாங்கி நான். இந்த ரீதியில் நானே என்னை அறிமுகப் படுத்திக் கொண்டுதான் மேலே கதையைத் தொடர்ந்து சொல்ல முடியும்போலிருக்கிறது. அநேக கதைகளில் வந்திருக்கிற மாதிரி, பல வருஷங்கள் வட இந்தியாவில் கடினமான ராணுவ வேலையை மேற்கொண்ட வறண்ட மனதுடன் மறுபடி சொந்த ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். சிந்தனைக்குப் பிடிப்பான ருசிகரமான விஷயம் வேறெதுவும் இல்லாத நிலையில், மனம் கடந்து போன நாட்களின் நினைவுகளைக் கிளறி ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தது. நான் பிரயாணம் செய்து கொண்டிருந்த 'திருவனந்தபுரம் பாஸ்ட் பாஸஞ்சர்' போலவே, என் இளம் பிராயத்து நினைவுகளும் இயல்பாகவே மனத்தில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தன.

வானத்தில் இன்னும் சந்திரன் உதயமாகவில்லை. முன்னிருட்டுக் காலமாதலால் வைரங்களை வாரி யிறைத்தாற்போல் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டிருந்தன. அதிக ஒளியில்லாத ஆயிரமாயிரம் நட்சத்திரங்களுக்கிடையே ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒரே ஒரு நட்சத்திரம் என் கவனத்தைக் கவர்ந்தது. இந்த நிலையில் என் மனத்திலும் இனம் தெரியாத பலவித நினைவுகளுக் கிடையே பார்வதியின் நினைப்புமாத்திரம் மனத்தை விட்டு அகலாததாய் இருந்தது!

சாதாரணமாக வறுமைக் குடும்பத்தின் பெற்றோர்களுக்குத் தன்னுடைய ஒரே பிள்ளையின் பராமரிப்பைப் பற்றிய பொறுப்பு மிகவும் கவலையை அளிக்கக் கூடிய ஒரு விஷயம். என் பெற்றோர்களின் இந்தக் கவலையை நிவர்த்தி செய்த புண்ணியத்தை என்னுடைய மாமா ஏற்றுக்கொண்டிருந்தார். தன்னுடைய ஒரே சகோதரியின் பிள்ளையை எப்படியாவது முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நல்லெண்ணத்தில், என் மாமா என்னைப் படிக்க வைத்துக் கொண்டிருந்தார்.

மாமா வக்கீல். சிறிய வயதிலேயே, 'பெரிய வக்கீல்' என்ற பெயரை நிலைநாட்டிக் கொண்டிருந்ததால், அவருக்கு நல்ல வருவாய் இருந்தது.

என்னுடைய மாமாவின் ஒரே செல்வப் பெண்தான் பார்வதி. அவளுக்கு அப்போது ஏழு அல்லது எட்டு வயதிருக்கும். கவிதைகளிலும், காவியங்களிலும் வருகிற தெய்விகக் குழந்தையின் அழகு அவளுடையது. உல்லாசமாக ஆடிப் பாடித் திரியும் பறவையைப்போல் எப்போதும் 'துருதுரு' வென்று வெகு சுட்டிகையாக இருப்பாள் அவள். மற்ற விஷயங்களில் என் கவனம் எப்படியிருந்தபோதிலும், பார்வதியினுடைய பாசல்யம் மாத்திரம் எனக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்திருந்தது.

சதா சர்வ காலமும் எதிலும் ஒன்றுகவே மனத்தைச் செலுத்தி ஒட்டுறவு கொண்டிருந்தோம் நாங்கள். நான் சில சமயங்களில் கோபித்துக் கொண்டாலுங்கூட, வளைய வளைய வந்து என் கோபத்தை மாற்ற முயற்சிப்பாள் அவள். என்னுடைய மாமிகூடச் சில சமயம் பார்த்துக் கண்டிக்கும்படி, நாங்கள் அவ்வளவு அன்னியோன்னியமாக எங்கள் பிள்ளைப் பிராயத்து நாட்களை ஆனந்தமாகக் கழித்துக் கொண்டிருந்தோம்.

அவளைப் பற்றிய என்னுடைய அந்தக் காலத்திய உணர்ச்சிகளை நான் 'காதல்' என்று பைத்தியக்காரத்தனமாகச் சொல்லிவிட மாட்டேன். அதென்னமோ, இனம் விளங்காத ஒரு பாசத்தினால் கட்டுப்பட்ட இரு சிறு குழந்தைகள் எதிர்கால வாழ்வின் போக்கையே லட்சியம் செய்யாமல் பரஸ்பர நட்பில் தங்களை மறந்திருந்த நாட்களாகத்தான் அவற்றை நான் சொல்லமுடியும். ஆனால் அதன் முடிவு.........?

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு மாமா திடீரென்று இறந்துவிட்டார். மொத்தமாகத் தேறிய சொத்தை எடுத்துக் கொண்டு என் மாமி தன் தமையனுடன் தங்கிவிட்டாள். நானும் பார்வதியை விட்டுப் பிரியும்படி நேர்ந்துவிட்டது.

மாமா இறந்த பிறகு எங்கள் குடும்பங்களிடையே தொடர்பு விட்டுப்போயிற்று. பிறகு என் வாழ்க்கையிலும் எவ்வளவோ மாறுதல்கள் நிகழ்ந்துவிட்டன. ஒரு 'நிறு'சாகப் படிப்பை என் சொந்த

ஊரிலேயே முடித்துக்கொண்டு, பெற்றோர்களின் சம்ரக்ஷணைக்காக உடனடியாகக் கிடைத்த ராணுவ உத்தியோகத்தை மேற்கொண்டு வட இந்தியாவிற்குச் சென்றுவிட்டேன்.

2

ரயில் இன்னமும் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. மனம் வெதும்பிய சிந்தனையைத் தடை செய்து, வண்டியின் உட்புறம் பார்வையைச் செலுத்தினேன். மொத்தம் 24 பேர் உட்கார்ந்து கொள்ளவேண்டிய பெட்டியில், இட நெருக்கடியை அதிகரித்துக் கொண்டு அநேகம் பேர் தங்கள் சாமான்கள் சகிதம் பிரயாணத்தை மேற்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரையும் தனித்துப் பார்த்து ஞாபகம் வைத்துக் கொள்ள முடியாத நிலையில்கூட, அந்த வண்டியில் முன்னைக்கு இப்போது ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்ததை நான் கவனித்தேன்.

எனக்கு எதிர்ப்புற வரிசையின் கோடியில் இரு நபர்கள்—ஒரு ஸ்திரீயும் ஒரு புருஷனும் உட்கார்ந்திருந்தார்கள். அலுப்பு மிகுந்த மூன்றும் வகுப்புப் பிரயாணத்தின் சிரமத்தைப் போக்கிக்கொள்ள, கண்யமாகத் தோன்றிய அந்த மனிதரிடம் பேச்சு வார்த்தைகள் வைத்துக்கொள்ளா விட்டாலும்கூட, என்னை மீறிய ஒரு உணர்ச்சியில் நான் அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

அந்தப் பெண்ணுக்குக் கிட்டத்தட்ட இருபது பிராயமிருக்கலாம். யௌவனத்தின் பரிபூரணக் களை அவள் அங்கங்களில் மினுமினுத்துக் கொண்டிருந்தது. திறமை பெற்ற ஓவியன் ஒருவன் செய்த மோகன உருவத்திற்கு அவள் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கினாள். ஆனால் அவளுடைய கணவரென்று நான் நினைத்த அந்த மனிதர்.........?

அவருக்கு நாற்பது வயதுக்குமேல் இருக்கும். வாலிபச் சின்னங்கள் பூரணமாக மறைந்து, முதுமையின் ஓரிரு முத்திரைகள் காணப்பட்டன அவர் முகத்தில். அந்த இள மங்கை அவருக்கு இரண்டாந் தாரமென்பதைக் கண்டு பிடிக்க யாருக்குமே அதிக நேரம் பிடிக்காது. என்னுடைய ஊகத்தை ஊர்ஜிதம் செய்து கொள்ளப் போதுமானதாய் இருந்தது. அம் மங்கையின் மதிமுகத்தில் படர்ந்திருந்த சோக ரேகை.

நான் தொடர்ந்து சிந்தித்தேன். இவ்வளவு அழகு வாய்ந்த பெண்மணிக்கு இவர்தானா கணவராக அமையவேண்டும்?

இப்போது மறுபடி வெளியே நோக்கினேன். சந்திரன் ஆகாயத்தில் தன் பவனியைத் தொடங்கி விட்டிருந்தான். வெள்ளி நிலவினிலே வெளி உலகம் மோகனக் காட்சி யளித்துக்கொண்டிருந்தது. அந்த நிலவுப் போதையில் பார்வதியைப் பற்றிய நினைப்பு மீண்டும் மனத்தில் புகுந்தது. அவளுக்குக் கட்டாயம் விவாகமாகி யிருக்கும். முன்பின் தெரியாத ஒருவனுடன், முதல் தாரமாகவோ இரண்டாந்தாரமாகவோ அவள் தன் வாழ்க்கையைப் பிணைத்துக் கொண்டிருப்பாள். ஆனால் நான்தான் இந்த உலகத்தில் அநாதை!

* * *

மீண்டும் வண்டிக்குள் நோக்கிய போது, அவளைத் தவிர ஏனை எல்லோரும் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். அவளிடம் ஏதாவது பேசினால் கூடத் தவறு இல்லை என்ற எண்ணத்தில் நான்தான் முதலில் பேச ஆரம்பித்தேன்.

"ஏன், உங்களுக்குத் தூக்கம் வரவில்லையா என்ன? ... ஹூம் ... பாவம், வாழ்க்கையில் இவரை மணந்து கொண்டதன் மூலம் நீங்கள் மகத்தான தியாகத்தைச் செய்திருக்கிறீர்கள் .. "

நான் முடிக்கவில்லை; அவள் அளித்த நேரிடையான பதில் என்னைத் திகைக்க வைத்தது.

"நீங்களும் இந்தக் காலத்து விசித்ர பிரம்மசாரி போலிருக்கிறது! இந்தக் காலத்துப் பிரம்மசாரிகளே இப்படித்தான்! யாராவது ஒரு பெண் இரண்டாந் தாரமாகக் கலியாணம் செய்துகொண்டு விட்டால், அவளைத் தியாகி, அது இது என்று உதட்டளவில்தான் அனு



தலைப்பாகைக்காரர்:— உங்களோடு பேசிக்கொண்டே இருந்தால் 'டயர்' போறதே தெரியவில்லை, ஸார்!

தாபப் படுவார்களே தவிர வேறு உருப்படியான காரியம் எதையும் செய்து விட மாட்டார்கள்.''

அவன் சொல்வதின் மகத்தான கருத்தை நான் ஒரு நொடியில் புரிந்து கொண்டு விட்டேன். தன்னுடைய கடமையிலிருந்து தவறி, வெறும் அநுதாபத்திற்காக மாத்திரம் பெண்ணின் மனோநிலையைப் பற்றிய விபரீத வியாக்யானத்தில் இறங்கிவிடும் எண்ணற்ற வாலிபர்களின் நிலையில்தான் நானும் இருக்கிறேன் என்பதை உணர எனக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை.

அவள் தொடர்ந்து மறுபடி பேசினாள். தாலி கட்டின கணவனேதான் குலதெய்வம் என்று பரம்பரையாக ஏற்பட்ட நமது குலஸ்திரீகளின் மகத்தான மனப்பண்பிலே தன்னை நடத்திக் கொண்டவர்கள் எல்லோருடைய பிரதிநிதியாகவும் அவள் பேசுவதாகத் தோன்றியது எனக்கு.

"அதிருக்கட்டும்: ஒரு வயதான மனிதரையும், ஒரு இள மங்கையையும் பார்த்தவுடனே எதற்காக, எதைக் கொண்டு, அவர்கள் தம்பதிகளென நீங்கள் அநுமானிக்கிறீர்கள்? இந்தக் காலத்து வாலிபர்களின் பலவீனத்திற்கே இது ஒரு சூசனை, அல்லவா?''

நிதானமாகத்தான் இதைச் சொன்னாள் அவள். ஆனால் அதில் பொதிந்து கிடந்த ஆழ்ந்த கருத்து......?

"அப்படியானால் நீ அவருடைய மனைவியில்லையா?''

"இல்லைதான்; அவர் என் மாமா. என்னுடைய அத்தை ஒருத்தி இருக்கிறாள். அவளிடம் கொண்டு விடுவதற்காகத்தான் என்னை அவர் அழைத்துப் போகிறார்!'' என்றாள் அவள்.

விஷயத்தை விளக்கமாகத் தெரிந்து கொள்ள மறுபடி நான் சில கேள்விகளைக் கேட்டேன். அதற்கு அவள் அளித்த பதில்......?

அவ்வளவு சீக்கிரம்—சற்றுக்கூட எதிர் பாராத நிலையில்—அவள்தான் என் பார்வதி என்று தெரிந்து கொள்ள அவ்வளவு அதிர்ஷ்டம் பண்ணியிருப்பேன் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை!

என் நிலை அப்போது எப்படியிருந்தது? இருளடைந்த என் வாழ்விலேயே ஒரு ஒளி பட ஆரம்பித்தது போல் இருந்தது.

"பார்வதி!'' என்று செல்லமாக அழைத்தேன் அவளை!

3

'சில்'லென்ற காற்று என் உடம்பில் பட்டதும் நான் விழித்துக் கொண்டேன். ரயில் வண்டி ஏதோ ஒரு ஸ்டேஷனில் திடீரென்று நின்றதன் காரணமாக எனக்கு இந்த விழிப்பு ஏற்பட்டது என்று சொல்ல வேண்டும்.

இவ்வளவு நேரமும் நான் கண்ட கனவை எண்ணி எண்ணி வியந்தேன்.

கிழக்கே வானம் கொஞ்சம் கொஞ்சமாக வெளுக்க ஆரம்பித்ததைப் போலவே என் மனத்திலும் நிஜ உலகத்துப் புனித எண்ணங்கள் தோன்றலாயின.

வண்டி சீர்காழி ஸ்டேஷனில் நின்றது. அந்த மனிதரும் யுவதியும் தங்கள் சாமான்கள் சகிதம் இறங்கினார்கள். என்னுடைய மனக்கிளர்ச்சிக்குக் காரணமாயிருந்த அவர்களை, என் திருஷ்டியிலிருந்து அவர்கள் விலகும் வரை கவனித்துக் கொண்டிருந்தேன். இப்போது அந்த ஸ்திரீயைப் பற்றிய உணர்ச்சியே வேறு விதமாய் இருந்தது. இயல்பாகவே கட்டுப்பாட்டையும் மரியாதையையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு உணர்ச்சிதான் என்னுள் மேலோங்கி நின்றது.

கும்பகோணம் போய்ச் சேர்ந்ததும் பெற்றோர்களை நமஸ்கரித்தேன். வெகு நாட்கள் கழித்துப் பார்க்கும் அம்மாவை முதலில் விசாரித்து விட்டுப் பிறகு பார்வதியைப்பற்றிக் கேட்டேன்.

பார்வதிக்குக் கல்யாணமாகி விட்டிருந்தது!

தன்னுடைய ஒரே பிள்ளை குடியும் குடித்தனமுமாக இருக்க வேண்டும் என்ற பேரவாவில், எனக்காக வேறொரு பெண்ணை நிச்சயம் செய்து வைத்திருந்தாள் அம்மா.

லலிதாவுடன்—என் மனைவியின் பெயர் அது—நான் பிணைந்துக் கொண்ட வாழ்க்கை எனக்கு இனிக்காமற் போகவில்லை. ஆனாலும் சிற்சில சமயம் பார்வதியின் நினைப்பு எனக்கு ஏற்படுவதுண்டு. அந்த நினைப்பை முந்திக் கொண்டு ஒரு விஷயம் எனக்குத் தோன்றும். அந்த விஷயம் இதுதான்:—

மனிதன் சில விஷயங்களைப் பற்றிக் கனவு காண்கிறான். அடைய முடியாத லட்சியங்களை அடைந்து விட்ட மாதிரி தோற்றம் அளிக்கிற அந்தக் கனவுகளிலே ஏதாவது உண்மை இருக்கிறதா? இல்லவே இல்லை. நம்மையும் மீறிய ஒரு நிலையில் அந்தக் கனவுகளிலே ஒரு மாய ஆசை தொத்திக் கொண்டிருக்கிறது. கனவு கலைந்ததும் அந்த ஆசையும் அர்த்தமற்றதாகி விடுகிறது!

காலக்ஷேபம்

காரணம்!

சினிமா முதலாளி (டைரக்டரிடம்):—ஸார், நாம் பாதி எடுத்து இருக்கிறோமே ஒரு படம், அதன் நடுவிலே கதாநாயகனுக்கும் ஒரு முரடனுக்கும் குத்துச் சண்டை நடக்க வேண்டுமே!

டைரக்டர்:—நடக்கட்டுமே......!

சினிமா முதலாளி:— எப்படி நடக்கும்? கதாநாயகன் நேற்றுச் சாயங்காலம் வாழைப் பழத் தோலில் சறுக்கி விழுந்து மூன்று பல், மூக்கு எல்லாவற்றையும் உடைத்துக் கொண்டிருக்கிறான்......படத்தில் அதற்குக் காரணம் காட்ட வேண்டாமா?

★

என்னத்தைச் செய்ய?

கணக்கு வாத்தியார்:—இந்தக் கணக்கின் விடை தப்புடா!......உனக்கு ஒரு கணக்காவது சரியாக வராதுபோல் இருக்கிறதே!

பையன்:—நான் என்ன ஸார், பண்ணுகிறது? அதே கணக்கைப் பத்துத் தடவை போட்டுப் பார்த்தேன். ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு விடை வந்தது. பத்து விடைகளையும் கூட்டிச் சராசரி என்ன வருகிறதென்று கண்டுபிடித்து வந்த 'ஆன்ஸரை'த் தான் போட்டிருக்கிறேன்!

★

சபாஷ்!

ஒருவருக்கு எங்கிருந்தோ ஒரு அழைப்புக் கடிதம் வந்தது. அது கையெழுத்தில் எழுதப்பட்டிருந்தது. படிக்கவே முடியவில்லை. 'டாக்டர்'களுடைய கிறுக்கெழுத்தைப் படித்துப் புரிந்துகொள்ளும் 'கம்பௌண்டர்'களுக்கு ஒருவேளை புரிந்தாலும் புரியலாம் என்று எண்ணி, அவர் அந்தக் கடிதத்தைக் கொண்டு போய் ஒரு 'கம்பௌண்ட'ரிடம் கொடுத்தார்.

உடனே அவன் உள்ளே போய் ஒரு காகிதத்தில் நான்கு சிறிய மருந்துப் பொட்டணங்களை மடித்து எடுத்துக்கொண்டு வந்து, "இரண்டு ரூபாய் எடுங்கள்!" என்றான்.

★

யார் பேசுவது?

ஐந்து வயது சிசு (டெலிபோனில்):—யார், ஹெட்மாஸ்டரா? எங்கப்பா பேசறது ......இன்னிக்கி சிசுவுக்கு லீவ் கொடுத்துடுங்கோ, ஸார்!

★

புத்திமதி

பாடகர்:—ஸார், செக்ரடரியவாள்! கொஞ்சம் தயவு பண்ணனும்! டியூஷன் எல்லாம் நன்றாகத்தான் நடந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் உங்கள் சபாவிலே ஒரு கச்சேரிக்காவது ஏற்பாடு பண்ணப்படாதா?


செக்ரடரி:—இருந்தாலும், இப்பொழுது ஏதோ டியூஷன்களாவது கிடைத்துக் கொண்டிருக்கின்றன. கச்சேரி பண்ணி இருக்கிற டியூஷன்களையும் போக்கடித்துக் கொள்ளுகிறதற்கு வழி பண்ணுறேயும்!

★

அடாடா!

புருஷன் (ஞாபகமறதி புள்ளவர்):—அடியே, இன்று காலையில் நீ இரண்டு மாத்திரைகள் கொடுத்தாயே, அதில் ஒன்று மெதுவாக இருந்தது; இன்னொன்று கல்லைப் போல் இருந்ததே?

மனைவி:—சரியாய்ப் போயிற்று! நான் கொடுத்தது ஒரு மாத்திரை; இன்னொன்று உங்கள் கிஜாரிலிருந்து பிய்த்து விழுந்த பொத்தானல்லவா?—கே. இ. சுப்ரமணியம்.



ஒரு நாதஸ்வர வித்வானின் நூதன யோசனை!

அது கேவர்ட்டாக இருந்தால் நல்லது



● போட்டோ தொழிலாளர்களுக்கும் சரி, அமெச்சூர்களுக்கும் சரி, அவர்களது வெற்றிக்கு சுலபமான வழி — சிறந்த பொருள்களைத் தேர்ந்தெடுத்தலைத்தான். உங்களுக்குத் தேவையான பொருள்களைத் தேர்ந்தெடுக்கும்போது, உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான "கேவர்ட்" என்ற பெயருள்ள பொருள்களையே பார்த்து வாங்குங்கள்.

உரிமைபெற்ற இறக்குமதியாளர்கள்

Allied Photographics Limited பம்பாய் • கல்கத்தா • மதராஸ்

அட பாவமே!

என். என்.

அன்று மாலை ஆபீஸிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வேணுகோபாலன் மனத்தில் உவகையும் உற்சாகமும் பொங்கிக் கொண்டிருந்தன. காரணம் அன்று முதல் தேதி: அவன் சட்டைப் பையில் அந்த மாதச் சம்பளமான நூற்றிருபது ரூபாய் இருந்தது.

வேணுகோபாலனுக்குப் பெற்றோரு மில்லை, நெருங்கிய பந்துக்கள் எவரு மில்லை. சென்னையில் ஒரு பெரிய பாங்கியில் உத்தியோகம் பார்த்து வந்தான். திருவல்லிக்கேணியில் ஒரு வீட்டின் மாடியில் வாடகைக்கு அறை எடுத்துக் கொண்டிருந்தான். ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். இருபத்தெட்டு வயதாகியும் இன்னும் அவன் பிரம்மசாரியாகவே இருந்தான். அவன் மனத்தில் கல்யாணத்தைப் பற்றிய எண்ணமே தோன்றவில்லை.

வழியில் ஒரு கடை வாசலுக்கு முன் கூட்டம் கூடியிருந்ததைக் கண்டான் வேணு. சாமான்கள் ஏலம் போடப்படும் இடம் அது என்பதை அறிந்தவுடன், சுவாரஸ்யமில்லாதவனாக அவன் அந்த இடத்தைத் தாண்டிச் செல்லலானான். பாதி தூரம் செல்வதற்குள் அவன் பார்வை கூட்டத்தில் நின்று கொண்டிருந்த ஒரு நங்கையின் மீது விழுந்தது.

அந்த நங்கையைப் பார்த்தவுடனேயே ஏனோ அவனையு மறியாமல் அவன் கால்கள் மேலே செல்ல மறுத்தன. கண் கொட்டாது அவளையே பார்த்த வண்ணம் கற்சிலை போல் நின்றான்.

பிறைச் சந்திரனை யொத்த நெற்றி, காமன் வில்லைப் பழிக்கும் புருவங்கள், கருநாகம் போன்ற நீண்ட கூந்தல், காதுகளில் ஒய்யாரமாகத் தொங்கும் 'ஜிமிக்கி'கள், அழகுக்கு அழகு செய்வதே போல் அவள் இடது கையில் ஒரு ரிஸ்ட் வாட்ச், பூவேலையுடன் கூடிய ஒரு வெண்ணைப் புடவை—இவ்வளவு அலங்காரங்களுடன் கூடிய அந்த வனிதாமணி வேணுவின் ஹிருதயத்தை நொடிப் பொழுதில் அபகரித்துக் கொண்டு விட்டாள்!

அவ்வளவு தான்: கூட்டத்தில் வந்து சேர்ந்து கொண்டு, என்ன சாமான் ஏலம் போடப்படுகிறது என்பதைக் கவனித்தான் வேணு.

ஏலம் போடுபவன் ஒரு பிடிலை எடுத்துத் தூக்கி எல்லோருக்கும் காண்பித்தான். தந்திகளைத் தட்டி நாதத்தை எழுப்பினான். சபையோரைப் பார்த்து, "அருமையான பிடில், ஸார்!...கிட்டத்தட்ட புதிது என்றே சொல்லலாம்!...ஊம்...... பத்து ரூபாய்!... ..." என்று தொண்டை கிழியக் கத்தினான்.

அந்தப் பிடிலை அவன் எடுத்துக் காண்பித்தவுடனேயே அந்த நங்கையின் முகத்தில் பிரகாசம் ஏற்பட்டதைக் கவனித்தான் வேணு. அவள் வெகு ஆர்வத்துடன் அதையே பார்த்ததை அவன் கண்டு கொண்டான்.

"பதினைந்து ரூபாய்!" என்று கூட்டத்திலிருந்து ஒரு குரல் எழுந்தது.

"இருபது" என்று அந்த அழகி சொன்னதை வேணு ஆவலுடன் கவனித்தான். அந்தப் பிடிலை வாங்கிவிட வேண்டும் என்று அவள் துடிக்கிறாள் என்பதை அவன் உணர்ந்து கொள்ள ஒரு நிமிஷ நேரங் கூடப் பிடிக்கவில்லை.

"இருபத்தைந்து" என்றது அந்தக் குரல் மீண்டும்.

"முப்பது" என்றாள் மங்கை.

"முப்பத்தைந்து"—இது அந்தக் குரல்தான்.

"நாற்பத்தைந்து" என்று ஆத்திரத்துடன் கூறினாள் மடவன்னம்.

"நாற்பத்தைந்து—ஒரு தடவை; நாற்பத்தைந்து—இரண்டு தடவை..." என்றான் ஏலம் கூறுபவன்.

ஒரு நிமிஷம் கூட்டத்தில் நிசப்தம் நிலவியது. "நாற்பத்தைந்து; மூன்றாவது தடவை!" என்று சொல்வதற்காக ஏலம் கூறுபவன் வாயெடுக்கும் சமயத்தில், 'ஐம்பது" என்ற குரல் கிளம்பியது.


வேணு தன் மனத்தைக் கொள்ளை கொண்ட மங்கையை உற்று நோக்கினான். அவள் முகத்தில் ஏனோ திடீரென்று கலக்கக் குறி தோன்றியிருந்ததைக் கண்டான். அவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

"ஐம்பதுக்கு மேல் விலை கூற அவளுக்குச் சக்தியில்லை போலிருக்கிறது. மேலே விலை கூறத் தயங்கிக் கலங்குகிறாள்!" என்று ஊகித்துக் கொண்டான்.

"ஐம்பது; ஒரு தடவை, இரண்டு தடவை ......" என்று ஏலம் கூறுபவன் கன்னத்தில் அறைவது போல் கத்தினான்.

மங்கை தடுமாறிய வண்ணம் தவிப்பதைக் கண்டான் வேணு. இன்னும் ஒரு விநாடி தாமதித்தாலும் அந்த ஆசாமி ஐம்பது ரூபாய்க்குப் பிடிலை அடித்துக் கொண்டு போய்விடுவான் என்பது நிச்சயம். அவ்வளவு ஆசையுடனும் ஆர்வத்துடனும் பிடிலுக்கு நின்று கொண்

அவர் சேவை!



டிருந்த அந்தப் பேதையின் மனத்தில் ஏமாற்றமும் துக்கமும் ஏற்படுவதா?

தன்னிடம் நூற்றிருபது ரூபாய்கள் எதற்காக இருக்கின்றன? தனக்கு அவ்வளவு பணத்திற்கும் செலவு இல்லை அல்லவா? தன் உள்ளத்தைக் கவர்ந்த அந்த நாரீமணிக்கு தனது காதல் பரிசாக அந்தப் பிடிலை வாங்கிச் சமர்ப்பித்தால் என்ன? அவளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும்? — இவ்வளவு எண்ணங்களும் ஒரே நிமிஷத்தில் அவன் மனத்தில் மின்னலைப் போல் தோன்றி மறைந்தன

"அறுபது ரூபாய்!" என்றான் வேணு.

அந்த விலைக்கு மேல் யாரும் கேட்பதாகக் காணோம்! "அறுபது ரூபாய்" என்று கூறியவுடன் அந்தக் காரிகையின் வதனத்தில் ஒரு மலர்ச்சி ஏற்பட்டதை வேணு கவனிக்கத் தவறவில்லை!

"அறுபது ரூபாய்; ஒருதடவை, இரண்டு தடவை, மூன்றாவது தடவை" என்று கூறி ஏலம் கூறுபவன் பிடிலை வேணுவிடம் கொடுத்தான்.

பிடிலுக்குப் பிறகு வேறு எந்தச் சாமானும் ஏலத்திற்கு விடப்படவில்லையாதலால் கும்பல் கலைந்தது. அந்தப் பெண்ணையும் வேணுவையும் தவிர மற்ற யாவரும் சென்று விட்டனர். அவள் அங்கே நின்றது வேணுவிற்கே சற்று ஆச்சரியமாகவிருந்தது. ஏலங் கூறுபவனிடம் அறுபது ரூபாயைக் கொடுத்துவிட்டு, வேணு பிடிலுடன் அந்த மங்கையிடம் சென்று, மிகவும் ஈனமான குரலில், "இதோ, இந்தப் பிடிலைத் தயவு செய்து என் பரிசாக ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்!" என்று சொல்லி, அதை அவளிடம் நீட்டினான்.


அந்த மங்கை திகைப்புடனும் ஆச்சரியத்துடனும் வேணுவைப் பார்த்து, "எனக்கா? பரிசாகவா? எதற்காக?" என்று கேட்டாள்.

"ஆம், பரிசாகத்தான்!... நான் ஆரம்பத்திலிருந்து கவனித்துக் கொண்டுதானிருந்தேன்...... உங்களுக்கு இந்தப் பிடிலை வாங்கிவிட வேண்டுமென்று ரொம்ப ஆவல் என்பதை ஆரம்பத்திலேயே கண்டு கொண்டேன். அந்த ஆசாமி ஐப்பது ரூபாய்க்குக் கேட்டவுடன் உங்களுக்குச் சற்றுக் கலக்கம் ஏற்பட்டதைக் கண்டேன். அதற்குமேல் விலை கூற உங்களுக்குச் சக்தியில்லை என்பதை அறிந்தேன்......எனக்கு இந்தப் பணம் பெரிதல்ல; நீங்கள் தயவு செய்து உங்கள் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்......பிடிலை அங்கீகரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

அந்த மங்கை சிரித்தாள். அந்தச் சிரிப்பில் ஏளனம் கலந்திருந்தது.

"அட கஷ்டமே!......உங்களை யார் இவ்வளவு சிரமம் என் பொருட்டு எடுத்துக் கொள்ளச் சொன்னது? பிடில் என்னுடையதுதான்! ...... நான்தான் அதை ஏலத்திற்குக் கொண்டு வந்தவள்! அதற்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமே என்ற எண்ணத்துடன்தான் நான் யாரோ மாதிரிப் போட்டிக்கு விலை கூறிக் கொண்டிருந்தேன்! ...... அந்த ஆசாமி 'ஐப்பது ரூபாய்' என்று சொன்னபொழுதே, மிகவும் யோசனை செய்து தயக்கத்துடன்தான் கூறினார். நான் அதற்கு மேல் விலை கூறினால், அவர் பேசாமல் பிடிலை எனக்கே விட்டு விட்டுப் போய்விட்டால் என்ன செய்வது என்று பயந்துதான் நான் ஐம்பதுக்கு மேல் விலை கூறாமல் மௌனமாக இருந்தேன்!......இப்பொழுது நீங்கள் அறுபதுக்கு வாங்கியதால் எனக்குத்தான் பத்து ரூபாய் அதிகமாகக் கிடைக்கப் போகிறது!......பிடில் எனக்கு எதற்கு, ஸார்? உங்களுக்கு ரொம்ப தாங்க்ஸ்; நான் வருகிறேன்!" என்றாள் அந்த மாதரசி.

வேணுவின் கையிலிருந்த பிடில் அவனையுமறியாமல் நழுவிக் கீழே விழுந்தது!




நவீன கவர்ச்சிகரமான மாதிரிகள்

ஜெனித் கெடிகாரங்கள் - நேரத்தைப்போல் அவ்வளவு புதுமையாகவும் சூரியனைப்போல அவ்வளவு குறிப்பாகவுமுள்ளன. புத்தம் புதிய மாதிரிகளில் ஏராளமான ஜெனித் கெடிகாரங்கள் தற்சமயம் வந்துள்ளன. கீழே இரண்டு புது மாதிரிகள் படத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன. பேவர்-லூபா டைம்பீஸுகள், கை கெடிகாரங்கள் ஆகியவைகளைப்பற்றிய விவரங்கடங்கிய அட்டவணைக்கு எழுதுங்கள் — அல்லது எங்கள் ஷோரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.

லேடீஸ் வாட்ச் நெ. 1397. *5''' 18* காரட் கோல்டு கேஸ். ஆப்டிக் கண்ணாடி அமைத்தது. ரூ. 520/-

ஆடவர்கள் வாட்ச் நெ. 1143. *7¾" × 10"* ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கேஸ். டைல் கண்ணாடி அமைத்தது. ரூ. 225/-

நெ. 1147. மேற்படி கடிகாரத்தைப் போலவேதான் ஆனால் *18* காரட் கோல்டு கேஸ். ரூ. 486/-



ZENITH
Watches

FAVRE-LEUBA

பேவர்-லூபா & கோ., லிட். பம்பாய் - கல்கத்தா



பாத கமலம்

ஆசிரியர் : கே. ஏ. அப்பாஸ் மொழி பெயர்ப்பு : கே. கணேஷ்

II

நான் சந்திராவைப் பற்றி 'அழகின் சிகரம், இளமையின் எழில், அற்புத ஜோதி' என்று இவ்வாறெல்லாம் வருணிப்பேன் என்று நினைத்தால் நீங்கள் ஏமாற வேண்டியதுதான். அவளை அழகி என்று கூறுவதற்கில்லை. அவள் முகத்தில் பூசிக் கொண்டிருந்த பவுடர்களும் மினுக்கிகளும் கூட அவளை அழகியாக்க முடியவில்லை. ஏதோ சாதாரணத் தோற்றமுடையவளாகத்தான் இருந்தாள். அவள் மூக்கு ஒரு பக்கம் சாய்ந்திருந்தது. அவள் உருவத்திலும் பார்வையிலும் மென்மை காண்பதற்குப் பதில் ஒருவகை முரட்டுத் தோற்றமே தென்பட்டது. அவளது கண்களில் இளமையின் தூய்மைக்குப் பதிலாக, அவளது வாழ்க்கையின் காரணமாக எழுந்த காம விகாரம் இருந்தது. இருந்தும் அவளது உடல் வளைவுகளில் இளமையின் கட்டு இருந்தது. அவளுக்கு வயது இருபதுக்கு மேல் இராது. எனினும் பழக்கமான அறையில் அளவுக்குமீறி விரைவில் வளர்ந்த செடிபோல் இருந்தாள் அவள். அவளது நடையிலும் பார்வையிலும் இளமையின் மிடுக்கு இருந்தது.

அனைவரையும் வணங்கிய பின்னர் சந்திரா சிரமப்பட்டு வருவித்துக் கொண்ட செயற்கை நாணத்துடன் தரையில் உட்கார்ந்தாள். உடனே சேட்டுக்கும் உணர்ச்சி தோன்றியது; தனது குடிகாரக் கண்களால் அவளை விழுங்குவதுபோல் பார்த்துவிட்டு "சந்திராவா நீ? இல்லவே இல்லை. ஒருக்காலும் இருக்காது" என்றான்.

தனது செயற்கை நாணத்தை விட்டு ஒரு போலிச் சிரிப்புச் சிரித்தாள். அந்த அரட்டை மனிதனும் உடனே தொடங்கிவிட்டான்.

"சேட் ஸாஹிப், நீங்கள் நல்ல ஹாஸ்யப் பேர்வழிதான். பலரும் இப்படித்தான்; இவளை யாரென்றே முதலில் புரிந்து கொள்ளவில்லை. பதினாறு வயதில் இவ்வளவு அற்புதமாக ஆடமுடியுமா என்பது எல்லாருக்கும் சந்தேகம். இன்றைக்குப் பாருங்கள், சாக்ஷாத் போலீஸ் கமிஷனர்—இல்லை, இல்லை—கவர்னர் துரை முன்னிலையில் செப்புக் கம்பி முனையில் ஆடிக் காட்டினாள். எல்லோரும் அப்படியே திகைத்துப் போய் விட்டார்கள்!"

"என்ன? கம்பியிலா டான்ஸ்? பிரமாதம்!" என்று ஆச்சரியப்பட்டான் சேட்.

"இதெல்லாம் என்ன சேட் ஸாஹிப்? அவளை வாள் முனையிலே ஆடச் சொல்கிறேன் பாருங்கள்" என்று கூறி உரத்த குரலில் "மஹிதா டேய் மஹிட்டா! அந்த வாளைக் கொஞ்சம் கொண்டுவா!" என்றான்.

அவ்வேலையாள், வாளைக் கொண்டுவரும் பொழுது அவன் முகத்தோற்றம் வருத்தமுள்ளதாக இருந்தது. உறையிலிருந்து மின்னுகின்ற வாள் வெளி வந்ததும் சந்திராவை அனைவரும் ஆச்சரியத்துடனும் பயத்துடனும் நோக்கினர். "இந்தக் கூரிய கத்தியின் முனையிலே இப்பெண்ணால் நிச்சயமாக ஆட முடியுமா?" என்ற ஐயம் அவர்களுக்குத் தோன்றியது.

"என்றைக்காவது ஒருநாள் உங்கள் முன்னால் இவ்வாளின் மேல் நடனம் ஆடிக் காட்டுவாள். பார்க்கத்தான் போகிறீர்கள்!" என்று கூறி வாளை உறையிலிட்டு "இன்றைக்கு முடியாது. அதற்கென்று விசேஷமாக ஒரு நாள் ஏற்படும். வாளின் முனையில் நடனமாடுவது என்றால் லேசான விஷயமா? பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம் இவ்வைபவத்திற்கு அழைக்கப் படுவார்கள். ஏன்? கவர்னர் துரை—இல்லை போலீஸ் கமிஷனர் துரையே விஜயம் செய்தாலும் செய்யலாம்" என்று கூறி மஹிதாவை

நோக்கி "இந்தா, இதை என் பெட்டிக்குள் கொண்டு போய் வை" என்றான்.

ஏது காரணம் பற்றியோ அக்கிழ வேலைக்காரன் முகத்தை மீண்டும் நோக்கினேன். அவன் கண்களில் துக்கம் இன்னும் பிரதிபலித்துக் கொண்டுதா னிருந்தது. ஆனால் அவனது கண்களில் வெட்டப் போகும் ஆட்டைக் கடைசி நேரத்தில் கொல்லாமல், கொல்லும் நாளை ஒத்தி வைத்தால் அது எப்படிச் சிறிது மகிழுமோ அது போல் அவனது முகத்தில் லேசான மகிழ்ச்சி இருந்தது. இல்லை, நானே இப்படித்தான் இருக்கும் என்று கற்பனை செய்து கொண்டேனோ என்னவோ?

அங்கிருந்த அனைவரும் கேட்டுக் கொண்டதன் பேரில் சந்திரா ஆடத் தொடங்கினாள். உயர்தர நாட்டிய ஞானமே அவளுக்குச் சிறிதும் இல்லை என்பது நன்கு தெரிந்தது. ஆட்டத்தில் ஒரு லலிதமோ, அபிநயத்தில் ஒரு சுகமோ, தாளத்திற்கேற்ற காலடியோ கிடையாது. இருப்பினும் அவள் பிறவியிலேயே ஒரு நாட்டியக்காரி போல் தோன்றினாள். அவளது அங்க அசைவுகள் ஒழுங்காக அமைந்திருந்தன. கண்களில் பாவம் ததும்பியது. அவளது காலடிகள் ஒவ்வொன்றிலும் ஒரு சுருதியும் அதன் அசைவுகளில் தாள சுகமும் இருந்தது. அவளது குரலில் பயிற்சி காணவிடினும் அவ்வளவு மோசமாக இல்லை. பிரபல சினிமாப் பாட்டுகளுக்குச் சிற்றின்ப உணர்ச்சியுடன் அபிநயம் பிடித்துக் காட்டினாள். பல திரைப்படங்களின் வெற்றிக்கு இத்தகைய சில்லறை உற்சாக நடனங்களே காரணமாகும். இம்மாதிரியான நடனம் தான் ராமகிருஷ்ணனுக்குத் தேவையாக இருந்தது.

"எப்படி யோசனை?" என்று நாயுடுவைப் பார்த்து ரகசியமாக ராமு கேட்டார்.

"பரவாயில்லை போலிருக்கே!"

"உங்கள் அபிப்பிராயம் என்ன?" இக்கேள்வி என்னை நோக்கிக் கேட்கப்பட்டது. இம்மாதிரி விஷயங்களில் நாயுடு நிபுணர் என்று கருதியதால் நானும் நல்ல அபிப்பிராயம் கூறினேன்.

நாட்டியம் முடிந்ததும் சந்திரா அனைவருக்கும் வெற்றிலை அளித்தாள். தட்டில் நல்ல தொகை சேர்ந்தது. சேட்டின் அருகில் சென்றதும் அவளுக்குப் பத்து ரூபாய் கிடைத்தது. அவன் அவளை மேலே நகரவொட்டாமல் கையால் பிடித்திழுத்துத் தன் அருகிலே உட்கார வைத்துக் கொண்டான். அது அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. அக்குடிகாரனும் அதைப் புரிந்து கொண்டான். ஆமாம், நீ நல்ல வாலிபப் பெண். அதனால் என்னையொத்த கிழட்டு ரசிகர்களிடம் வரமாட்டாய். ஆனால் நீயும் ஒரு நாளைக்கு தோல் சுருங்கிய கிழவியாவாய் என்பதை மறந்து விடாதே!" என்றான். பின்னர் குடி மயக்கத்தில் சிரித்துக்கொண்டே "நீ சந்திராவா? இல்லவே இல்லை! நீ சந்திராவே அல்ல!" என்று ஆரம்பித்தான்.

விஷயம் முற்றிச் சில்லறைச் சச்சரவுகள் தோன்றிவிடுமோ என்று எனக்குப் பயம். இத்தகைய தொல்லைகளிலிருந்து எப்பொழுதும் எனக்கு ஒதுங்கி இருக்கவே விருப்பம். ஆனால் சந்திரா கூறிய பதில்தான் எனக்கு ஆச்சரியமூண்டாக்கியது. "சேட் சாகிப், பிறந்தவர்களெல்லாம் ஒரு நாளைக்கு இறக்க வேண்டியது தான். வாலிபர்களெல்லாம் கிழவர்களாக வேண்டியதுதான். நிச்சயமாக நடக்கப் போகிற ஒரு விஷயத்தைப்

இரண்டும் ஆபத்து!



முதல் சமையல்காரர் :—நன்று சமைக்கத் தெரியவில்லை என்று சொல்லி என்னை வேலையை விட்டு அனுப்பி விட்டார்கள்.

இரண்டாவது சமையல்காரர் :—உன் பாடு தேவலை! நான் நன்றாய்ச் சமைக்கிறதினால் அடிக்கடி விருந்தாளிகள் வருகிறார்கள் என்று சொல்லி என்னையும் அனுப்பி விட்டார்கள்!

பற்றிக் கவலைப்பட்டு ஆவதென்ன!" என்றான். இவ்வாறு கூறியதும் அவனது கண்களில் ஒரு சோகமும், குரலில் ஒரு வெறுப்பும் தென்பட்டது.

பின்னர் சேட் என் பக்கம் திரும்பி "நீங்கள் என்ன சொல்கிறீர்கள் மிஸ்டர்?" என்றான். நான் பதிலளிக்க விரும்பவில்லை. ஆயினும் அவன் திரும்பத் திரும்ப, "என்ன சொல்கிறீர்கள் மிஸ்டர்?" என்று கேட்டுக் கொண்டே இருந்தான்.

"நீங்கள் சொல்வது சரிதான், சேட் சாஹிப்! ஓடிக்கொண்டிருக்கும் யந்திரத்தில் யாரும் கையை விட்டால் கை துண்டித்து விடும் என்பதை எதிர்பார்க்கவேண்டியது தானே!" என்று நானும் சொல்லி வைத்தேன்.

"ஆமாம் நீங்கள் கூறுவது ரொம்ப உண்மை" என்ற சந்திராவின் குரல் எனக்கு ஆச்சரியத்தை அளித்தது.

சேட் எழுத்து அறைக்குள்ளே அரட்டை [illegible]தனிடம் ஏதோ பேசி முடிக்கச் சென்றான். கூரிய மீசை படைத்த வாலிபனுக்கு அப்பொழுதுதான் சந்தர்ப்பம் கிடைத்தது. சந்திராவிடம் ராமகிருஷ்ணரைச் சுட்டிக் காட்டி "சந்திரா, இவர் யார் என்று தெரிகிறதா? இவர்தான் சமது புகழ் பெற்ற பட டைரெக்டர் ராமகிருஷ்ணன்" என்றான்.

அந்த வழிகாட்டியிடம் நாங்கள் ஸ்டுடியோவிலிருந்து வந்தோம் என்று தெரிவிக்க வேண்டாமென்று கூறியிருந்தும் அவன் ராமுவைச் சந்தியில் இழுத்துவிட்டான். அதற்கு மேல் ராமு எங்கள் அனைவரையும் அறிமுகம் செய்து வைத்தார். மற்றவர்களின் கவனம் தன்னிடமிருந்து என் பக்கம் திரும்புவதற்காக "இவருடைய கட்டுரைகள், கதைகளைத்தான் நீங்கள் படித்திருப்பீர்களே?" என்று கூறினார். அதற்கேற்றாற்போல் சந்திராவும் "நிச்சயமாய் அவர் எழுதியதைப் படிக்காதவர்கள் யார்?" என்று ஒரு பச்சைப் புளுகைச் சொன்னாள். பின்னர் கொஞ்சிக்கொண்டே, "என்னைப் பற்றி ஒரு கதை எழுதமாட்டீர்களா?" என்றாள்.



ஆனால் அந்த வாலிபன் தன்னை அனைவரும் மதிக்க வேண்டுமென எண்ணி "என்னை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டாமா? என்னை அமீர் தாக்கூர் என்று அழைப்பார்கள். உங்களைப் போலவே நானும் ஐக்கிய மாகாண வாசி தான். அதோடு நானும் உங்கள் தொழிலில் தான் ஈடுபட்டிருக்கிறேன்" என்றான்.

"ஓஹோ! அப்படியா?...நீங்களும்..." என்று ராமு ஒரு சகா டைரெக்டரை இந்நிலையில் காண நேர்ந்ததை எண்ணிச் சங்கடப்பட்டுக் கொண்டார்.

"ஆமாம்; நானும் ஒரு டைரெக்டர்தான். எனது முதல் படத்திற்கு இப்பொழுதுதான் ஸினேரியோ எழுதுகிறேன். உங்களுக்கு நேரமிருந்தால் கொஞ்சம் வாசித்துக் காட்டி உங்கள் யோசனைகளைக் கேட்க விரும்புகிறேன்" என்றான்.

"நீங்கள் எந்த ஸ்டுடியோவில் வேலை செய்கிறீர்கள்?"

"பொதுவாக நான் பல கம்பெனிகளில் வேலை செய்தேன். பாம்பே டாக்கீஸ், பிரபாத், நியூ தியேட்டர்ஸ், பிரகாஷ் இவற்றிலெல்லாம் இருந்திருக்கிறேன். பின்னர் கொஞ்ச காலம் போராணியும் இருந்தேன். ஆனால் இப்பொழுது இந்தக் கதையை லைசென்சுக்காக விண்ணப்பம் செய்துகொண்டிருக்கும் ஒரு புதுக் கம்பெனிக்காக டைரெக்ட் செய்யப் போகிறேன்."

இதுதான் சாக்கென தாக்கூரும் வேடிக்கை

பாக "நீங்கள் எந்தப் பாகத்தில் நடிக்கப் போகின்றீர்கள்? எங்களையும் மறந்து விடாதீர்கள்" என்றார்.

"ஏன்? சந்திராதான் கதாநாயகி. கதாநாயகனுக்குப் பிருதிவிராஜை அமர்த்துவதா அல்லது மோதிலாலை அமர்த்துவோமா அல்லது வேறு யாராவது ஒரு புதிய ஆசாமியைப் பிடிப்போமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

டாக்டர் எப்பொழுதுமே அதிகம் பேசுவதில்லை. ஆனால் பேசினாலோ கத்தி வெட்டு மாதிரிதான் இருக்கும். "ஏன்? நீங்களே கதாநாயகராக இருக்கலாமே? நன்றாய்ப் பொருத்தமாக இருக்கும்" என்றான்.

டாக்டரும் ஏதாவது கிண்டல் விட்டிருப்பார். ஆனால் அதற்குள் சேட் அந்த அரட்டையுடன் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

"அம்மா சந்திரா, சேட் சாகிப்பை வணங்கு. அவர் இதோ போகப் போகிறார்."

"சந்திரா, நான் இப்பொழுது போய்விட்டு நாளை இரவு வருகிறேன். கண்ணே, என்னை மறக்கமாட்டாயே!" என்று சொந்தரிமை பாராட்டி அவளது கன்னங்களைக் கிள்ளி விட்டு நகர்ந்தான் சேட்.

"மசீட்ட அப்பா, கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாருங்கள்" என்று சந்திரா அழைத்தாள். 'அப்பா' என்றதில் எத்தனை அன்பு பொதிந்திருந்தது! சோகக் கண்கள் கொண்ட கிழவன் வந்து சென்றானோ இல்லையோ, அரட்டை மீண்டும் தொடங்கிவிட்டான். "இவன் எங்கள் பழைய வேலையாள். சந்திரா குழந்தையாக இருந்த காலந்தொட்டு அவளை வளர்த்து வருகிறான். அதனால்தான் சந்திரா அவனை மசீட்டா அப்பா என்று அழைக்கிறாள்" என்று கூறி விஷயத்தை மாற்றுவதற்காக "சரி டைரெக்டர் சாகிப், உங்கள் உத்தரவு என்னவோ?" என்றான்.

ராமகிருஷ்ணன் சுற்றி வளைக்காமல் நேராகவே "உன் மகள் சினிமாவில் நடிக்க வேண்டும். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார்.

"அவளுக்கும் நடிப்பு என்றால் மிகப் பிரியம். ஒரு மாதிரிக்காக உதவிக் கதாநாயகியாக 'சரானி ஹுஸர்' என்ற படத்திலும் நடித்திருக்கிறாள். ஆனால் இப்பொழுது ஏதாவது கதாநாயகி பாகம் கிடைத்தால் தான் அனுமதிப்பது என்று முடிவு செய்திருக்கிறேன்."

"கதாநாயகிப் பாகமா?" என்று கேட்ட ராமகிருஷ்ணன் சிறிது நேரம் மௌனம் சாதித்தார்.

"ஆமாம், அப்படித்தான் முடிவு செய்திருக்கிறேன்" என்று கூறியவன், எங்கே அதனை நம்பி வேண்டாமென்று போய் விடுவார்களோ எனப் பயந்து "அதெல்லாம் மற்றவர்களுக்கு. ஆனால் உங்களை யொத்த உயர்ந்த டைரெக்டர்கள் விஷயத்தில் அப்படி அல்ல. உங்கள் படத்தில் எந்தப் பாகம் கிடைத்தாலும் அவள் அதிர்ஷ்டசாலியல்லவா?" என்றான்.

"சரி, ஏதோ பார்ப்போம். புரடக்ஷன் இலாகா மானேஜரிடம் கூறி ஏதாவது நடிப்புப் பாகம் கொடுக்க முடியுமா என்று பார்க்கிறேன்" என்றார் ராமகிருஷ்ணன்.

பேரம் பேசுவதில் அவருக்கு அதிகப் பழக்கமில்லை. ஆகவே பேரம் பேச வேண்



டிய சந்தர்ப்பம் வந்தால் அவர் தமது உதவியாளரிடம் விட்டுவிடுவது வழக்கம்.

இன்னும் என் மனதில் அக் காட்சி இன்று நடந்தது போல் நன்றாக ஞாபகம் இருக்கிறது. நாங்கள் எழுந்து எங்கள் சப்பாத்துக்களைத் தேடிக் கொண்டிருக்கும் பொழுது சுமார் இருபது அல்லது இருபத்திரண்டு வயதுள்ள ஒரு வாலிபப் பூக்காரன் பூச் செண்டுகளும், கதம்பங்களும், தலையில் பின்னுவதற்காகச் சந்திரப் பிறை போன்ற 'வேணி'களும் நிறைந்த கூடையைத் தலையில் சுமந்து வந்தான். சந்திரா திண்டில் சாய்ந்து கொண்டு கால்களை ஒய்யாரமாக நீட்டிக் கொண்டிருந்தாள். அந்தப் பூக்காரன் அவளையே சிறிது நேரம் உற்றுப் பார்த்து விட்டு உல்லாசமாகப் பாடத் தொடங்கினான்.

'பாபு, பூல்வாலா ஆயா
ஹார் ஔர் கஜ்ரே லாயா'

"எசமான், பூக்காரன் வந்திருக்கிறேன். பூக்களும் மாலையும் கொண்டு வந்திருக்கிறேன்" என்னும் பொருளுடைய பாட்டு அது.

சந்திரா அவனை நோக்கி "ஓடிப்போ, உன் பூ ஒன்றும் எங்களுக்கு வேண்டாம்" என்றாள்.

"உங்கள் முடியில் கூட ஒரு 'வேணி' மட்டுமாவது வாங்குங்கள்."

"நான் ஏற்கெனவே வாங்கி இருப்பது உன் கண்ணிற் படவில்லையா?" என்று தனது பளபளத்த கூந்தலில் வட்டப் பிறை போன்று சுற்றப்பட்டிருந்த மல்லிகைப் பூக்களைக் காட்டினாள் சந்திரா.

"அப்படியென்றால், உங்கள் காலுக்காவது ஒரு 'வேணி' எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கூறிக் கூடையைத் தரையில் இறக்கி வைத்தான். பின்னர் மிக உயர்ந்த 'வேணி' யொன்றைக் கையில் எடுத்தான். அவன் என்ன செய்யப் போகிறான் என்று சந்திரா யோசிப்பதற்கு முன்னாகவே அவள் வலது காலைச் சுற்றிச் சதங்கை போல் சுற்றி விட்டான் அந்தப் பூக்காரன். நாட்டியத் திற்கேற்ற பாதங்கள் அவளிடமிருந்தன. அதற்கு அம்மலர்கள் மேலும் அழகு செய்து எடுத்துக் காட்டின. அந்தப் பையனின் கபடமற்ற செயல் அனைவருக்கும் சிரிப்பை உண்டாக்கிவிட்டது. "டேய், உன் பணத்தையாவது வாங்கிக்கொண்டு போ" என்று சந்திரா கூப்பிடுவதையும் லட்சியம் செய்யாமல் வெட்கத்துடன் போய்விட்டான்.

நாங்கள் வெளியே வந்து வழிகாட்டிக்கு ஐந்து ரூபாய் கொடுத்து அவனை அனுப்பிவிட்டோம். அன்றிரவு நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி அந்யோன்ய சிநேகிதர்கள் என்ற முறையில் நாங்கள் சர்ச்சை செய்தோம்.

"பாருங்கள், இந்தப் பெண்ணுக்கு டாபா அப்பன், மிட்டா அப்பன், டைரெக்டர் அப்பன் என்று குறைந்தது மூன்று அப்பன்களாவது இருப்பார்கள் போலிருக்கிறது."

"இந்த மூன்று அப்பன்களுமே.........." என்று துடுக்காகத் தாலூத் பேசத் தொடங்கினார்.

"அது கிடக்கட்டும். அவள் அரட்டையின் மகளா அல்லது அந்த சோக வேலைக்காரனின் மகளா? யாருடைய பெண் என்று நினைக்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"விபசாரியின் மகள் எப்பொழுதுமே தன் தாயின் மகள் மட்டும்தான்" என்று தனது தத்துவத்தை டாக்டர் அவிழ்த்து விட்டார்.

"என் அபிப்பிராயம் என்னவென்றால் அவள் மிட்டாவின் மகளாகத்தான் இருக்க வேண்டும். அவன் வாலிப காலத்தில் சந்திராவின் தாய்க்கு வேலையாளாகவும் ஆசைநாயகனாகவும் இருந்திருக்கலாம்."

"அப்படியானால் அந்த அரட்டைக்கு அவள் எப்படி உறவாவாள்?" என்று கொலைக் கதைகளிலே கொலைகாரனைத் தேடுவதுபோல் நாங்கள் ஆராய்ந்து கொண்டிருந்தோம்.

"சந்திராவின் வருமானத்தில் பங்கு பெறுவதற்காக சந்திராவின் தாயை ஒப்புக்கு அவன் கலியாணம் செய்திருக்கலாம்."

"அந்தப் போலி டைரெக்டர்?"

"அவன் ஒரு சினிமா லோலனாக இருக்கக்கூடும். எதிர்காலக் கதாநாயகி ஒருத்தியின் வாலைப் பிடித்தால் டைரெக்டர் 'சான்ஸ்' கிடைக்கலாமென்று எண்ணிக் கொண்டிருக்கிறான் போலிருக்கிறது."

"நம் தொழிலில் இப்படி மூன்னுக்கு வந்தவர்கள் எத்தனையோ பேர் இருக்கவில்லையா? அரட்டை அவளுக்குக் கதாநாயகிப் பாத்திரம் ஏற்பாடு செய்துவிடலாமென்று எண்ணித் தாக்கூரை உற்சாகப்படுத்தி வருகிறான் போலிருக்கிறது. பணம் பண்ணுவதற்கு ஏதாவது ஒரு வழி வேண்டாமா?" என்றேன் நான். (தொடரும்)

சுதந்திர மாளிகை

ஜெயமணி

13. மேல் சபைகளின் அமைப்பு

மாகாணத்தின் நன்மையை உத்தேசித்தோ, அல்லது ஸ்தல ஸ்தாபனங்களின் நன்மையை உத்தேசித்தோ தொழில், உத்தியோகம், வியாபாரம் முதலியவை சம்பந்தமாக வரிகள் விதிக்க மாகாண சட்டசபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவ்வாறு விதிக்கப்படும் வரி ஒரு நபருக்கு வருஷத்தில் இருநூற்று ஐம்பது ரூபாய்க்கு மேலே போகக்கூடாது.

எனினும், இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வருமுன் வருஷத்தில் ஒரு நபருக்கு இருநூற்று ஐம்பது ரூபாய்க்கு மேலே மேற்படி வரி வசூலிக்கப்பட்டு வந்திருக்குமாயின், அவ் விஷயமாகப் பார்லிமெண்டு ஒரு முடிவு செய்யும் வரையில் பழைய வரித் தொகையையே நீடித்து வசூலித்து வர மாகாண சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

அந்த வரி சம்பந்தமாக மாகாண சட்டசபை நிறைவேற்றும் சட்டம், அதே வருமான இனங்களை யொட்டிச் சட்டம் செய்யப் பார்லிமெண்டுக்கு உள்ள அதிகாரத்தை எவ்விதத்திலும் கட்டுப் படுத்தாது.

மாகாணங்களுக்கு உதவி: உதவி தேவையாக உள்ள மாகாணங்களுக்கு இந்திய சர்க்காரின் வருமானத்திலிருந்து உதவி மான்யத் தொகை (கிராண்ட்) கொடுக்கப்படும். அந்தத் தொகை கொடுக்கும் விஷயமாகப், பார்லிமெண்டில் சட்டம் நிறைவேறும் வரையில், அந்த மாகாணங்களுக்கு மான்யத் தொகைகளை நிர்ணயிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவரிடம் இருந்துவரும்.

மாகாண சர்க்கார் விதிக்கும் வரிகளைப் பாதிக்கக்கூடிய மசோதாக்களைப் பார்லிமெண்டில் கொண்டு வருவதாயின் அவற்றை யொட்டி முதலில் குடியரசுத் தலைவரின் சம்மதத்தைப் பெறவேண்டும்.

நிதிக்கமிஷன்: இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து இரண்டு வருஷங்களுக்குள்ளாகக் குடியரசுத் தலைவர் நிதிக் கமிஷன் ஒன்றைக் கட்டாயம் நியமித்தாக வேண்டும்.

அதன் பிறகு பிரதி ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறையோ அல்லது அதற்கு முன்போ ஒரு நிதிக் கமிஷனைக் குடியரசுத் தலைவர் நியமிக்கவேண்டும்.

அந்தக் கமிஷனில் தலைவரும் நான்கு அங்கத்தினர்களும் இருப்பார்கள். தலைவர், அங்கத்தினர் எல்லோரையும் குடியரசுத் தலைவரே நியமிப்பார்.

கமிஷனின் அலுவல்களாவன:

1. வரிகளின் மூலம் இந்திய சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானத்தில் அந்தந்த மாகாணங்களுக்கு எவ்வளவு பங்கு உண்டு என்பதை நிர்ணயிக்க வேண்டும்.

2. எந்த முறையை அடிப்படையாகக் கொண்டு மாகாணங்களுக்கு உதவி மான்யத் தொகைகளை நிர்ணயிப்பது என்பதை முடிவு செய்யவேண்டும்.

3. இந்திய சர்க்கார் விதிக்கும் வரிகள் சம்பந்தமாக அவர்களுக்கும் மாகாண சர்க்கார்களுக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அனுஷ்டிப்பதா அல்லது அதில் திருத்தங்கள் செய்வதா என்பதையும் முடிவு செய்யவேண்டும்.

4. இந்தியாவின் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கவேண்டும் என்பதை முக்கியமாகக் கொண்டு குடியரசுத் தலைவர் குறிப்பிடும் இதர விஷயங்களையும் பரிசீலனை செய்ய வேண்டும்.

நிதிக் கமிஷனின் சிபார்சுகளையும் அவைகளை யொட்டி எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கைகளையும் குடியரசுத் தலைவர் பார்லிமெண்டில் சமர்ப்பிக்க வேண்டும்.

கடன் வாங்க உரிமை: சட்டத்தின் மூலம் பார்லிமெண்டு விதிக்கும் எல்லைக்கு உட்பட்டுக் கடன் வாங்க இந்திய சர்க்காருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

சட்டத்தின் மூலம் சட்டசபை விதிக்கும் வரம்புக்கு உட்பட்டு இந்தியாவின் எல்லைக்குள் கடன் வாங்க மாகாண சர்க்கார்களுக்கு அதிகாரம் உண்டு.

பார்லிமெண்டில் நிறைவேறும் சட்டத்துக்கு உட்பட்டு இந்திய சர்க்கார் மாகாண சர்க்கார்களுக்குக் கடன் கொடுக்

கலாம். மாகாணங்கள் வாங்கும் கடன்களுக்கு உத்தரவாதமும் அளிக்கலாம்.

மேல் சபைகள்: மாகாண அசெம்பிளியில் மொத்தம் உள்ள அங்கத்தினர்களில் நாலில் ஒரு மடங்கு பேர்களுக்கு மேலே மேல் சபையில் (கவுன்சில்) இருக்கக் கூடாது. எனினும், மேல் சபையிலுள்ள மொத்த அங்கத்தினர்களின் தொகை நாற்பதுக்குக் குறையக் கூடாது. அதாவது மேல் சபையில் குறைந்தது நாற்பது அங்கத்தினர்கள் இருக்கவேண்டும்.

மேல் சபையிலுள்ள அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு மடங்கு பேர், பார்லிமெண்டின் சட்டத்துக்கு இணங்க முனிசிபாலிடிகள், ஜில்லா போர்டுகள் முதலிய ஸ்தல ஸ்தாபனங்களின் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

பன்னிரண்டில் ஒரு மடங்கு அங்கத்தினர்கள் இந்திய சர்வகலாசாலைகளில் பி. ஏ. பட்டம் பெற்று மூன்று வருஷம் சென்றவர்களாகவும் இந்தியாவில் வசிப்பவர்களாகவும் இருப்போரால் தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

மற்றும் பன்னிரண்டில் ஒரு மடங்கு பேர், செகெண்டரி ஸ்கூலுக்குக் குறையாத கல்வி சாலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருஷங்கள் உபாத்தியாயர் தொழிலில் ஈடுபட்டிருந்திருப்பவர்களால் தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

மூன்றில் ஒரு மடங்குபேர், அசெம்பிளி அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அசெம்பிளி அங்கத்தினரல்லாதாராக இருக்க வேண்டும்.

மீதியுள்ளவர்கள் கவர்னரால் நியமிக்கப்படுவார்கள். இலக்கியம், விஞ்ஞானம், கலை, கூட்டுறவு இயக்கம், சமூதாயத் தொண்டு முதலிய துறைகளில் அனுபவம் உள்ளவர்களே அந்த ஸ்தானங்களுக்கு கவர்னரால் நியமிக்கப் படுவார்கள்.

பப்ளிக் சர்விஸ் கமிஷன்: இந்தியாவுக்கு ஒரு பப்ளிக் சர்விஸ் கமிஷனும் ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு பப்ளிக் சர்விஸ் கமிஷனும் இருந்து வரும்.

எனினும் சில மாகாணங்கள் சேர்ந்து கொண்டு கூட்டாக ஒரே ஒரு பப்ளிக் சர்விஸ் கமிஷனை வைத்துக் கொள்ளலாம். ஆனால், முதலில் அவ்விதம் ஒரே ஒரு கமிஷனை வைத்துக் கொள்ள இணங்குவதாக சம்பந்தப்பட்ட மாகாண சட்ட சபைகளில் தீர்மானம் நிறைவேற வேண்டும். பிறகு, அந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு பார்லிமெண்டில் சட்டம் நிறைவேறும்.

குடியரசுத் தலைவரின் சம்மதத்தைப் பெற்று மாகாணங்கள் தங்களுடைய தேவைகளுக்கு இந்தியா பப்ளிக் சர்விஸ் கமிஷனை உபயோகித்துக் கொள்ளலாம்.

★ ★ ★



செப்டம்பர் 7வ மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபை ஹாலின் ஒரு இனிய வைபவம் நடைபெற்றது. ஸ்ரீ என். டி. ராமஸ்வாமி ஐயங்காரின் செல்வப் புதல்வி குமாரி ஆர். இந்திரா, தான் கற்ற பரத நாட்டியக் கலையை அரங்கேற்றம் செய்து புகழ்மாலை சூட்டிக் கொண்டார். தமிழ் நாட்டில் பரத நாட்டியக் கலை புத்துயிர் பெற்றதற்கு முக்கிய காரண புருஷரான ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் அரங்கேற்ற நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துக் குழந்தைக்கு ஆசி கூறியதோடு, நடன ஆசிரியரான வைத்தீஸ்வரன்கோவில் ஸ்ரீ வி. ஆர். மகாதேவபிள்ளையையும் பாராட்டினார். பெரிய குடும்பங்களைச் சேர்ந்த பல பிரமுகர்களும் நண்பர்களும் உறவினரும் விஜயம் செய்து அரங்கேற்ற விழாவைச் சிறப்பித்தார்கள்.

★ ★ ★

வாழ்விக்க வந்தவர்

எஸ். கண்ணம்மாள்

களைப்பும் அலுப்பும் முகத்தில் தாண்டவமாடக் கூடத்து ஊஞ்சலில் வந்து உட்கார்ந்தார் பரமேசுவர அய்யர்.

“ஏன், என்ன ஆச்சு?” என்று கேட்டுக்கொண்டே வந்தாள் அவர் மனைவி பார்வதி.

“என்ன ஆகிறது? அதிர்ஷ்டம்தான் தெரிஞ்சிருக்கே! கையிலே இரண்டாயிரம் ரூபாய் வேணுமாம்! எப்படி இருக்கு? இங்கே குடும்பத்தை நடத்துவதே பெரும் பாடா யிருப்பது அவர்களுக்கு என்ன தெரியும்? எங்கேயாவது கண்காணாமல் போயிடலாமான்னு தோணுகிறது.”

பார்வதியம்மாளின் முகம் கவலையினால் இருண்டது. ‘அதிர்ஷ்டம் என்கிறதைத் தொட்ட கையாலே, தொடாமல் நமக்கு வந்து பிறந்திருக்காளே இந்தத் ‘துக்கிரி’ப் பெண்! இன்னும் எத்தனை நாளைக்குத் தான் இப்படிக் கவலைப்பட்டு மடியணுமோ? ஒரு கவலையா? இரண்டு கவலையா? அந்தத் தெய்வம் என்னை ஒரு வழியாகக் கொண்டு போயிட்டா நிம்மதியா யிருக்கும்’ என்று வார்த்தைகளை அடுக்கிய பார்வதியம்மாள், மன வேதனை தாங்காது, சில கண்ணீர்த் துளிகளையும் சிந்தினாள்.

சமையலறையில் ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்த ராதையின் செவிகளில் அம்மொழிகள் வந்து விழுந்தன. இத்தகைய வார்த்தைகளை அடிக்கடி அவள் கேட்பது உண்டு என்றாலும், அவள் மனம் ஏனோ, அன்று அதைக் கேட்டவுடன் மிகவும் வருந்தியது.

அவளுக்குத் தன் வாழ்க்கை மீதே எல்லையற்ற வெறுப்பு உண்டாயிற்று. அழகு, படிப்பு, பாட்டு, எது இருந்தாலும் பணமில்லாவிட்டால் உலகில் வாழ்வதே கஷ்டம் என்பது. எவ்வளவு உண்மை! ‘பணம்! பணம், இருந்தால்தான் அதிர்ஷ்டமா? மற்றதெல்லாம் அதிர்ஷ்டமில்லையா?’ என்று எண்ணியது அவள் மனம்.

ஏழை ஸ்கூல் வாத்தியாரின் ஐந்தாவது பெண்ணாகப் பிறந்த ராதை, எப்படி அதிர்ஷ்டசாலியாக இருக்க முடியும்? ஏழ்மையிலேயே பிறந்து, ஏழ்மையிலேயே வளர்ந்து வரும் அவள் பார்ப்பதற்குச் சேற்றில் முளைத்த செந்தாமரை, கடலில் விளையும் முத்து, வானத்தில் தோன்றும் நிலவு, குப்பையில் கிடக்கும் மாணிக்கம் போன்று இருந்தாள். ‘பணமில்லாத’ அவள் வனப்பு எந்த இளைஞன் மனதையும் கவரவில்லை.

முதல் இரண்டு பெண்களை நல்ல இடத்தில் மணம் செய்துகொடுத்தார் பரமேசுவர அய்யர். மற்ற இரண்டு பெண்களுக்கும் ஏதோ சுமாராகச் செய்துகொடுத்தார். கையிலிருந்த சொத்தெல்லாம் தீர்ந்து கடன் வாங்கும் நிலைமை ஏற்பட்டபோதுதான் ராதை பிறந்தாள். ராதை ரொம்பவும் “அதிர்ஷ்டக் கட்டை” என்று அடிக்கடி இருவரும் சேர்ந்து கூறியது, ராதையின் மனதை மிகவும் புண்படுத்தியது.

ராதைக்குக் கீழ் இரண்டு பிள்ளைக் குழந்தைகள் இருந்தனர். எழுபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் இருபது ரூபாய் வீட்டு வாடகை போக, பாக்கி ஐம்பத்தைந்து ரூபாயில் இந்தக் காலத்தில் அவர்கள் வாழ்க்கை நடத்துவதே வெகு கடினமாக இருந்தது. ரேஷன் அரிசி ஐந்து நாட்களுக்குத்தான் வந்தது. மற்ற இரண்டு தினங்கள் பெரியவர்கள் மூவரும் உண்ணாவிரதம் இருந்தனர். வள்ளிக்கிழங்கை வேகவைத்துச் சாப்பிட்டு வயிற்றை நிரப்புவதை வழக்கத்திற்குக் கொண்டு வந்திருந்தனர். கறுப்பு மார்க்கெட்டில் அரிசி வாங்கக் கையில் பணம் இல்லை. கடன் தொல்லைகள் வேறு கொஞ்சம் இருந்தன. ராதையோ, வயதுக்கு மீறி வளர்ந்து பெற்றோர்களைக் கவலைக் கடலில் மூழ்க வைத்தாள்.

இந்த நிலையிலே, வெளியூரிலிருந்த வீட்டின் சொந்தக்காரர் இரண்டு மாதத்தில் வீட்டைக் காலிசெய்துவிட வேண்டுமென்றும் தாங்கள் குடும்பத்துடன் அங்கு வரப் போவதாகவும் எழுதிவிட்டார்.

கடிதத்தைப் படித்த பரமேசுவர அய்யர் அப்படியே இடிந்துபோய்விட்டார். ‘என்ன வேறு இடமா..........?’ என்று எண்ணியதும் அவருக்குத் தலை சுற்றியது!

புதுப் படத்திற்கு ‘க்யூ’வில் நின்று காலேஜுக்காவது வீட்டுக்குச் சென்றுவிடலாம்; காலேஜில்கூட இடம் சம்பாதித்துவிடலாம்! ஆனால் வாடகைக்கு வீடு

தேடுவது லேசான காரியமா? பரமேசுவர ஐயர் நிலை கலங்கிப்போனார்.

தந்தையின் நிலை கண்டு மனம் உருகினாள் ராதை. அவர் கஷ்டங்களுக்கு வழி தேடுவது தனது கடமை என்று தீர்மானித்துக் கொண்டாள் அவள்.

இதற்கு என்ன வழி? வெகு நேரம் சிந்தித்தாள். அவள் வதனத்திலே ஒரு சிறு 'மலர்ச்சி' ஏற்பட்டது.

ஆனால், அது முடியுமா? முடியத்தான் வேண்டும். அதனால் எவ்வளவு பலன் உண்டு!

ஆனால் அதை நினைத்தாலே அவள் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. பின் வேறு வழிதான் என்ன இருக்கிறது?

• • •


ராதையின் மோஹன எழிலிலும், கவர்ச்சி மிகுந்த சாதுர்யப் பேச்சுகளிலும், மதுர கானத்திலும், மனதை, ஏதோ ஓர் உணர்ச்சி வசப்பட்டு, பறி கொடுத்த ஐம்பது வயதான வீட்டுக்காரர் சுந்தரமய்யர், முன்பு ஒருசமயம் கூறிய மொழிகள் அவளுக்கு இப்பொழுது நினைவுக்கு வந்தன. அப்பொழுது அவளுக்கு வயது பதினேழு.

"ராதா! நீ ரொம்ப கெட்டிக்காரிடி! நீ என்னைக் கல்யாணம் செய்து கொண்டு விடேன். நீதான் பிறகு என் சொத்து முழுவதிற்கும் வாரிசு. உன் இஷ்டப்படி, உண்டு, உடுத்தி, அணிந்து நிம்மதியாகப் பணக் கஷ்டமின்றி இருக்கலாம். உங்கள் குடும்பக் கஷ்டம் எல்லாவற்றையுமே நான் தீர்த்து விடுகிறேன். உன் கானமும், சமர்த்தும் எனக்கு ரொம்பவும் பிடிச்சுப் போயிடுத்து. என்ன சொல்றே ராதா!" என்று சிரித்துக் கொண்டே கேட்டார். அவர் வார்த்தைகள் விளையாட்டுப் போல் இருந்தாலும், உண்மையிலே அவர் உள்ளத்தின் ஆழத்தில், அவரையும் அறியாமல், ராதையின் மீது ஒரு பாசம் வளர்ந்து வந்தது. அது அவரை இப்படிக் கேட்க வைத்துவிட்டது.

"போங்கோ, மாமா!" என்று சொல்லிச் சிரித்தாள் ராதை.

"விளையாட்டுக்குச் சொல்லல்லே ராதா; நிஜமாத்தான்" என்றார்.

"என் பாட்டும், பேச்சும், அப்படி உங்களுக்கு ரொம்பவும் பிடித்துப் போச்சன்னு



கல்யாணம்தான்பண்ணிக்கணுமா? நான் தான் எப்போதும் நீங்க பாடச் சொல்ற போதெல்லாம் பாடிண்டு இருக்கேனே! அது போதாதா?" என்றாள்.

அத்துடன் பேச்சை நிறுத்தி விட்டுப் போய்விட்டார் சுந்தரமய்யர். அதுதான் அவளுக்கு இப்பொழுது சட்டென்று நினைவுக்கு வந்தது. 'அதைச் செய்தால் என்ன?' என்று அவள் நினைவு ஓடிற்று.

சுந்தரமய்யர் அதற்குச் சில தினங்களுக்குப் பிறகு, மதுரைக்கு அவர் மூத்த மகனிடம் சென்று விட்டார். அவர் இரண்டாவது மகன் நாகராஜனும் மதுரையிலேயே டாக்டராக இருந்தான். சுந்தரமய்யர் மதுரையிலேயே நான்கு வருஷங்கள் தங்கிவிட்டார். சென்னையிலுள்ள அவர் உறவினர்கள் இடம் இல்லாமல் கஷ்டப்படுவதாகவும் அவர் வீட்டில் இடம் தர வேண்டுமென்றும் எழுதியிருந்தனர். அவர்களுக்காகத்தான் பரமேசுவரய்யரைக் காலி செய்யச் சொல்லி எழுதினார் சுந்தரமய்யர்.

ராதையின் கரங்கள் சில விநாடிகள் நடுங்கின. அடுத்த கணமே அவள் நடுங்கும் கரத்திலிருந்த பேனா, காகிதத்தின் மேல், 'ஜிரீச் ஜிரீச்' என்று உறவாடத் தொடங்கியது. கடிதத்தை எழுதி முடித்தாள். உள்ளத்து உணர்ச்சிகளை அப்படியே கொட்டியிருந்தாள். படித்துப் பார்த்தாள்; பிறகு தானே தபாலில் சேர்த்து விட்டாள்.

• • •


தந்தை பெயருக்கு வந்த கடிதத்தை வாங்கிப் பிரித்தான் நாகராஜன். அவன் விழிகள் ஆச்சர்யத்தால் மலர்ந்தன!

திகைத்துப் போய்விட்டான் நாகராஜன். அவனுடைய தந்தையா அப்படிக் கூறினார்? அதை அவனால் நம்பவே முடியவில்லை! இல்லாவிட்டால் கடிதம் பொய்யா? இருக்காது; பொய்யாக இருக்காது.

அந்தப் பெண்ணை—அந்தத் தன்னலமற்ற நியாயிவைப் பார்த்து ஆறுதல் கூற வேண்டும் போலிருந்தது அவனுக்கு!

"ஐயோ பாவம்!" என்றது அவனுடைய இளகிய உள்ளம்.

கடிதத்தைத் தந்தையிடம் காண்பிக்கவே இல்லை அவன். ஒரு வாரம் சென்றது.



சீமை போய்விட்டு வந்த மாப்பிள்ளை :- நான் சிகரெட் குடித்தால் உங்களுக்குத் தொந்திரவா யிருக்குமோ என்று யோசிக்கிறேன்.

மாமனார் (மாப்பிள்ளையின் மரியாதையை எண்ணி வியந்து):—ஆமாம்! எங்களுக்குச் சிகரெட் புகை பிடிக்காது. இந்த மட்டும் கேட்டுக் கொண்டீர்களே?

மாப்பிள்ளை :—அப்படியானால் இரண்டு பேரும் சிறிது நேரம் வெளியே போங்கள். இப்போது சிகரெட் பிடிக்கப் போகிறேன்!

ஏதோ வேலை விஷயமாகச் சென்னைக்குப் போய்விட்டு வருவதாகக் கிளம்பினான். சுந்தரமய்யரும் அவனோடு சென்னைக்குக் கிளம்பினார்.

"நீங்கள் எதற்கப்பா?" என்றான் நாகராஜன். தர்மசங்கடமாக இருந்தது அவனுக்கு.

"பரமேசுவரய்யருக்கு தங்கக்கிளி போன்ற ஒரு பெண்ணிருக்கிறாள். அவளுக்கு என்மேல் எத்தனை அன்பு தெரியுமோ? அவளைப் பார்த்து ரொம்ப நாளாச்சு; பார்ப்பதற்குத்தான் வருகிறேன்" என்றார் சுந்தரமய்யர்.

ஆத்திரம், ஆத்திரமாக வந்தது நாகராஜனுக்கு. அதை அடக்கிக்கொண்டு, "நீங்கள் நாளைக்குப் புறப்பட்டு வாருங்கள்" என்று அவரிடம் ஏதோ ஒரு வேலையை மேற்பார்வைக்கு விட்டுவிட்டு, மெல்லத் தட்டிக் கழித்துவிட்டுக் கிளம்பிப் போய் விட்டான்.

"பரமேசுவரய்யர் வீடு இதுதானே?" என்று கேட்டான் நாகராஜன். தந்தையும், தம்பிகளும் பள்ளிக்குச் சென்றுவிட்டனர். தாயார் உள்ளே ஏதோ வேலையாக இருந்தாள். ஆதலால் ராதையே எழுந்து வந்தாள்.

"ஆமாம், நீங்கள் யார்?" என்றாள் ராதை.

அவனுடைய மோகன உருவத்தைக் கண் கொட்டாமல் நோக்கினான் நாகராஜன். அவள்தான் ராதையாக இருக்கவேண்டுமென்று அவன் ஊகித்தான்.

“சுந்தரமய்யர் உங்களை வீட்டைக் காலி செய்யச் சொன்னாரமே? ‘ஒன்றரை மாதம் ஆகிவிட்டதே, என்ன ஆச்சு?’ என்று பார்த்து வரச் சொன்னார். நீங்கள் இந்த வீட்டுக்கு வந்து எத்தனை வருஷம் ஆகிறது?”

“ஐந்து வருஷங்கள் ஆகின்றன. அவருக்கு நாங்கள் எழுதிய கடிதம் வந்து சேரவில்லையோ?” என்று கேட்டாள். வேதனை தொனித்தது அவள் குரலில்.

“அது என்னவோ, எனக்குத் தெரியாது. நாங்கள் இன்னும் பதினைந்து தினங்களில் இந்த வீட்டுக்கு வரவேண்டும். அதற்குள் வேறு இடம் பாருங்கள்!” என்று கூறி விட்டுப் போய்விட்டான் நாகராஜன்.

அசோகவனத்துச் சிலைபோல் நின்றாள் ராதை. துக்கம் தொண்டையை அடைத்தது. அவள் கருவிழிகள் பொல பொல வென்று நீரை உதிர்த்தன.

• • •

இரண்டு நாள் கழித்து சுந்தரமய்யரும் நாகராஜனும் வந்து நின்றனர். அவர்களைக் கண்டதும் ராதை ஓடிச் சென்று, “வாருங்கள், மாமா! வாருங்கள்” என்று வாஞ்சை ததும்ப இனிமையான குரலில் சுந்தரமய்யரை வரவேற்றாள்.



ஜட்ஜ்:—இதற்கு முன்பு நடந்த கேஸில் உன்னுடன் சம்பந்தப்பட்டவர்களெல்லாம் இப்பொழுது எங்கே?

திருடன்:—எஜமான்! உங்களையும் என்னையும் தவிர மற்றக் கூட்டாளிகளெல்லாரும் மறு உலகத்துக்குப் போய்விட்டார்கள்!

“என்னம்மா ராதா! எப்படி இருக்கே? சௌக்கியமா? முன்னெல்லாம், நாகராஜன்னு சொல்வேனே, என் இரண்டாவது பிள்ளை, அவன்தான் இவன்” என்று ராதைக்கு அறிமுகப்படுத்தினார் நாகராஜனை. அவள் கண்கள் ஆச்சரிய மிகுதியினால் அகல விரிந்தன. அவனை நன்றாக நிமிர்ந்து பார்த்தாள். அவனும் பார்த்தான்.

“என்ன, அய்யர்வாள் இடம் பார்த்தாச்சா?” என்றார் சுந்தரமய்யர் பரமேசுவரய்யரைப் பார்த்து.

மரண தண்டனையை எதிர் நோக்கி நிற்கும் கைதியைப் போல் நடுக்க மூண்டாயிற்று பரமேசுவரய்யருக்கு. “இல்லை; வீடே கிடைக்கவில்லை. பார்க்காத இடம் கிடையாது” என்றார் தழதழத்த குரலில்.

“உங்களுக்காக நானே இடம் பார்த்து விட்டேன்” என்றார் சுந்தரமய்யர்.

“என்ன.........?” என்றனர் மூவரும் ஏக காலத்தில்!

“நீங்கள் வீட்டைக் காலி செய்ய வேண்டிய அவசியமில்லை. ராதை மாத்திரம் இந்த இடத்தை விட்டுக் கூடிய சீக்கிரம் நாகராஜனோடு மதுரைக்குக் கிளம்ப வேண்டும்! சீக்கிரம் கல்யாண ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பியுங்கள்” என்று சொல்லி நிறுத்தினார் சுந்தரமய்யர். திகைத்து நின்றனர் மூவரும்.

“இந்த மாதக் கடைசியில் ஒரு முகூர்த்தம் இருக்கிறது; அதிலேயே கல்யாணத்தை முடித்துவிடலாம். சம்மதம்தானே ராதா?” என்று கூறி அவளை அன்பு கனிய நோக்கினார் சுந்தரமய்யர்.

அவள் கண்களில் நீர் ததும்பியிருந்தது. ஏன்? நாகராஜனை மணந்து கொள்ள அவளுக்குச் சம்மதமில்லையா?

ராதை மேலே சிந்தனை செய்ய அவளுக்கு இடம் கொடுக்கவில்லை. அடுத்த கணமே, “மாமா! நீங்கள்தான் எங்களை வாழ்விக்க வந்த தெய்வம்” என்று கூறி அவர் கால்களிலே நிரம்பட நமஸ்கரித்தாள்.

• • •

“என்ன இருந்தாலும், ராதை அதிர்ஷ்டசாலிதான்!” என்ற சொல் அவள் தந்தை வாயினின்றும் எழுந்தது. ‘நாம் இன்னும் வீட்டுக்காக அலையாமல் இந்த இடமே கிடைத்ததே, அதுவே பெரிய அதிர்ஷ்டமில்லையா?” என்றாள் பார்வதி அம்மாள். அதைக் கேட்ட ராதையின் மனம் பெருமிதத்தால் விம்மிப் பூரித்தது.


பிரதிதினமும் அதிக
அழகைப்பெற . . .
ரெக்ஸோனாவிலிருக்கும்
கேடில் உங்கள் சருமத்தை
ஆரோக்கியமுடையதாகவும்,
மாசற்றதாகவும், அதிக
அழகுடையதாகவும் செய்யும்.
தினமும் குறைந்த பக்ஷம் இருமுறையாவது ரெக்ஸோனா உபயோகியுங்கள். அதன் கேடில் அடங்கிய நுரையை சருமத்தில் தேய்த்துக் கழுவுங்கள். கேடில் சருமத்தை மிருதுவாக்கி, சுத்தம் செய்து புஷ்டியளிக்கும். புது ஆரோக்கியத்தையும் புது எழிலையும் தரும். ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில் கூட்டிலும், புழுதியிலும், குளிரிலும், காற்றிலும் சருமத்தை மாசற்றதாகவும் வனப்பு வாய்ந்ததாகவும் இருக்கச்செய்யும்.
Rexona
Rexona
Rexona
ரெக்ஸோனா
கேடில் கலந்த சோப் இது ஒன்றே
RP. 48-172 TM

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI செப்டம்பர் 25, 1949 4 அண

REGD. No. M. 4392



S. 110-172 TM